64

QH:41
M24
181236

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

(இஃது)

நமது வடதேசமாகிய ஹிந்துஸ்தான், மாகாணத்தி
லடங்கியிருக்கும் அவுலியாக்களின் காரண
சரித்திரம் அடங்கியது.

தார்குல் அவ்லியா.

(முதற்பாகம்)

(இஃது)

சென்னை ராஜதானியைச் சார்ந்த கஞ்சிமாநகரத்தில்
வாசஞ செய்யும் ஜனூப் ஹாபீஸ் மவ்லவி

காஜா முஹம்மது ஆலீம் சாஹிபு அவர்களால்

ஹிந்தி, பார்ஸி, கிதாபுகளிலிருந்து மொழிபெயர்த்து
தோர்வை செய்தது,

சென்னை தருமசீலன் அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.
ஹிஜ்ரி 1342 வருஷம்.
1924.
(ரிஜிஸ்டர் காப்பிரைட்.)

தாரீகுல் அவ்லியா.

என்ற புத்தகம் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திக்கு எழுதினால் வி. பி. யில் அனுப்பப்படும்.

ச. செ. முஹம்மது முனாயதீன் சாஹிபு மதாசா, மூச்சித் தெருவு, திருவள்ளூர் முகாமு, என்று எழுதவும்.



பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

தாரீகுல் அவ்லியா.

முகவுரை.

அல்லாஹுத்தாலாவைப் புகழ்ந்து அவனது தூதராகிய நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீதும் அவர்கள் கிளையினர் தோழர்கள் மீதும் ஸலாத்தும் ஸலாமும் சொல்லிய பின்னர் அல்லாஹுத்தஆலாவின் றஹ்மத்தை ஆதாவு வைத்தவனுகிய (சென்னை) இராஜதானியைச் சார்ந்த கஞ்சிமாநகரில் வாசஞ்செய்யும் காஜா முஹம்மது ஸல்லம ஹுல்லாஹுத்தஆலா, என்பவன் சொல்லுகிறதாவது யாதெனில், நாயகம் காஜா முஈனுத் தீன் ஜிஷ்தி, றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கலிபாக்களில் நின்றும் வரிசைக்கிரமமாகத் தலைமை வகுத்துவந்த கலீப்பாக்களில் சிலர்களின் ஜீவிய சரித்திரத்தை எழுதவேண்டுமென்று நாடிய போது அதற்குயான் தகுதியற்றவனுயிருந்தும் அவ்வாறு கோர்வை செய்வதின்பேரில் நாயனுடைய கிருபை யென்னை யிழுத்தது. அதற்கு நான் இணங்கினவனுகி ஆண்டவனுடைய உதவிகொண்டு உலமாக்களுடைய கிதாபுகளைப் பார்வையிட்டேன். அவையாவன: றவ்லதுல், அக்தாப், ஸவானிஹே உம்ரிகபீர், ஹயாத்தே பாகி, தஸ் கிரதுல்முஈன், அனீஷுல் அஷ்பாஹ், தவாரிக்ம்ஷாயிகே ஜிஷ்தியா, ஸவானிஹே பந்தே நவாஸ், இவைகளாம். இவற்றினின்றும் மற் றும் அனேக பிரதிகளில் நின்றும் சுருக்கமாக அச்சரித்திரத்தை யெடுத்துக் கோர்வை செய்தேன். அது அல்லாஹுத்தஆலாவின் கிருபையால் கோர்வையில் அழகான போக்கில் அமைந்துவந்தது. அதற்கு (தாரீகுல் அவ்லியா) வென்று பேர்சூட்டினேன். ஆதலால் இதில் யாதேனும் பிழைகண்ட கனவான்கள் சீர்த்திருத்திப் படித் துக்கொள்ள வேண்டுமென்பதே என்கோரிக்கையாகும். அல்லா ஹுத்தஆலா நம்மனைவருக்கும் இருலோகத்திலும் நல்லருள் புரி வானுக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

1-வது பஸல்:

(நாயகம் காஜா குதுப்புத்தீன் ரலியல்லாஹு அன்ஹு வரலாற்றில் பேசும்பிரிவு.)

நாயகம் காஜா குதுபுத்தின், ரஹிமஹுல்லா அவர்கள் ஹல ரத்து நாயகம் காஜா மூஈனுத்தின் ஜிஷ்தி, ரலியல்லாஹு அன்ஹு வின் கலீப்பாக்களில் நின்றும் முதன்மையானவர்கள். அன்னவர் களின் பெயர் குதுபுத்தீன்; பட்டப்பெயர் பகுதியார், என்னும், காக், என்றும் செல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இமாம்ஹுஸைன் ரலி யல்லாஹு அன்ஹுவின் வம்மிசத்தைச் சார்ந்தவர்கள். (அவுஷி) யென்னும் நகரில் பிறந்து வளர்ந்தார்கள். இன்னும் தாஜுத்தீன் மூனவ்வருல் அவ்ஷி, என்பவர்கள் தங்களுக்குரிய (ரிஸாலாவில்) எழுதிருக்கிறார்கள். "நாயகம் காஜா குதுபுத்தீன் ரலியல்லாஹு அன்ஹுவின் தாயார் அவர்களுக்கு (குர்ஆன்ஷரீபில்) நின்றும் மூந் தின 15 பதினேந்து ஜுசுவும் மனப்பாடமாக இருந்தது. அந்நாயகி அவர்கள் அதை மிகுதியாய் ஓதிவருவது வழக்கம் ஆதலின் நாய கம் அவர்கள் தங்கள் தாயார் வயிற்றிலிருக்கும்போதே (விலாயத்து) என்னும் அதிகாரத்தினால் அந்தப்பதினேந்து ஜுசுவையும் அல்லா ஹுத்தஆலாவின் அருள் பெற்று மனப்பாடம் செய்து உயர்ந்த சப்தத்துடன் இரவுகளில் நடுச்சாமநேரத்தில் வயற்றுக்குள் இரு ந்து அழகான இராகங்கொண்டு ஓதிவர்களாயும், (அல்லாஹு, அல்லாஹு) என்னும் திக்ருசெய்தவர்களாயு மிருந்தார்கள். இவைக ளனைத்தையும் வீட்டிலிருப்பவர்களும் பார்த்து ஆச்சரியப்பட்டவர்க ளாக ஆகிவிடுவார்கள். நிற்க நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறக்கப்போகிற நேரம் சமீபித்தபோது அவர்களின் தா யார் ஓர் சொற்பனம்கண்டு விழித்துப் பார்க்கையில் நடுஜாமமாய் இரு ந்தது. அந்நேரத்தில் தமது வீடுமுதல் வானம்வரையில் ஒரே பிரகாச மாக இருப்பதைக்கண்டு நாயனுடைய திருச்சமூகத்தில் முனாஜாத்து செய்யத் தொடங்கினார்கள்: "ஆய் எனது நாயகா! இந்த மறைபொரு ளாகிய இரகசியத்தை எனக்கறி வித்துக்கொடு" என்று துஆ கேட் டார்கள். அவ்வாறு கேட்டு முடிவதற்கிடையில் ஆகாயத்தில் நின்று ஓரு சத்தம் வந்தது. என்னவெனில், "இது நல்ல நேரம்; இப் பொழுது உன் வயிற்றிலிருந்து அழகு சவுந்தரியமுள்ள ஓர் ஆண் குமரன் பிறக்கப் போகின்றது; இக்காரணத்திலேயே பூமி தொ டுத்து ஆகாயம் வரையும் ஒளிப்பிரகாசம் நாலா திசையிலும் பாவி யிருக்கிறது" என்று ஓர் சப்தம் பிறந்தது. அச்சணமே நாயகம்

றலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயாருக்கு பிள்ளைப்பேறு கிற பிரசவவேதனை கண்டதும் நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தார்கள். பிறந்தவுடனே (ஸஜதா) வென்னும் ஷாஷ்டாங்கத்தில் ஆயிருந்து (அல்லாஹு, அல்லாஹு) என்று உயர்ந்த சப்தத்துடன் திக்ருசெய்யத் தொடங்கினர்கள். இவைகளை வீட்டிலிருப்பவர்களும் அந்த (மஹல்லாவில்) குடி இருப்பவர்களும் கண்ணுற்று மிகவும் ஆச்சரிய முற்றார்கள். பிறகு சுபுஹு நேரமாகியபோது அப்பிரகாசம் மறைந்துவிட்டது. றலியல்லாஹு அன்ஹு.

1-வது ஹிக்காயத்து :—இன்னும் தாஜுத்தீன் முனுவ்வருல் அவ்ஷி, தங்களுக்குரிய ஷிரிலாவில் எழுதிருக்கிறது. என்ன வெனில், "நாயகம் காஜா குத்துபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறு பாலகராய் இருக்கும்போதே அவர்களுக்கு மிக்க அற்புதங்கள் வெளியாய் இருந்தன. நிற்க அவர்கள் ஒரு சமாச்சாரத்தை தங்கள் திருவாயினால் சொல்லுவார்களேயாகில் காரியம் அப்படியே வெளியாகும். இப்படிப்பட்ட அற்புதங்கள் அன்னவர்களுக்குச் சிறு பிராயத்திலேயே உண்டாகிருந்தன. அவர்கள், (பர்காவு, இலாகாவைச் சார்ந்த (அவ்ஷ) என்ற ஊரில் பிறந்து வளர்ந்தார்கள். பிறகு அவர்களுக்கு இரண்டரை வயது நிரப்பமான சமயத்தில் அவர்களின் தகப்பனார் (காஜா கமாலுத்தீன் அஹ்மத்) வபாத்தாகி விட்டார்கள். பின்னர் நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் தாயார் அவர்களை வளர்த்து தரியத்து செய்வதில் முயற்சித்து வந்தார்கள். ஆகவே நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு 5 ஐந்து வயது நிறப்பமாகியபோது (ஹலரத்து கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் சிபாரிசைக்கொண்டு அக்காலத்தில் குதுபு, என்னும் ஸ்தானத்தை வகித்திருந்த (மௌலானா அபூ ஹப்ஸ், ரஹிமஹுல்லாஹு அவர்களிடம் நாயகம் காஜா குதுபுத்தீன் ரஹிமஹுல்லாஹு அவர்களை இல்மூகற்பிப்பதற்காக வேண்டிய அழைத்துக் கொண்டுபோய் ஒப்படைத்தார்கள்" என்பதே.

2-வது ஹிக்காயத்து:—ஜவாமிவுல்கலிம், என்ற கிதாப்பில் வருகிறதாவது: "நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நாலுவருடமும் நாலுமாதமும் நிரப்பமாகியபோது அவர்களின் தாயார் அவர்களைப் பள்ளிக்கூடத்தில் ஓதவைப்பதற்காக; வழக்கத்தை அனுசரித்து ஒருபெரிய விருந்துசெய்து முடிந்தபின், தமது (குலாம்) வேலைக்காரன், வெள்ளாட்டி இருவரிடம்

கொஞ்சம் இனிப்பான வஸ்துக்களையும், பணத்தையும் கொடுத்து அவர்களுடன் துணை சேர்த்து அந்த மஹலலாவில் இருந்த ஒஸ்தாது இடத்தில் அனுப்பி வைத்தார்கள். ஆகவே நாயகம், அன்னவர்களோடு போகையில் இடைவழியில் ஒரு பெரிய மனிதர் வந்து அவர்களில் குலாமை நோக்கி, 'ஆதியில் சீதேவி தனத்தைப்பெற்ற இந்தப் பிள்ளையை நீ எங்கே கூட்டிக் கொண்டுப்போய் யாரிடத்தில் படிக்க வைக்கப் போகிறாய்' என்று கேட்க, அதற்கு குலாம், 'இந்த முஹல்லாவிலிருக்கிற (முஅல்லிம்) என்னும் கல்வியைக் கற்பிக்கும் ஒஸ்தாதிடத்தில் கூட்டிக்கொண்டு போகிறேன்' என்று செல்லவும் (கிலுரு அலைஹிஸ்ஸலாம், அவர்கள், 'இப்பிள்ளையை வேறு முஹல்லாவிலிருக்கிற (ஆரிப்காமில்) மௌலானு அபாஹப்ஸ் ரஹ்மஹுல்லாவிடத்தில் கூட்டிக் கொண்டுபோய் இல்மைக் கற்பித்து வையுங்கள்; ஏனெனில் இப்பிள்ளையின் அதிஷ்டம் அவர்களைக்கொண்டே கொளுகினதாய் இருக்கிறது' என்று சொன்னார்கள். கடைசியில் (குலாம்) அவர்கள் சொல்லைக்கேட்டு அவர்களோடு நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவை விட்டு மௌலானு அபாஹப்ஸ்வினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்துவிட்டன. அப்போது அப்பெரியவர் மௌலானுவை நோக்கி 'தாங்கள் என்னைவிண்டி இப்பிள்ளைக்கு அதிக முயற்சி யெடுத்து தரிபியத்துச் செய்யும்படி தங்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன்' என்று சொல்லவும் அதற்கவர்கள் நல்லதென்று ஒப்புக்கொண்டார்கள். பிறகு அப்பெரியவர், அச்சணமே அவ்விடத்தைவிட்டுத் திடீரென்று மறைந்து விட்டார்கள். அப்பால் மௌலானு அபாஹப்ஸ் குலாமை நோக்கி, 'நீ இந்தப் பெரியோரை அறிந்திருக்கிறாயா? வெனக்கேட்க அதற்கவன், நான் அறியேன் என்று சொன்னான். அதன்மேல் அவர்கள் கிலுரு அலைஹிஸ்ஸலாமாய் இருக்குமென்று சொல்லி முடித்தார்கள் றலியல்லாஹு அன்ஹு.

3-வது ஹிக்காயத்து:—ஸனுயில், என்ற கிதாப்பில் வருகிறதாவது: "நாயகம் காஜா குதுபுத்தீன் ரஹ்மஹுல்லாஹு அவர்கள் பள்ளிக்கூடத்தைவிட்டு நீங்குகிற காலம் சமீபித்தபோது, அங்கு நாயகம் காஜா மூனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யாத்திரை செய்தவர்களாக (அவ்ஷ்) என்ற ஊரில்வந்து சேரவும், நாயகம் றலியல்லாஹு அன்ஹு முதன்முதல் ஷெய்கு அவர்களைச் சந்தித்து அவர்களிடமே மூரீதும் பெற்றார்கள்" என்பதேயாம்.

இன்னும், ரியாலுல் ஆரீபீன், என்ற கிதாபில் வருகிறதாவது:

"நாயகம் காஜா முஈனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவ்ஷில் வந்திறங்கித் தரிப்பட்டிருக்கும்போதே நாயகம் காஜா குதுபுத்தின் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் (பைஅத்தும்) கிலாபத்தும் பெற்றார்கள். பிறகு நாயகம் காஜா முஈனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு வெளிநாடுகளுக்குப் போக ஆரம்பித்தார்கள். நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவ்வூரிலேயே சிறிதுகாலம் தரிப்பட்டிருந்து பிறகு சஞ்சாரம் செய்தவர்களாக பகுதாத்வந்து சேர்ந்து ஷேக்ஷிஹாபுத்தீன் சுஹ்றவர்தி, ஷேக் அவ்ஹதுத்தீன் கிர்மானி, இவர்களோடும், இன்னும் இவர்களைப்போன்ற அநேக பெரியோர்களோடும் முலாகாத்து செய்து, அவ்விடத்தில் தங்கள் ஷெய்கு நாயகம் காஜா முஈனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிந்துஸ்தானுக்கு முன்னேக்கி விட்டார்களென்று கேள்விப்பட்டுத் தாங்களும் ஷெய்கு ஜலாலுத்தினுத்தப்ரீஜீ, ரஹிமஹுல்லாஹு என்பவர்களும் அவ்விடத்தைவிட்டுப் பிரயாணமாகி (மூல்தான்) என்னு மூரில் வந்துசேர்ந்து, ஷேக்குபஹாவுத்தின் ஸகரியா, அவர்களைச் சந்தித்து 5 ஐந்து நாள்வரையில் அவர்களிடத்தில் தரிப்பட்டிருந்தார்கள். அந்நாட்களில் மூல்தானுடைய கோட்டையைப் பகைவர்கள் வளைந்து தடித்துக்கொண்டதில், ஊரிலிருப்பவர்களுக்கும் கோட்டையிலிருப்பவர்களுக்கும் நெருக் கடியாயிற்று. அப்போது ஊரின் அதிகாரி காஜா குத்துபுத்தின், றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அவ்வூரார் வந்து அச்சம்திருதற்கு ஆலோவை வேண்டினார்கள். அதற்கு நாயகமவர்கள் ஒரு அம்பு கொண்டுவரச் சொல்லி அதில் ஓதிக்கொடித்து இதை மாலேநேரத்தில் பகைவர்கள் இருக்கும் திசையை நோக்கி விடுங்களென்று ஹாக்கீமிடம் சொன்னார்கள். அந்தப்படி ஹக்கீம் செய்யவும் அந்த இரவிலேயே பகைவர்கள் திடுக்கமிருந்து மிரண்டோடி விட்டார்கள். பின்பு ஊரிலுள்ளவர்கள் ஸலாமத்துப் பெற்றார்கள். நிற்க நாயகம் றலியல்லாஹு அன்ஹு, முல்தானிலிருக்கும்போதே (ஸுல்தானுல் ஆரிபீன், ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுஷகர்) கத்தஸல்லாஹு ஸிர்றஹு அவர்களிடம், பைஅத்தைக்கொண்டு சிறப்படைந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

4-வது ஹிக்காய்த்து:--நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முல்தானென்ற ஊரைவிட்டு யாத்திரை செய்தவர்களாய் திஹ்லிக்கு வந்து சேர்ந்து (கேலுகஹ்ரி) என்ற இடத்தில் வந்திறங்கி யிருக்கவும், அக்காலத்தில் திஹ்லிக்கு சுல்

தானுகவிருந்த ஷம்ஸ்-த்தீன் அல்தமிஷ் அவர்கள். நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இங்கு முன்னேக்கி வந்ததை அல்லாஹுத்தஆலாவுடைய நன்கொடையாக அறிந்து அவர்களை எதிர் சென்றழைத்து ஊருக்குள் வந்திறங்க வேண்டுமென்று வேண்டினர். அப்போது, நாயகம் ஊரைச்சேர்ந்த (மலிக்இஸ்ஸ்-த்தினுடைய (மஸ்ஜிதில்) வந்திறங்கினர்கள். பிறகு காஜீஹமீதுத்தீனுன்னுகூரி, என்று பெயர் விளங்கிய ஷெய்கு முஹம்மது அதா ரஹிமஹுல்லாஹுவும், மற்றும் மஷாயிகீன்களும் நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் சமுகத்தில்வந்து போய்கொண்டிருந்தார்கள். நிற்க சுல்தான் ஷம்ஷ்-த்தீன் அவர்களும், மிகுதமாக நாயகத்தின் கித்மத்தைப்பற்றி யிருப்பதை உயர்வாகப் பாவித்து இருந்தார். பின்பு அவர்கள் அங்கேயே தரிப்பட்டிருந்து, ஜனங்களுக்கு ஹிதாயத்துச் செய்துவந்தார்கள். பின்னர் நாயகம் குத்துபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹலரத் காஜா முஈனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒரு நிருபம எழுதினர்கள். அதின் சமாசாரம் யாதெனில், "நாயகமே! தங்களின் அடிமை அஜ்மீருக்குவர தங்களின் இஜாசத்து தேடுகிறேன்" என்பதாம். அதற்கு நாயகம் காஜா முஈனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், "நம் உயிருக்குள் நெருங்கிய சம்பந்தமிருந்தால் இடம் தூரமாக இருப்பதைப்பற்றிக் கவலையில்லை. அங்கேயே தரிப்படும்; (இன்ஷா அல்லாஹுத்தஆலா) நாங்கள் அங்கு வருகிறோம்" என்று ஜவாபு எழுதியனுப்பினர்கள். பின்னர் காஜா முஈனுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அஜ்மீரை விட்டுப் பிரயாணமாகி திஹ்லிக்குவந்து காஜா குத்துபுத்தீன் றஹிமஹுல்லாஹு இறங்கி இருந்த இடத்திற்குவந்து, இறங்கவும், ஊரிலுள்ள பெரியோர்களிற் சிலர் அங்குவந்து ஷேக் நாயகமவர்களைச் சந்தித்தார்கள். அந்நாட்களில் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுசகர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், காஜா குத்துபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவின் பணிவிடையில் இருந்ததைக்கண்டு, நாயகம் காஜா முஈனுத்தீன் அவர்கள், சந்தோஷத்தோடு இல்ஹாமினால் மட்க்கி மடக்கி, "ஆய் பாபா. பரக்தியார் நீர் ராஜாளிப்பறவையை வலையில் கொண்டுவந்துவிட்டீர். சுவர்க்கத்தில், ஸித்ரதுல் முந்தஹாவென்னும் விருட்ஷத்தில் இருக்கிற பறவையைத் தவிர மற்றொரு பறவையும் அகப்பிடியாது" என்று அவர்களைப் புகழ்ந்து பேசினர்கள். கொஞ்சநாளைக்குப்பிறகு நாயகம் காஜா முஈனுத்தீன் றலியல்லா

ஹ¬ அன்ஹ¬ அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரயாணமாகி அஜ்மீருக்குத் திரும்பும்போது குதுபுத்தீன் தலியல்லாஹ¬ அன்ஹ¬வும் நாயகத்தோடும் புறப்பட்டுப்போக எத்தனிக்கவும், ஊரிலுள்ளவர்கள் அவர்களைப் பிரிகிறதினால் மனம் முறிந்து அழுகிறதற்கு ஆரம்பித்தார்கள். தவிர சுல்தான் ஷம்ஸ¬த்தீன் அல்தமிஷ் பாதுஷாவும் மனம் கலங்கினவராகி, நாயகம் காஜா முஈனுத்தீன் தலியல்லாஹ¬ அன்ஹ¬ அவர்களின், கித்மத்தில் தாழ்மைபோடு ஹாலிராகி, நாயகமே! குதுபுத்தீன் தலியல்லாஹ¬ அன்கு அவர்கள் இவ்விடத்தில்லேயே தரிப்படும்படும்படி செய்யுங்கள்" என்று வேண்டினர். அவ்வாறு வேண்டவும் நாயகம் காஜா முஈனுத்தீன் தலியல்லாஹ¬ அன்ஹ¬ அவர்கள், ஊராருடைய சொல்லுகிணங்கி குதுபுத்தீன் அவர்களை அவ்விடத்திலேயே தரிப்படும்படி உத்திரவு கொடுத்தார்கள். பின்பு அவர்கள், ஹக்கைத் தேடுகிறவர்களுக்கு ஹிதாயத்தென்னும் நேர்வழியைக் காட்டிவந்தார்கள். தலியல்லாஹ¬ அன்ஹ¬.

5-வது ஹிக்காயத்து:—அஸ்ராருல் அவ்லியா, வென்கிற கிதாபில் நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது: "ஒருபோது ஒரு கிழவி நாயகம் காஜா குதுபுத்தீன் தலியல்லாஹ¬ அன்ஹ¬ அவர்கள் திருச்சன்னிதானத்தில் மனம் முறிந்தவளாய் வந்து, நாயகமே! இந்நேரத்தில் பாதுஷாவா யிருக்கிறவர் என்மகன்மீது யாதொரு குற்றமில்லாதிருந்தும் பாடு தூறையேற்படுத்தி அவனைத் தூக்கில்போட்டு அவனுடைய (ரூஹ¬) உடலை விட்டு வெளியாகும்படி செய்துவிட்டார்' என்று சொன்னாள். நாயகம் அதைகேட்டுத் தாங்களும், தாங்கள் சிஷ்யர்களும், போய்பார்க்க, அந்த நாலாபக்கமும், அவனைத் தூக்குப்போடும் எல்லையைச் சுற்றி ஜனங்கள் சூழ்ந்துக் கொண்டிருந்தார்கள். அவ்வாலிபன் பிணமாகக் கிடந்தான். பின்பு நாயகம் குதுபுத்தீன் தலியல்லாஹ¬ அன்ஹ¬ அவர்கள் அந்த மையத்தினிடஞ்சென்று தங்களுடைய கையை அந்த மையத்தின் கழுத்தில்வைத்து அல்லாஹ¬த்தாலாவினிடம், 'யா அல்லாஹ¬, பாதுஷாவானவர் இக்கிழவி மகனே யாதொரு குற்றமில்லாமல் தூக்கிப் போட்டிருப்பாராகில் உன்னுடைய குதரத்தைக்கொண்டு ஹயாத்தாக்கிவை; ஏனெனில் இந்தக்கிழவி இதனால் மனவேதனை அடைந்திருக்கிறாள், என்றார்கள். இவ்வாறு சொல்லி முடியவில்லை; அக்ஷணமே அவ்வாலிபன் ஹயாத்துபெற்றான். உடனே அவன் தூக்கிலிட்டிறக்கித் தாயுடன் வீட்டிற்கு அனுப்பப்பட்டான். அந்

நாட்களில் இதைக்கண்டு ஆயிரணகணக்கான காபீர்கள் இஸ்லா மானர்கள். றலியல்லாகு அன்ஹு.

6-வது ஹிக்காயத்து:--ஒருநாள் கன்னம் வைக்கிற ஒருமனி தன் நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவின் திருச்சமுகத்தில்வந்து தன்னுடைய எளிமைத் தனத்தை சொல்ல ஆரம்பித்தான். இதை அவர்கள் கேட்டு ஒன்றும் சொல்லாமல் வாய்மூடி இருந்தார்கள். அப்பொழுதும் அம்மனிதன் பேரய்யை விட்டுத் திரும்பவில்லை. பிறகு நாயகம் அவர்கள் 'கடினத்தோடு, 'ஆப்மனிதனே! உன்னுடைய வீட்டில் புதைத்து வந்திருக்கிற 140 நூற்றுநாற்பது (அஷ்ரபீ) யென்னும் தங்கைக் காசைச்செலவு செய்து விட்டுவா' வென்று சொல்லவும், அவன் இவ்வார்த்தையைக் கேட்டு அதிக வெட்கமடைந்தவனுப் திரும்பிபோய் விட்டான். அந்நாள் தொடுத்து அவனை யாரும் அந்தஊரில் காணவில்லை.

7-வது ஹிக்காயத்து:—ஸியருல் அவ்லியா,வில் வருகின்றதா வது: "ஒரு தடவை நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவின் வீட்டில் சில சமயங்களில் இரண்டு மூன்று நாள்கள் வரையிலும் கூட ஜீவனம் நடத்துவது கஷ்டமாகி விடுவது சகஜம். அப்பொழுது அவர்களின் மனைவி அடுத்த வீட்டிலிருந்த (ஷர்புத் தீன் பக்கால், உடைய பெண்சாதி யிடத்தில் கடன்வாங்கிச் செலவு செய்து கொண்டிருப்பார்கள். கடைசியில் கடன் 500 ஐ நூறு திர் ஹம்வரையில் ஆகிவிட்டது. ஒருபோது ஷர்புத்தீன் பக்கால்வுடைய பெண்சாதி பெருமையோடு நாயகமவர்களுடைய பிள்ளைகளிடத் தில் 'நாங்கள் உங்களுக்குப் பக்கத்து வீட்டில் இல்லாவிடில் நீங் கள் எங்கிருந்து தின்று எவ்வாறு காலத்தைத் தள்ளுவீர்க'ளென் றுசொன்னாள். இவ்வார்த்தையை நாயகம் அவர்களும் கேட்டு விட்டுத் தங்களுடைய பெண்சாதியை நோக்கிக் கடன் வாங்கக் கூடாதென்று விலக்கி, 'எந்நேரம் புசிப்பதற்காக ஒஜீபனம் தேவை யாய் இருக்குமோ அப்போது எனது (ஹஜரா)வின் மாடத்தில், (பிஸ்மில்லாஹி) சொல்லிக் கையைவிட்டு சொட்டியை எடுத்துச் சந் தோஷமாகச் செலவு செய்யுங்க' ளென்றார்கள். அவ்வாறே அவர் களுக்கு தேவைப்படும்போது மாடத்தில் கையைவிட்டு (காக்) என் கிற சொட்டியைச் சுடச்சுட எடுத்துச் செலவு செய்கிறவர்களா யிருந்தார்கள். இது அனேக காலம்வரையில் ஜாரியாய் நடை பெற்று வந்தது. இதனால் அவர்களுக்கு குதுபுத்தீன் பக்தியர், காகி, என்று பெயர் மஷ்ஹூராகி விட்டது" என்பதாம். இன்

னும், ரியாலுல் ஆரிபீன், என்ற கிதாபில் வருகிறதாவது: (காக்) என்பது சொட்டி; அதில் கொஞ்சம் இனிப்பும் சேர்ந்திருக்கும். ஆகவே இப்பொழுதும் நாயகம் குதுபுத்தின் அவர்கள் (தர்கா ஷரீபிலிருக்கும்) முஜாவிரீன்கள், (காக்) என்ற சொட்டியைச் சுட்டுப் பங்கிடுவது வழக்கமாக விருந்து வருகிறது. றலியல்லாஹு அன்ஹு.

8-வது ஹிக்காயத்து:—ஸியருல் அவ்லியா, வென்கிற கிதாபில் வருகிறதாவது: "ஒருநாள் குதுபுத்தின் பேக், என்பவர் சில நாணயங்களை நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திரு சன்னிதானத்தில் கொண்டுவந்து வைத்தார். அப்பொழுது அவர்கள் அன்னவரை நோக்கி, குறிஞ்சிரிப்புச் சிரித்தவர்களாய், 'நீர் இப்பொழுது கொண்டுவந்திருக்கிற நாணயங்கள் அது நமக்குச் சிறிதும் தேவையில்லை' யென்று கமிமையாகச் சொன்னார்கள். இவ்வார்த்தை அன்னவருக்குக் கடினமாய்த் தோன்றிற்று. அதனல் அவர் அதிக வருத்தமடைந்தவரானர். இச்செய்தி நாயகமவர்களுக்கு (ஷஷபினல்) தெரியவந்தது. அப்போது அவர்கள் அவரை நோக்கி, 'நீர் உட்கார்ந்திருக்கும் விரிப்பை நீக்கிப்பாரும்' என்று கட்டளையிடவும், அவ்வாறே அவர் நீக்கி பார்க்கையில் அதன்கீழ் ஒரு நதி ஓடி அதில் பொன் வெள்ளி முதலிய நாணயங்கள் காணப்பட்டன. இவைகளை (குதுபுத்தீன் பேக்) பார்க்கவே மதிமயங்கி வெட்கமுள்ளவராகித் தம் முடைய சொந்த சுதந்தரங்களை மிகவும் இழிவாயெண்ணி நாயகமவர்களின் பாதத்தில் மோதிவிழுந்து மன்னிப்புத் தேடிக்கொண்டார்", என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

9-வது ஹிக்காயத்து:—இன்னும் அந்த கிதாபில் வருகிறதாவது: ஷஷப்கு பரீதுத்தீன் கஞ்சுஷக்கர ரஹிமஹுல்லா, சொன்னது யாதெனில் "ஒருபோது நான் எனது ஷஷப்கு காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுல்லாவுடன் யாத்திரைசெய்து வருங காலத்தில் அவர்களும் நானும் ஒரு நதிக்கரை யோரம்வந்து சேர்ந்தோம். அங்கு புலியினுடைய பயங்கரம் உண்டாயிருந்தது. மேலும் அந்த ஆற்றைக்கடந்து போகத் தோணியுமிலலாமல் இருந்தது. அப்போது ஷஷப்கு அவர்கள் என்னிடத்தில் 'இக்கரையில் இருந்து அக்கரைக்கு எவ்வாறு போய்ச் சேருகிறது; புலியின் தீங்கைவிட்டும் எப்படி ஈடேற்றம பெறுகிறது' என்று கேட்க, அதற்கு நான் யாதொரு ஜவாபும் சொலைமுடியாமல வாய் மூடியிருந்து விட்டேன். அப்போது அவர்கள் குறிஞ்சிரிப்புச் சிரித்தவர்களாய்

(சூரதுல்இக்லாஸ்) என்னும் குல்ஹுவல்லா, சூரத்தை முழுவதும் ஓதித்தண்ணீரின் பேரில் ஊதினர்கள். அகூணமே அந்த ஆற்றின் தண்ணீர் விலகினதும் போவதற்குப் பாதை யுண்டாயிற்று. பிறகு ஷெய்கு றஹிமஹுல்லாவும் யானும் ஆற்றைக் கடந்தோம்" என்றார்கள். றலியல்லாஹு அன்ஹு.

10-வது ஹிக்காயத்து:—ஜவாமிவுல்கலிம், என்ற கிதாபில் வருகிறதாவது: செய்பித அலாவுத்தீன் பீஜ்னவ்ரீ, யென்பவர்கள் நாயகம் காஜா குதுபுத்தீன் ரஹிமஹுல்லாவின் தர்காஷரீ பிணுள்புகுந்து, ஸியாரத்து செய்வதற்காக வந்து கபுரின் அருகான்மயில் உட்கார்ந்து (ஸலவாத்து) முதலிய ஓதல்களை ஓதிக்கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்து, "ஆய் அலாவுத்தீன! நான் ஜீவித்திருக்குங் காலத்தில் நீர் எனக்குச் சமீபமாய் மரியாதைக் குறைவாய் உட்கார்ந்திருப்பீரா; ஆதலின் (ரவ்லா)வைவிட்டு எழுந்து வெளியிறங்கிப்போம்" என்று ஒரு சப்த முண்டாயிற்று. அவ்வாறு வந்த சப்தத்தை அன்னவர் கேட்டு தாம் மரியாதைக் குறைவாய் நடந்ததின் பேரில் கைசேத முற்றவராகினர். பிறகு அவர் தமது ஜீவகாலம் முழுமையிலும் நாயகமவர்களின் றவ்லாவில் ஸியாரத்துச் செய்ய வந்தால் ஒருபோதும் அங்கு உட்கார்ந்திருப்பதில்லை யென்பதாம் இந்த ஹிக்காயத்தினுல் தெரிகிறது. யாதெனில், அவ்லியாக்களின் (திருறவ்லாஷரீபு) ஸ்தலங்களில் மரியாதைக் குறைவாய் உட்கார்ந்திருப்பதும், வீணன வார்த்தைகளை உபயோகிப்பதும் பெரும் குற்றமான காரியமென்றும் இதற்கு ஸனது ஹதீஸ் மூலமாயும் நன்கு விளங்குகிறது.

11-வது ஹிக்காயத்து:—தஸ்கிறதுல் அஸ்பியா, வென்ற கிதாபில் வருகிறதாவது: (ஒருபோது திஹ்லி, பட்டணத்திற்கு பாதுஷாவாகிய சுல்தான்ஷம்ஸுத்தீன் அல்தமிஷ் என்பவர், பொன்னுணயங்களை ஒரு பையில் நிரம்பப்போட்டுவெகுமதியாக நாயகம் காஜா குதுபுத்தீன், அவர்களின் சன்னிதானத்திற்கு ஒருதூதன் மூலமாய் அனுப்பி வைத்தார். அதைத் தூதன் நாயகமவர்களுக்கு முன்னே வைக்க, அவர்கள் அதை ஒப்புக் கொள்ளாமல் தூதனிடம், "நீ இந்தப் பொன்னுணயங்களை பாதுஷாவினிடம் திரும்பிக்கொண்டு போய்க் கொடுத்து பகீரகிய நான் இதைச் சொன்னதாகச் சொல்" அதாவது: 'நான் உம்மைப் பெரும்பாலும் அன்புள்ள சினேகிதரென்று எண்ணி யிருந்தேன். ஆனல் நீரோ பகையாளியாகி விடப் பிரயத்தினஞ் செய்கிறீர். ஏனெனில் எந்த வஸ்துவை அல்லா

ஹுத்தஆலா நமது வேதவாக்கியமாகிய (குர்ஆன்ஷரீபில்) பகை யான வஸ்துவென்று பகிரங்கமாய்த் திருவுளம் பற்றிருக்கிறானே அந்த வஸ்துவை, தனது அவ்லியாக்களான அந்நபரபுகளுக்கும் பகை யானதென்றும், ஆதலால் அவர்கள் அதன் விருப்பத்தைவிட்டு நீங் கிருக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு வற்புறுத்திக் கட்டளையிட் டிருக்கிறான். ஆன்படியால் நீர் அப்படிப்பட்ட வஸ்துவை என்னி டம் அனுப்புவது ஆகுமென்று எண்ணி யிருக்கிறீரா? அவ்வாறு எண்ணக்கூடாது' என்பதே. இவ்வாறு பாதுஷாவுக்கு பயமுண் டாகும்படி தூதனிடம் சொல்லி அவனை அனுப்பினார்கள். தலியல் லாஹு அன்ஹு.

12-வத் ஹிக்காயத்து:—ஸியருல் அவ்லியா, என்ற கிதாபில் வருகிறதாவது: நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா, "ஒருநாள் நான் நாயகம் காஜா குதுபுத்தீன் தலியல்லாஹு அன்ஹு அவர்களின் திருகபுறுஷரீபில் ஸியாரத்துச் செய்வதை நாடி அவர்களின் தர்கா ஷரீபுனுள் நுழைந்து (ஒலீபாவிருது) முதலிய ஓதல்களை ஓதிக் கொண்டிருந்தேன். அப்படியிருக்கையில் எனக்கொரு எண்ணம் உதித்தது. அதாவது: நாம் இங்கு வந்திருப்பது ஷெய்கு நாயக மவர்களுக்குத் தெரியவந்திருக்குமோ தெரியாதோ என்றெண்ணி யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது (ரவ்லாஷரீபில்) நின்று திடீரென்று (பாரீஸ் பாஷையில்) ஒருபைத்து சொல்லும் சப் தம் வெளிவந்தது. அதன் பொருள்: 'நீர் என்னை இவ்வுலகத்தில் ஜீவித்திருப்பவனைப்போல் அறிந்துகொள்ளும்; நான் விண்ணுலகில் சேர்ந்திருந்தாலும் இன்னும் சடலத்துடன் மண்ணுலகில் உயிர் பெற்றவனாகி வெளிவராணி பேற்றவனையும் இருக்கிறேன்' என் பதேயாம். நான் இந்த பைத்தின் சப்தத்தைக் கேட்டபோது எனது மனதில் ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் நீங்கி மனம் தேறுதல் அடைந்தது" என்று சொன்னார்கள். இந்த பைத்தினுல் தூலாம் பரமாய் அறியப்படுகிறதாவது: "அல்லாஹுத்தஆலாவின் அவ்லி யாக்கள் மவ்தாகி காலஞ்சென்று விட்டாலும் அந்தாங்கத்தில் ஹயாத்துடையவர்களாகவே இருக்கிறார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை" என்பதே. இதற்கு மூலதாரமாக ஓர் ரிவாயத்து வந் திருக்கிறது. அதாவது: [அலா, இன்ன, அவ்லியா அல்லாஹி, லாயமூத்தூன்) பல்யன்கலிபூன, மின்தாரீன், இலாதார்] என்னி: "உண்மையாக அறிந்துகொள், அல்லாஹுத்தஆலாவின் அவ்லி யாக்கள் மவுத்தாகவில்லை; அவர்கள் ஹயாத்தாகவே இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் ஒரு உலகத்தைவிட்டும் இன்னுமொரு உலகத்திற்கு மாற்ற படுகிறார்கள்" என்பதே றலியல்லாஹு அன்ஹு.

13-வது ஹிக்காயத்து:--அட்லஸ் பர்வாயிது, என்கிற கிதாபில்நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது: ஒருநாள் (ஹலரத் அமீர் குஸ்ரு) என்கிறவர்கள், சுல்தானுல் மஷாயிக் நிலாமுத்தீன் அவ்லியா, அவர்களிடத்தில், "நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவுக்கு (காக்) என்றபட்டத்தை எக்காரணத்தைப் பற்றி ஜனங்கள் சொல்லுகிறார்கள்" என்று கேட்கவும், அதற்கு அவர்கள், "ஒருபோது நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு தில்லியில் (ஷப்ஸீ, என்கிற ஹவ்லில், உட்கார்ந்திருக்கிற போது நாலுபக்கத்திலும் அதைச்சுற்றி ஜனங்கள்சூழ்ந்துக் கொண்டிருந்தார்கள். அச்சமையம் குளிர்ந்த தென்றல்காற்று வீசிக்கொண்டிருந்தது. அப்போது அங்கு இருந்தவர்கள் நாயகமவர்களைப் பார்த்து, 'இத்தருணம் (காக்) என்ற சொட்டிகையைத்தால் மிகவும் கிருபையாக இருக்குமென்று சொல்லவும் நாயகமவர்கள், 'எதற்காக'வெனக் கேட்க அவர்கள் ஓஜீபனம் புசிக்கிறதற்காக" வென்றார்கள். பின்பு நாயகமவர்கள் எழுந்து (ஹவ்லில், போய் கைவிட்டுச் சுட்டுக்கொண்டிருக்கும் சொட்டியை வெளிபிலெடுத்து ஜனங்களுக்குக் கொடுத்தத் தாங்களும் புசித்தார்கள். அக்காரணத்தால் அதுமுதல் அவர்களுக்கு (காக்) என்று பட்டமுண்டாகிவிட்டது" என்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு

14-வது ஹிக்காயத்து:--அனீஸுல் அஷ்பாஹ, என்ற கிதாபில் வருகிறதாவது: ஒருநாள் (கவ்வால்) என்னும் சங்கீதவித்வான், நாயகம் குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சன்னிதானத்தில்வந்து ஒரு பைத்தைச்சொன்னன். அதின் பொருள் என்னவெனில் "அல்லாஹுத்தஆலாவுக்காக (தஸ்லீம்) அதாவது தலைசாய்குதல் என்னும் வாளினால் வெட்டபபட்டார்களே அவர்களுக்கு காலமடங்களிலும் கைபில் நின்றும் வேறு ரூஹு உண்டாயிருக்கிறது" என்பதே. இந்தப் பொருளடங்கிய பைத்தை நாயகமவர்களிடம்கேட்டு (வஜ்தென்னும், ஆசையின் பூரிப்பான நிலைமை அவர்களுக்கு உண்டாயிற்று. மூன்றுநாள்வரையில் கவ்வால் அந்த பைத்தை, மடக்கிமடக்கி ஓதிக்கொண்டிருந்தான். நாயகமவர்கள் தங்களின் நிலைமைகளே அறியாதவர்களாகவே யிருந்தார்கள். ஆயினும் தொழுகையின்வக்து வந்திடுமானால் ஹுஷாராகி தொழுகையில் மீண்டு தொழுதுவிட்டு அந்த பைத்தைச் சொல்லும்படி சொல்லி

அதே ஹாலில் ஆப்பிடுவார்கள். இவ்வாறே நான்கு நாளாயின. ஆகவே நான்காவது இரவில் வேறு நிலைமை உண்டாகி நாயகமவர்களுடைய தலை காஜீ ஹமீதுத்தீன் நாகூரி, றஹ்மதுல்லாஹ் உடைய வீராவிலும், கால் ஷெய்கு பத்துருத்தீன் கல்னவீ, றபியல்லாஹ் அன்ஹு வின் மடியிலுமாயிருந்தன. அப்போது காஜி ஹமீதுத்தீனுன் நாகூரீ, அவர்கள் இந்த நிலைமைகளைப் பார்த்துவிட்டு நாயகமவர்களிடத்தில் இனிமேல் கலீபாக்களில் நின்றும் யார் தங்கள் ஸ்தானத்தில் உட்காருகிற தென்றார்கள். அதற்கு நாயகமவர்கள் எனது ஷெய்கு மார்களில் நின்றும் கிடைத்த (கிர்கா) என்னும் பரிவட்டத்தையும் ஆசாவையும் முஸல்லாவையும், நஅலெலன்னும் பாதாகைஷியையும் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுசக்கர் அஜ்மதஹ்னிவுக்கு சேர்த்துவிடுங்கள் என்று சொல்லியபின் அவர்கள் ரூஹ் அல்லாஹ் தஆலாவினிடம் சேர்ந்துவிட்டது. அந்நேரம் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுசக்கர் றலியல்லாஹ் அன்ஹு, ஹான்ஸீ, என்கிற ஊரில் இருந்தார்கள். நிற்க நாயகமவர்கள் வபாத்தான விஷயத்தை அவர்கள் கனவில் தெரிந்து அவ்விடத்தை விட்டுப்பிரயாணமாகி மூன்றாவது நாள் திஹ்லிக்கு வந்துசேர்ந்து தங்களுடைய திருமுகத்தை நாயகமவர்களின் திருக்க புருஷரீபில் புரட்டி. அதேநாளில் அவர்கள் வலிப்பத்தின்படி கிர்கா பரிவட்டத்தை யணிந்து முஸல்லாவின்மேலில் தொழுதுவிட்டு தங்களின் ஷெய்கினுடைய முபாரகான மகாமில் தரிப்பட்டு கலிபா ஸ்தானத்தை வகித்துவந்தார்கள். றலியல்லாஹ் அன்ஹு.

15-வது ஹிக்காயத்து:—மத்னுபுத்தாலிபீன், என்கிற கிதாபில் வருகிறதாவது நாய்கம் காஜா குதுப்புத்தீன் றலியல்லாஹ் அன்ஹு (ரபீயுல் அவ்வல்) மாதம் (14) பதினாலாந் தேதி வபாத்தானார்கள். (இன்னு, லில்லாஹி, வயின்னு, யிலைஹி, ரூஜி ஊன) அப்போழுது அங்கு இருந்தவர்கள் (கபன்) முதலான சாமான்களை ஆயித்தம் பண்ணினார்கள். அக்காலத்தில் பாதுஷா வாகவும், காயகம் அவர்களுடைய முரீதாகவும், சொந்த கலீபாவாகவு மிருந்த சுல்தான் மஹ்மூதீன் அல்தமிஷ், இன்னும் அநேக கலீபாக்களும், மற்ற மஷாயிக்கீன்களும், திஹ்லியி லிருந்தவர்களும். அங்கு ஹாலிருயிருந்தார்கள். அந்த வக்தில் (காஜா அபூஸயீது) றலியல்லாஹ் அன்ஹு, "நாயகம் குதுபுத்தீன் றலியல்லாஹ்வின் வலிய்யத்தாவது: 'என்னுடைய ஜனாஸாவில் தொழுவிப்பவர் ஹராமான காரியத்தில் தலையிடாதவராயும், அஸ்ருடை சுன்னத்துகள், தக்பீர்

கஷ்ரீமா, இவைகளே விடாதவராயும், ஒருபோதும் பர்லான தொழுகையை விடாதவராயும் இருக்கவேண்டும்; இந்த ஸிபத்தைப் பெற்றவரைத் தாம் என்னுடைய ஜனஸாவின் பேரில் தொழுவிக்க வேண்டும்' என்பதாம்" என்று சொன்னார்கள். இந்த ஸிபத்தைப் பெற்ற எந்த மனிதனும் அங்கில்லை. கடைசியில் கருமம் வருத்த மாகியபோது, நாயகமவர்கள் கலிபாவான சுல்தான் ஷிம்ஷபத்தின் பாதஷா அவர்கள் 'நான் அந்த ஸிபத்தைப் பெற்றவன்' என்று சொன்னார்கள். பின்பு அவர்களே இமாமாக நின்று தொழுதுவிட்டு, "நான் இந்த நிலைமையை யாருக்கும் வெளிப்படுத்தக் கூடாதென்றே இருந்தேன். என்றும் நாயகமவர்களுடைய வஸிய்யத்தின்படி நிறைவேற்றும் பொருட்டு ஜனஸா தொழுகையை அதாச் செய்தேன்" என்றார்கள். பின்பு சுல்தான் (ஸந்தக், பெட்டியின் ஒரு பக்கத்தைப் பிடித்துத் தூக்கவும், மற்ற மூன்று பக்கத்தில் நின்று அவ்லியாக்களும், மஷாயிகீன்களும், உலமாக்களும், மற்றவர்களும் தூக்கினார்கள். பின்பு எல்லோரும் அப்பெட்டியைக் கொண்டுவந்து தபன் செய்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு வயது (52) ஐம்பத்திரண்டு. அவர்கள் ரவ்லா ஷரீப் திஹ்லியிலிருந்து (7) ஏழுமைல் தூரத்தில் இருக்கிறது. அவர்கள் ரவ்வாவில், மனிதர்கள் எப்பொழுதும் ஸியாரத்து செய்து வருகிறார்கள். இன்னும், அனீஸுல் அஷ்பாஹில், வருகிறதாவது: "நாயகம் காஜா குதுபுத்தின் தலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ (533) ஐநூற்றிமுப்பத்திமூன்றும் வருடம் (ரபீயுல் அவ்வல்) மாதம் (14) பதினாலாந் தேதி திங்கட்கிழமை வபாத்தானார்கள்; அவர்களின் (கப்றுஷரீபு) பழைய திஹ்லியிலிருக்கிறது" என்பதே. இன்னும் தாரீக் மஷாயிக் ஜிஷ்தியா, இக்பாறுல் அக்பார், என்கிற கிதாபுகளில் வருகிறதாவது: "அவர்களுடைய கபுறுஷரீப் (ஹவ்புஷ் ஷம்ஸீயின் சமீபத்தில் இருக்கிறது" என்பதே. தலியல்லாஹு அன்ஹு.

2-வது பஸல்:

(சுல்தான் ஷம்சுத்தீன் பாதஷாவின் வரலாற்றைப் பற்றிப் பேசும்பிரிவு.)

ஸியருல் ஆரீபின், ரவ்லதுல் அக்தாப், மத்லூபுத்தாலிபீன், ஸவானிஹே உம்ரி, இவைகளில் வருகிறதாவது: "சுல்தான் ஷம்சுத்தீன் பாஷா, திஹ்லிபட்டணத்திற்கு அரசராக இருந்து ஹலரத்து காஜா

நரியகம் காஜா குத்புத்தீன் அவர்கள் தர்கா ஷரீப் நக்ஷா

قطب الدين بختيار دهلوي

درگاه حضرة خواجه



இது

ஹல்ரத் குதுப்புத்தீன் பக்தியார் தர்கா ஷரீபு.

ஹலரத் நாயகம் குதுபுத்தீன் பக்தியார் அவர்கள் தர்கா ஷரீபின் மேல்பாகத்தில் யாதொரு கட்டடமும் இல்லை. தவிர கபுர் ஷரீபை சுற்றி பத்தடி உயரத்துக்கு மாத்தினால் அழகிய விசித்திர வேலைகள் செய்த கிராதி நிருமித்து கபுரின்மேல் போர்வை யிட்டிருக்கிறது. இது பஹதர்ஷா என்பவரால் கட்டிட்டமாக்கி அதன் சுற்றுப் பாகங்களில் லங்குமர்மர் என்னும் வெள்ளைக்கற்கள் பதித்திருக்கிறது. மேற்படி தர்காவின் கிழக்கு பாகமாயிருக்கிற வாயிலை ஸ்லீம்ஷா, என்பவரின் காலத்தில் பூசப்கான், என்பவர் நிருமித்தார். மேற்கு பாகமாயிருக்கிற வாயிலை ஷாஆலம் பாதுஷா, காலத்தில் ஷாக்கிர்கான், என்பவர் நிருமித்தார். இங்கே வருடந்தோறும் சபி உல் அவ்வல் மாதம் பிறை (14) பதினலில் உருஸ் அலங்காரம் வெகு ஆடம்பாத்துடன் நடந்தேறி வருகின்றது. அந்த காலத்தில் வெகு ஜனங்கள் வந்து கூடுகிறார்கள்.

குதுபுத்தீன் ரஹீமஹுல்லாவினிடம் மூரீதாகி கலீபா ஸ்தானத்தையும் வகித்து, கிர்காவென்னும் பரிவட்டத்தையும் அணிந்து ரியாலத்து முஜாஹதத்து, முதலான வணக்கங்களில் நேரத்தை கழித்து, ரசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களால் நல்ல அருளையும் பெற்று அநேக அவுலியாக்களைத் தெரிசித்து அவர்களிடம் பைலு அருளையும் அடைந்தார். இது நிற்க இவர் அரசாட்சி செய்யுங் காலத்தில் பொது ஜனங்களிடத்தில் நன்மை பராரட்டிவந்தது மன்றி அவர்களுக்கிடையில் நீதத்தைத் தவரவிடாமல் சரிவரச் செலுத்தி ஏழைகளுக்கு பிரதினமும் தர்பாரிலிருந்து ஏராளமாக தர்மதானங்கள் செய்து அக்காலத்திலிருந்த நம்மார்க்க அனுசாரிகளான உலமாக்கள், மஷாயிகீன்கள், சூபியயாக்கள், இவர்களை மிகவும் நேசித்து அன்னவர்களின் உத்திரவுக்கிணங்கிய மார்க்கத்தின் நீதிநெறிகளை ஒழுங்காய் நடத்திவந்தார். இவர் தம் காலத்திலேயே (திஹ்லீ) பட்டணத்திலுள்ள பொதுஜனங்களின் நன்மையை உத்தேசித்து எக்காலத்திற்கும் பயன்படக்கூடிய நன்மையான காரியத்தைச் செய்துவைக்க வேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டு அங்கு வசிக்கும் ஜனங்கள் தண்ணீருக்காக வெயிற்காலங்களிற் படும்பிரயத்தனத்தை நீக்கும்பொருட்டு, அவரது எண்ணம் முற்றிலும் நாயகம் ரசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத்கொண்டு நிறைவேறினதும், அவர்களின் உத்திரவின்படி நாயகம் காஜா குதுபுத்தீன் ரஹீமஹுல்லா அவர்களின் றவ்லாஷரீபிற்கு அடுத்துள்ள ஸ்தலத்தில் பாரியஹவ்லு என்னும் குளம் ஒன்று கட்டிவைத்திருக்கிறார். அதில் இன்றளவும், தண்ணீரை ஜனங்கள் உபயோகித்து வருகிறார்கள். அதற்கு (ஹௌளல்ஷம்ஷி) என்று பேர் விளங்கி விருகிறது. இதைச் சார்ந்த மஸ்ஜிதன் அருகாண்மையில் கட்டப்பட்டிருக்கிற மனரா எல்லையில்தான் இம்மஹானும் அடங்கியிருக்கிறார். இந்த ஹவ்லின் விபரங்களில் சிறிது பின்னல் எழுதப்படும். இன்ஷா அல்லாஹுத்தஆலா.

1-வது ஹிக்காயத்து:—மத்லூபித் தாலிபீன், என்ற கிதாபில் 6 ஆறுவது பிரிவில் வருகிறதாவது: "நாயகம் காஜா குதுபுத்தீன் றஹமதுல்லா சொல்லுகிறதாவது: 'சுல்தான் ஷம்ஸுத்தீன் பாதுஷாவானவர் நல் நிர்ணய முடையவராயும், இபாதத்தைக் கொண்டு அல்லாஹுத்தஆலா அளவில ஆசை பூண்டவராயும், சூபியாக்களின் பாதையை தொடர்ந்ததாகி, இரவுகளில் நித்திரையை விரும்பாமல் வணக்கத்திலேயே விழித்தவராய்க் காணப்படுவார். தவிர

அவருக்கு ஒருகால் நித்திரை மிகைத்துவிட்டாலும் உடனே பதறி விழித்துத் தண்ணீர் எடுத்து ஒலுவு செய்துகொண்டு முசல்லாவில் உட்கார்ந்து இபாதத்தில் பராக்காகிவிடுவார். ஆனால் அவருக்கு தமது தர்பாரில் எத்தனையோ அடிமைகளிருந்தும் அவர்களை இரவு காலங்களில் விழிக்கச் செய்யாமல் தண்ணீர் முதலியவற்றிற்கும் தாமே எழுந்துபோய்த் தண்ணீர் எடுத்து ஒலுவு செய்து கொள்ளுவாரே அல்லாது தமது வேலைக்காரர்களை எழுப்பச்செய்து அவர்களுக்கு வருத்தம் கொடுக்காதவராயிருந்தார். இது நிற்க இவர் இரவு காலங்களில் இராஜ உடுப்புகளை மாற்றிக் கேவலமான உடுப்புகளை அணிந்துகொண்டும் தமது மருமத்தை வெளிவிடாத ஒரு மனிதனையும் தம்முடன் கூட்டிக்கொண்டு ஒரு பையில் ரூபாவை எடுத்து வெளிப்புறப்பட்டு அங்குள்ள ஒவ்வொரு முஸ்லீம்களின் வீட்டு வாயில்களில் சென்று அவர்களின் நிலைமையைக் கேட்டறிந்து அவர்களுக்குச் செலவுக்குப் போதுமான ரூபாய்களைக் கொடுத்து திரும்பி அங்கிருக்கும் மஸ்ஜிதுகள், இபாதத்து செய்யக்கூடிய ஸ்தலங்கள், கடைபஜார் முஸாபர்கானு, இவைகளுக்கும் வந்து, ஆங்காங்கு அகப்பட்ட பகீர்கள், மிஸ்கீன்கள், வழிபோக்கு முஸாபர்கள், இவர்களுக்கும் செலவுக்குப் போதுமான ரூபாய்களைக் கொடுத்துவிட்டு வந்து விடுவார். மறுநாள் காலையில் தர்பாரில் வந்து உட்கார்ந்ததும் அதிகாரிகளை நோக்கி இராக்காலங்களிற் பசியினால் முகம்வாடி இருப்பவர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து விடுங்களென்று கட்டளை யிடுவார். அவ்வாறே அவர்கள் போய் அழைத்து தர்பாருக்குக் கொண்டுவந்து விடுவார்கள். அப்போது சுல்தான் அவர்களில் ஒவ்வொருவராயும் தம் முன்னால் கூப்பிட்டு அவர்களின் நிலைமைகளைக் கேட்டுச் செலவுக்குப் போதுமான ரூபாவை அவர்களிடம் கொடுத்துப் பிறகு அவர்களை நோக்கி ஆப் ஜனங்களே! நீங்கள் எதையும் உண்மையாக கூறுங்கள்; செலவுகளுக்கு இல்லாமல் நீங்கள் வறுமைப்பட்டாலும், அல்லது உங்களுடைபேரில் யாராவது அனியாயம் கொடுமையாராட்டினாலும் உடனே நமது தர்பாரில்வந்து அவைகளைச் சரிவர நீங்கள் தெரிவப்படுத்துங்கள்; பயப்படவேண்டாம்; நான் நீதங்களைச் சரிவரச் செலுத்துவதற்காகவேண்டியே எனது வாயிலின் பேரில் பிரமாண்டமான ஆராச்சிமணியைச் சங்கிலியில் மாட்டிவைத்திருக்கிறேன். எவனுக்கேனும் மற்றொருவன் அனியாயம் செய்திடில், துன்பமுற்றவன்வந்து அந்த மணியை அசைத்தால் நான் அச்சதம் கேட்டுத்

வந்து அவனுக்குள்ள துன்பத்தைநீக்கி நீதத்தைச் செய்துவைப் பேன்: அப்படி நான் செய்யாவிடில் (கியாமத்து) நாளையில் உங்களது வழக்குகளைத் தீர்ப்புச்செய்யும்படி எனக்குக் கட்டளையிடப்படும். அவ்வாறு இடப்பட்டால், அப்போது நான் உங்களுக்கிடையில் தீர்ப்புச்செய்யச் சக்திபெறுதவனுப் விடுவேன் எனச்சொல்லி அவர் அரசாட்சி செய்யுங்காலம் முழுமையிலும் செவ்வையாகவே நீதத் தைச் செலுத்தி வந்தார் என்பதே. இந்தச் செய்தியை றிவாயத் துச் செய்கிற நாயகம் காஜா குதுபுத்தீன் றஹ்மதுல்லா மேலும் சொல்கிறதாவது: "சுல்தான்சம்ஸுத்தீன் பாதுஷா இப்படிச்சொல் வதின் கருத்து யாதெனில், அன்னவர் இந்தப் பொறுப்புகள் யாவற் றையும் இவ்வுலகத்திலேயே தம்மைவிட்டு நீக்கி கொள்ளவும், கிய மத் நாளையில் தாங்கக்கூடாத சங்கடங்கள் வந்து நேரிடாமல் மீட்சிபெருவதை உத்தேசித்துமே அவ்வாறு அனுபவங்கள் செய் யப்பட்டால் மூனே வந்து அவற்றைத் தெரிவிக்கும்படி ஜனங்களை வற்புறுத்தி வந்தார். இன்னும் கியாமத் நாளையில் ஜனங்கள் அவ ரைக் குறைகூறுதிருக்கும் பொருட்டும் அவ்வாறு செய்து கொண் டார். இதனால் அவர்கள் ஒருகால் கியாமநாளையில் தம்மைத் தொ டர்ந்து குறைகூறினபோதிலும், நான் இதற்குமுன் துன்யாவில் இவ் விஷயங்களைக் குறித்து என்னிடம் வந்து தெரிவிக்கும்படி சொல்லி யும் நீங்கள் அதைக் கவனிபாமல் இருந்து விட்டீர்கள் எனச் சொல் லித் தம்பொருப்பை நீக்கிக்கொள்ள இடமுண்டாகும் என்பது அவர் அபிப்பிராயம் இதனாலேயே அவர் அல்லாஹுத்தஆலாவுக்குப் பய ந்து நீதம் சரியாய் செலுத்தி வந்தார். றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—மிப்தாஹுத்தாலிபீன், என்ற கிதாபில் வருகிறதாவது: "சுல்தான்ஷம்ஸுத்தீன் அல்தமிஷ், பாதுஷாவன வர், காருணிபம் உடையவராயும், விலாபத்துப் பெற்றவராயு மிருந் தார். ஆகவே அன்னவர் ஒரு வேலையைப்பற்றி ஆலோசிக்கும்பொ முது அதுதமக்கு விளங்காவிடில் நாயகம் றசூல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்களைக் கனவில் தெரிசித்து அவர்களின் உத்தர வுக்கிணங்கி அந்த வேலையைப் பூர்த்தி செப்பவராக இருந்தார். அப் படி இருக்கையில் ஒருநாள் அவருடைய மனதில் திடீலி, பட்ட னத்தில், கல்லகண்ணீர் எங்கு வெளிபாகிறதோ அங்கு ஒரு பெரிய ஹவ்ல் (குளம்) தோண்டிக் கட்டிவைக்க வேண்டும்; ஏனெனில் இவ்வாறு பொது ஜனங்களின் நன்மைபைக் கருதிச் செய்துவைப் பது ஆகிறத்திற்கு ஒரு பெரிய நன்மையாகும் என்று அவருக்கு ஓர்

எண்ணம் உண்டாயிற்று. அதே எண்ணத்துடன் சில தினங்கள் கழிந்தன. இது நிற்க ஓரிரவில் அதே எண்ணத்துடன் நித்திரை செய்யும்போது சொற்பனத்தில், நாயகம் ரசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுடன் குதிரையின்மீதேறிச் சவாரி செய்தவர்களாய், இப்போது அந்த ஹவ்லு கட்டப்பட்டிருக்குமிடத்தில் வந்திறங்கக் கண்டார். அப்போது பாதுஷா அதே எண்ணத்துடனே அங்குவந்து நின்றார். அவரை நாயகம் ரசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்களுக்கு முன்பாகக்கூப்பிடவும் அவர் ஓடிவந்து அவர்களின் பாதத்தில் மோதிவிழுந்து முத்தமிட்டு நின்றார். அப்போது ஹலரத்து ரசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவரை நோக்கி நீர் எந்தவிடத்தில் ஹவ்லுக் கட்டவேண்டுமென்ற எண்ணங் கொண்டிருக்கிறீர் என்று கேட்க, அதற்கவர் எந்தவிடத்தில் தாங்கள் ஹவ்லு கட்டும்படி கட்டளையிடுகிறீர்களோ அவ்விடத்தில் தான் கட்டச் சித்தமாயிருக்கிறேன் என்றார் இவ்வாறு சொல்லி முடிக்கிறதற்கிடையில் அவர்களுடைய குதிரையானது தன் இரண்டு காலினால் கீழே ஓர் அடி அடித்ததும் அதில் நின்று தண்ணீர் பொங்கி ஓடிற்று. அப்போது நாயகம் ரசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், அவரை நோக்கி பாதுஷாவே! நீர் இதே இடத்தில் (ஹவ்லு) குளம்தோண்டும்; இது மகிமை வாய்ந்த ஓர் ஸ்தலம்; இங்குநல்ல தண்ணீரும் வெளியாகும்" என்று சொல்லி முடித்தார்கள். இதே இடத்தில் தான் (குமூஸ்) கட்டிடம் ஒன்று ஞாபகச் சின்னத்திற்காக உயரமுள்ளதாய்க் கட்டப்பட்டிருக்கிறது நிற்க, அவர் இந்தக் கனவுகண்டு விழித்து சுபுஹு நேரமாகியபோது தமது தர்பாரிலிருந்த மந்திரிகளையும் மற்றும் அதிகாரிகளையும் வரவழைத்து அந்தவிடத்தைக் கண்டு பிடிப்பதற்காகப்போக எத்தனித்து, அந்த எல்லைபோய்ச் சேர்ந்து பார்க்கையில், அங்கு குதிரைக் காலடிப்பட்டு அவ்விடத்தில் ஓர் ஊற்றுக் கண் ஓடிக் கொண்டிருந்தது. அப்போது சுல்தான் இதுதான் கனவில் நான் கண்ட இடமாகுமென்று சொல்லி அங்கு அதே நேரத்தில் கடக்கால் தோண்டி ஹவ்லுகட்ட ஆரம்பித்துச் சிக்கிரத்தில் கட்டி முடிவாக்கி வைத்தார். இந்த ஹவ்லு ஆச்சரியமுற்று மகிமை வாய்ந்த ஓர் ஸ்தலமேயாகும். இந்த விடத்தில் காலையிலும் மாலையிலும் நாயகம் கிலுரு அலைஹிஸ்ஸலாம் வந்து போய்க்கொண்டேயிருந்தார்கள். அப்படி இருக்கையில் சில தடவைகளில் சுல்தான் ஸலீம்கானின் பாதுஷாவும், கிலுரு அலைஹிஸ்ஸலாமைக் கண்டு

தெரிசித்து அவர்களினின்று மிக்க அருள்களையும் பெற்றனர். ஆக வே இந்த ஹவ்லில் அநேக அவ்லியாக்கள், அப்தால்கள், அக்தாபு கள், வந்து உட்கார்ந்து போகிறதாகச் சொல்லப்படுகிறது. நிற்க இங்கு ஒரு மஸ்ஜித்து மிருக்கின்றது. அதற்கு (காஜா மூஈனுத்தீன் ஜிஷ்தி மஸ்ஜித்) என்று சொல்லுகிறார்கள். எந்த மனிதனும் இந்த விடத்தில் இராத்தரித்து விழித்துத் தனது நாட்டத்தைக் குறித்து துஆ கேட்டானுகில் அவனுடைய துஆ கபூலாகி, கிலுரு அலேஹிஸ் ஸலாமின் முலாகாத்தும் கிடைக்குமென்று பெரியோர் சொல்லு கிறார்கள். இவைகளெல்லாம், நாயகம் காஜா குதுபுத்தீன் தலியல் லாஹு அன்ஹு அவர்கள் இந்த ஸ்தலத்தின் சமீபத்தில் அடங்கி இருக்கிற பறக்கத்தினாலே யாகும்" என்பதே.

3-வது ஹிக்காயீத்து:—புவாஜல் பவாயிது, என்ற கிதாபில் நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது: நாயகம் நிலாமுத்தீன் அவுலியா சொல்வதாவது: "சுல்தான் ஷம்ஸுத்தீன், அல்தமிஷ், பாதுஷா மவுத்தானதற்குப் பின்னுல் நானவரை, கனவில் தெரிசித்து அவ ரின் நிலேமையைக்குறித்து அல்லாஹுத்தஆலா வும்மை யென்ன செய்தானென்று கேட்டேன்; அதற்கவர், 'அல்லாஹுத்தஆலா எனதுப் பாவப்பிணிக்களேப் பொறுத்தான்' என்றார். அது எக்காம ணத்தினுல் என்று நான் கேட்டபோது இந்த ஹவ்லைக்கட்டிய புண்ணியத்தில் நின்றுமே யாகுமொன்று சொல்லிமுடித்தார்" என் பதே. இன்னும் அதில் வருகிறதாவது, "சுல்தான் ஷம்ஸுத்தீன் பாதுஷா வானவர் திஹ்லியிலிருக்கிற ஜனங்கள், வெயிற்காலத்தில் அங்குள்ள கிணறுகளிலும் குளங்களிலும் தண்ணீர் குறைந்துபடும் கஷ்டத்தை நீக்கஉத்தேசித்தே இந்த ஹவ்லைக் கட்டிவைத்தார்" என்பதே. பாயிதா: நண்பர்களே! உங்களது தெளிவான புத்தி யைக் கொண்டு நன்கு கவனியுங்கள்; இக்காரியம் பொது நன்மை யைப்பற்றி யிருப்பதால் இதில், மிக்க லவாபு உண்டாயிருக்கிற தென சஹீஹான ஹதீஸில் வந்திருக்கிறது. இன்னும் (உபாதா) உடைய குமாரர் ஸஅதுபின்யல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் றிவாயத்து வந்திருக்கிறது. யாதெனில், அவர் நாயகம் சகுல் ஸல் லல்லாஹு அலேஹிவஸல்லமிடம் வந்து ஸஅது உடைய தாயார் மவுத்தாகிவிட்டாள்; அவளுக்குச் செய்யக்கூடிய ஸதகாவில் எது மிகவும் விசையாக இருக்குமெனக்கேட்க, நாயகம் தண்ணீர் தா னம் செய்வது என்றார்கள். அப்போது அவர் கிணறு ஒன்று தோண்டி, இது ஸஅது உடைய தாயாருக்காக ஏற்படுத்தப்பட்ட

தென்று சொன்னர். ஆதலால் இதின்கருத்து அக்கினற்றில் ஜலம் அருந்தும் காலமெல்லாம் இதன் ஸவாபு அந்த மாதுக்கு கிடைத்து வரும் என்பதேயாம்.

4-வது ஹிக்காயத்து:—இன்னும் ஸியருல் ஆரிபீன், என்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் காஜா குதுபுத்தீன் றபியல்லா ஹு அன்ஹு அவர்கள் மிகுதமாய் ஷெ ஹவ்ல்லைடீய, திக்கிரு முதலான இபாதத்துகளை செய்து கொண்டிருந்தார்கள். அப்படி இருக்கும்போது ஒருநாள் (மஸ்ஜீதே காஜா மூனுத்தீன் ஜிஷ்திபில்) மேல்புறத்திலுள்ள ஷெ ஹவ்லில் திக்கிருசெய்து கொண்டிருக்கையில் அவர்களைச் சுற்றி, ஷெய்கு ஹமீதுத்தீன் முஹம்மது அதா நாகூரி, காஜா மஹ்மூது, ஷெய்கு பத்ருத்தீன் கஸ்னவி, ஷெய்கு தாஜுத்தீன் முனவ்வரல் அவ்ஷி, இவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது சமயோச்சிதமாய் ஒரு மனிதர் புலியின்மீது சவாரி செய்தவராக, நீல உடையணிந்தவராய் ஹவ்லின் ஓரமாய் வந்திறங்கி அதில் குளித்துவிட்டு இரண்டு றக்க அத்தொழுது புலியின்பேரில் சவாரி செய்தவராய்ப் போனர். அப்போது அவர், சொன்னது யாதெனில் காஜா குதுபுத்தீன் ஷெய்கு ஹமீதுத்தீன் முஹம்மது அதா இவர்களுக்கு (நிமிஷந்து) நேரில் வசிக்கும் அபூசயீது, என்பவருடைய சலாம் உண்டாக்கடது என்று பெருஞ் சத்தமிட்டு சலாம் சொன்னவராய் மறைந்துவிட்டார் பிறகு அவரைப்போய்ப் பார்க்கையில் அவர் தென்படவில்லை" என்பதே. றபியல்லாஹு அன்ஹு.

5-வது ஹிக்காயத்து:—மிப்தாஹுத் தாலிபீன், என்ற கிதாபில் நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது: (மௌலானா காஜா கிலுரு) சொல்லுகிறதாவது. யாதெனில், "நான் ஓரிரவு (ஹவ்லேஷம்ஸி) புக்குப் பின்புறத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பழைய ஈத்காவில் விழித்திருந்தேன். ஸுபுஹுக்குச் சமீபமாகிறபோது ஒளிபொருந்திய ஒரு மனிதர் அகஸ்மாத்தாய் மஸ்ஜிதில்வந்து பாங்கு சொல்லி சுன்னத்து தொழுதுவிட்டு அல்லாஹுத்தஆலா உடைய இபாதத்தில் இருந்தார். அந்த நேரத்தில் கிலுரு அலைஹிஸ்ஸலாமும் அந்த மஸ்ஜிதில்வந்து அவருக்கு சமீபமாக உட்கார்ந்தார்கள். சுபுஹின் வெளிச்சமானதும் அவர்கள் எழுந்து (இகாமத்து) சொன்னார்கள். அவர்களின் இஷாராவினால் யான் முன்னுகி (தக்பீர்) கட்டி மேனன் அவ்விருவரும் என்னைத் தொடர்ந்து தொழுது முடிந்தபின், முதன்முதல் மஸ்ஜீதில் வந்திருந்தவர் எழுந்து வினாவில்

مسجد قوة الاسلام دهلی

குவ்வதுல் இஸ்லாம் மஸ்ஜித்



درگاه سلطان شمس الدین التمش دهلی

ஸுல்தான் ஷம்ஷுத்தீன் அல்தமஷ் தர்கா



مطبع نامی مدراس

இது

குவ்வத்துல் இஸ்லாம் மஜீது.

இந்த குவ்வத்துல் இஸ்லாம், மஜீது திஹ்லியிலிருந்து 11 பதி னொரு மைல் தூரத்தில் ஹலரத்குதுப் சாஹிப் அவர்களின் மனாரக் கட்டடத்தின் சமீபமா யிருக்கின்றது. இங்கே முன்தன் முதல் ராஜா பத்துஹர் விக்கிரகங்கள் வைத்திருந்தான். திஹ்லி பட்டணத் தை முஸ்லிமான பாதுஷாக்கள் கைப்பற்றிய காலத்தில் அவைகளை உடைத்து மஜீதாக்கி விட்டார்கள். இந்த மஜீதின் சமீபத்தில்தான் சுல்தான் ஷம்ஷுத்தீன் அல்தமிஷ் பாதுஷா கபுர்ஷரீப் இருக்கிறது. இந்த பாதுஷாவின் கபுரை ஸங்குகாரா, என்னும் ஒருவகைக் கல்லி னாலும், ஸங்குசுரக் என்னும் ஒருவகைச் சிவப்புக் கல்லினாலும் ஹிஜிரி 623 வருடத்தில் மேற்படி பாதுஷாவின் புத்திரியாகிய சுல் தான் ரலியாபேகம், அவர்களால், கட்டி வைத்து அதன் சுவறு களில் குரான் ஆயத்துகளும் எழுதிப்பட்டிருக்கின்றன.

இது

ஹௌலே ஷம்ஸி.

இந்த குளத்திற்கு குத்துப்ஸாஹிப், குளமென்று பெயர் வழ ங்குகின்றது. இது சுல்தான் ஷம்ஷுத்தீன் அல்தமிஷ் பாதுஷா என்பவரால் கட்டிவைக்கப் பெற்றது. இந்தக் குளம் ஹலரத்குத் துப் சாஹிப் அவர்களின் மினாரவிலிருந்து ஒருமைல் தூரத்தில் இருக்கிறது. இந்தக் குளத்துக்கருகே சுமார் 200 சித்திரங் கள் வரையில் கட்டப்பட் டிருக்கின்றன. இந்தக் குளத்தை சுல் தான் அலாவுத்தீன் பாதுஷா என்பவர் சுத்தப்படுத்தினர். மற் றொரு காலத்தில் பைரூஸ்ஷா, என்பவர்தனது அரசாட்சி காலத்தில் அந்தக் குளத்தில் பிளவுபட்டிருந்த இடத்தை மராமத்து செய்து சீர்திருத்தமாக்கி வைத்தார். இந்தக் குளத்தின் நடுவில் ஸங்குசுரக் என்னும் ஒருவகைச் சிவப்புக் கல்லினால் குமுஸ் கட்டடம் கட்டி அதற்குப் பன்னிரண்டு வாயில்க ளமைத்து நிருமாணிக்கப்பட் டிருக்கிறது. இதை அலாவுத்தீன் கல்ஜி பாதுஷா கட்டிவைத்தார்.

வெளியேவந்து மறைந்துவிட்டார். அப்போது கிலுரு அலைஹிஸ்ஸலாம் என்னை நோக்கி இந்தமனிதரை நீர் அறிவீரா என்று கேட்க, கானறியேனென்றேன். அதற்கவர்கள், இவர் (கப்ரேஸ்) நகரிலுள்ள இன்னாரின் கபிபா; பெரிய பதவியை உடையவர் என்று சொல்லி அவரின் விஷயத்தை விவரித்துச்சொன்னார்கள்: அதாவது தமது (கான்காஹ்) என்ற இடத்திற் சில ஜனங்கள் ஹல்வா தயார் செய்து கொண்டிருந்தார்கள். அதன் வாடை இவரின் நாசில் ஏறவும் இவரின் ஆத்துமா அந்த ஹல்வாவை நாடி யிச்சித்தது. அப்போது இவர் தமது நப்சை நோக்கி ஆப் எனது நப்சே, உனக்குப் பிரதினமும் இந்த தொழிக்கோதுமை ரொட்டி கிடைத்துக் கொண்டிருக்க, அதை விட்டுவிட்டு நீ ஹல்வாவை பேன் தேடுகிறாப் என்று அதை பபமுறுத்திவிட்டு, அந்த விடத்தையுவிட்டும் வெளிபாகி அவ்வூரையும் விட்டு அப்புறப்பட்டுப் 12 பண்ணிரண்டு வருடகாலமாகச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறார். மேலும் இவர் காட்டிலுள்ள புற்பூண்டுகளையும் இலைகளையும் சில பழங்களின் விதுக்களையும் புசித்துக்கொண்டு வேறு எதையும் புசிக்காமலே இருந்து வருகிறார் மேலும் இவர் மிதியாய் (கஜ்னீ) என்கிற ஊரின் மலைகளில் வாசஞ் செய்து வருகிறார். தவிர இவர் இரண்டாவது முறை, திம்லி ஜாம் மாமஸ்ஜிதில் போய் பஜர்தொழுகையை அதாச் செய்திருக்கிறார். இது நிற்க நாய்கம் கிலுரு அலைஹிஸ்ஸலாம், இந்த ஹவ்லும் ஈத்தகாவும் உள்ள இடம் மகிமை வாய்ந்து சவுக்கியமான ஓரிடமேயாகும்; இந்த இடத்தில் யாராகிலு மொருவன் உண்மையான மனதுடன் தனது ஹாஜத்துகளைக் குறித்துக்கேட்பானுகில் அவனது துவாகபூல் செய்யப்பட்டு சகல நாட்டமும் நிறைவேற்றப்படும் என்று சொல்லுகிறார்கள்" என்பதே தலிபல்லாஹ் அன்ஹு.

شاہی مسجد
جامع مسجد

இது

திஹ்லி ஜாமிஆ மஜீது.

இந்த அரிய பெரிய மஜீதின் பெருமை எங்கும் பிரபல்யமாய் இருப்பது யாவரும் அறிவர். மேலும் இது டில்லி கோட்டைக்கு அடுத்தாற்போலிருக்கிறது.

இது ஸங்சருக்கு என்னும் ஒருவகையான சிவப்புக்கல்லாலும், ஸங்கு மருமர் கல்லாலும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அழகிய படிகள்வைத்துக் கட்டியுள்ள மூன்று பெரிய வாயில்கள் இருக்கின்றன. இதன் மேல் பாகத் கட்டடத்தில் செம்புக்கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மஜீதின் உள்ளே 408 அடி நீளமுள்ள ஸஹன் இருக்கிறது. நடுவில் ஸங்கு மருமர் என்னும் கல்லால் கட்டிய ஹவ்லு ஒன்றும் இருக்கிறது. இதில் எப்போதும் ஜலம் நிறைந்து அதன் நடுவில் அமைக்கப்பட்டுள்ள குழாயின் சிறு துவாரங்களின் வழியாய் ஜலம் சூழ வடிந்துகொண்டே யிருக்கிறது. இந்த மஜீதின் சுவறுகளில் அநேகமான சித்திரவேலைகள் செய்து குரான் ஆயத்துகள் எழுதப்பட்டு, அவைகள் கண்ணாடியைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. மஜீத்தின் மேலே நாலா பக்கங்களிலும் குமுஸ் கட்டடங்கள் கட்டி, அவைகளில் அமைத்துள்ள பொன் கலசங்கள் பளீர் பளீரென மின்னிக்கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட அழகிய மஜீது உலகத்தில் எங்கும் இல்லை யென்று உறுதியாய்ச் சொல்லப்படுகிறது. தவிர ஹவ்லு கிழக்குபாகத்தின் ஓரமாக ஒரு அழகிய கும்மஸ் கட்டடம்கட்டி, அதில் முன்னோர்களால் கிடைத்த ஒருவகையான சில வஸ்துக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்திற்கு (ஆஸாரே ஷரீப்) என்று பெயர் சொல்லுகிறார்கள். இந்த மஜீதை ஷாஹிஜான் பாதுஷா அவர்களின் உத்தரவுபெற்று அவரின் பெரிய மந்திரியாகிய ஸைதுல்லாகான், அவரது நலைமை கணக்குப் பரிசோதகரான பாவில்கான், என்ற இருவர்களின் முயற்சியினால் பத்துலட்சம் ரூபா செலவுசெய்து ஆறுவருட காலத்தில் கட்டிமுடித்தார்கள். இதின் முழு விஷயங்களைப் பார்க்க விரும்புகிறவர்கள், "தாரீக்கு காபதே நிகார்" என்ற கிதாபில் பார்த்துக்கொள்ளலாம். இந்த சரித்திரத்தை எழுதிய காஜாமுஹம்மத் சொல்கிறது யாதெனில்:—

இதில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு விஷயங்களையும் நான் ஹிஜ்ரி 1337வது வருடம் அங்குசென்று பார்வையிட்டேன். அவைகள்யாவும் பார்க்கத் தகுந்த அலங்காரத்துக் குரியவைகளாகவே யிருக்கின்றன.

3-வது பஸல்:

(நாயகம் ஷேக்பரீதுத்தீன் கஞ்சுசக்கர் றலியல்லாஹு அன்ஹுவின் வரலாற்றைப்பற்றிப் பேசும் பிரிவு.)

குலாஸா தவாரீகே, மஷாயிக், ஜிஷ்திய்யா, வென்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் ஷெய்குபரீதுத்தின் கஞ்சுசக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹலரத், உமரிப்னுல் கத்தரப் றலியல்லாஹு அன்ஹுவின் வம்மிசத்தில் உள்ளவர்கள் அவர்களின் தகப்பனுர் காலிஜமாலுத்தின் சுலைமான், இவர் காபுலுக்கு பாதுஷாவானவர். (பர்றக்ஷா) உடைய குடும்பத்தைச் சார்ந்தவர். நாயகமவர்களின் தாயார் பத்தினித்தன முள்ளவர்களாயும், சாலிஹான அமலைக்கொண்டு பாக்காகி அக்காலத்தில் பெண்டுகளுக்கு கல்வி போதிப்பவர்களாயும் இருந்தார்கள். நிற்க நாயகமவர்கள் சிறு பாலகராயிருக்கும்போது அவர்களின் தாயார் அன்னவர்களைத் தொழும்படி மிக்க தாக்கீது செய்து, தொழும் முஸல்லாவின் கீழ் கொஞ்சம் சர்க்கரை வைத்து வந்தார்கள். நாயகமவர்கள் தொழுது விட்டுச் சக்கரையைத் தின்று வந்தார்கள். இப்படி இருக்கும் போது ஒருநாள் அவர்களின் தாயார் அந்த முஸல்லாவின் கீழ் சக்கரையை வைக்க மறந்துவிடவும் நாயகமவர்கள் வழக்கம்போல் தொழுதுவிட்டுப் பார்க்கையில் அகஸ்மாத்தாய் சக்கரை இருக்கக் கண்டு எடுத்துத் தின்றார்கள். அதை நாளில் அவர்களுக்கு ஷக்கர் கஞ்சு என்று பெயர் வந்தது. அவர்கள் ஹலரத்து குதுபுத்தீன் அவர்களிடம் கிலாபத்துபெற்று கலீபாவாக இருந்தார்கள்" என்பதை றலியல்லாஹு அன்ஹு. இன்னும் அனீஸுல் அஷ்பாஹ் என்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் ஷெய்குபரீதுத்தீன் மஸ்ஊதி கஞ்சுஷக்கர்கத்தஸ ஸிர்றஹு அவர்கள் ஹலரத் காஜா குதுபுத்தீன் குத்தஸஸிர்றஹு உடைய கலீபாவானவர்கள். அவர்களுடைய தகப்பனுர் ஸுல்தான்மஹ்மூதுல் கஸ்னவி, உடைய உடன் பிறந்தாளின் மகனுர். அவர்களின் தாயார் மவுலானு வஜீஹுத்தீனுல் கஞ்சதிஉடைய மகளாயிருக்கும்" என்பதை றலியல்லாஹு அன்ஹு.

1-வது ஹிக்காயத்து:—ஹயாக்பரீதிலும் மற்ற கிதாபுகளிலும் வருகிறதாவது. "ஒருநாள் நாயகம் பரீதுத்தீன் கஞ்சுஷக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தாயார் (தஹஜ்ஜது) தொழுகையிலிருக்கும்போது ஒருதிருடன் அவர்களுடைய வீட்டில் திருடுகிறதற்காக வந்து நழைபவும் அவனது கண் குருடாகி விட்டது.

திரும்பி வருகிறதற்கு வழி தெரியவில்லை. பிறகு அவன் ஆசை முறித்தவனாகி உட்கார்ந்துகொண்டு உயர்ந்த சப்தமிட்டு, 'நான் திருடுவதற்காக வந்தேன்; இதிலுள்ளவர்கள் மஹான்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய கராமத்தினால் நான் குருடாகி விட்டேன். இதன்மேல் நான் உண்மையான மனதுகொண்டு விண்ணப்பம் செய்கிறேன்; எனது கண் சுக்தமாகிறதானால் இனி ஒருபோதும் திருடுகிறதில்லை; மேலும் அவ்வாறு கண்சுக்தமாகும் ஷுக்ரினால் இஸ்லாமாகி விடுகிறேன்' என்றான். இதை நாயகமவர்கள் தாயார் கேட்டு அவனது ஹக்கில் துஆச் செய்பவும் அவனுடைய கண் வெளிச்சமாகி விட்டது. அந்த இரவின் ஸுபுஹுவேளையில் தன் பெண்சாதி பிள்ளைகளிடம் வந்து இரவில் நடக்க விஷயத்தைச் சொல்லி தயிர்க் கலயத்தை பெற்றுக்கொண்டு நாயகமவர்கள் தாயாருடைய வீட்டு வாயிலின்பேரில் வந்து நின்றுகொண்டு, 'நான் வதாச் செய்தபடி முஸ்லீமாகி விடுகிறேன்' என்று சொல்லி (லாஇலாஹ, இல்லல்லாஹ், முஹம்மதுர்ரசூலுல்லாஹி) என்று கலிமா சொன்னவனாய் இஸ்லாமாகி விட்டான். அவருக்கு அப்துல்லா, வென்று பெயர் வைக்கப்பட்டது. அவருடைய கபுறும் நாயகமவர்களுடைய தகப்பனார் உடைய கபுறும் அவர்களின் கூடப்பிறந்த (இஸ்ஸத்தின்) அவர்களின் கபுறும், (கோத்தாவால்) என்ற ஊரில் இருக்கின்றன. இன்னும் ரியாலுல் ஆரிபீன், அனீஸுல் அஷ்பாஹ், என்ற கிதாபுகளில் வருகிறதாவது: 'அந்தத் திருடன் மறுநாள் தன்னுடைய பெண்சாதி பிள்ளைகளுடன் வந்து இஸ்லாமாகி விட்டான். அவனுக்கு அப்துல்லா வென்ற பெயர் வைக்கப்பட்டது. அவர், அவ்லியாக்களுடன் சேர்ந்து விட்டார்' என்பதாக. றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—ஷெய்குபரீதுத்தீன் றலியல்லாஹு 18 பதினெட்டு வயதில் (முல்தான்) என்ற ஊரிலுள்ள, (குப்பதில் இஸ்லாம்) மஸ்ஜிதில் மவுலானு மின்ஹாஜுத்தவனுக்திர்மதி, றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில், (பிக்ஹு) உடைய கிதாபுகளில் நாபிஃ என்ற கிதாபு ஓதிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு குர்ஆன் மனப்பாடமாக இருந்தது. நித்ய ஒவ்வொரு நாளும் ஓரு (கத்தம்) செய்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் கஜ்னா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யாத்திரை செய்தவர்களாய் அம்மஸ்ஜிதில் வந்திறங்கி இரண்டு ரக்அத்து தொழுதுவிட்டு உட்காரவும் ஷெய்குபரீதுத்தீன் றலியல்லாஹு அன்ஹு, அன்ன

வர்களின் பாதாரவிந்தத்தில் மோதிவிழுந்து முத்தமிட்டார்கள். அப்போது நாயகம் காஜாகுதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு, அன்னவர்களை நோக்கி "உமதுகையில் என்னகிதாபு இருக்கிறது?" என்று கேட்கவும் அதற்கவர்கள் பிக்ஹுடைய இல்மில் உள்ள நாபிஃ என்னும் கிதாபு என்று சொல்ல, நாயகமவர்கள் இன்ஷா அல்லாஹுத்தஆலா, (நாபிஃபாத்) அதாவது பிரயோஜனமாகக் கடவதென்றார்கள். பின்னர் ஷெய்குபரீதுத்தீன் றலியல்லாஹு அன்ஹு, நாயகமவர்களிடத்தில் முரீதாகி மேலான தர்ஜாவிலாஞர்கள். பின்னர் நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அவ்விடத்தைவிட்டு திஹ்லிக்குப் புறப்பட்டுப் போகையில் ஷெய்கு பரீதுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவும் அவர்களோடுபோக எத்தனிக்க, ஷெய்கு அவர்கள், "ஆப்பரீதே! நீர் கொஞ்ச நாளோக்கு இவ்விடத்திலிருந்து லாஹிரூன இல்முகளைப் படியும்; எனெனில், இல்மில்லாமல் ஸாஹிதாகப் போகிறது ஷெய்தான், பரிகாசஞ்செய்கிறதற்கு இடமாக யிருக்கிறது; ஆதலின் இல்முகளைப் படித்துத் தேர்ச்சி அடைந்தபிறகு, என்னிடம் வந்திருக்க வேண்டும்" என்றார்கள். திரும்பவும் அவர்கள் மூன்று மன்ஸில், வழிதூரம் வரையிலும் கூடவே வந்தார்கள்.

திரும்பவும் நாயகமவர்களால் வற்புறுத்தப்பட்டு அவர்கள் அதிலை அந்த எண்ணத்தை விடுத்து அவர்களிடம் உத்திரவு பெற்று மீண்டுவந்து இல்முகளை ஹாஸீல் செய்வதற்காக (கந்தஹார்) என்ற ஊருக்குப்போய்ச் சரியாக 5 ஐந்து வருடம்வரையில் இல்மைப் படித்தார்கள். பின்னர் ஷெய்கு ஷிஹாபுத்தீன் ஸுஹரவர்தீ, ஷெய்கு ஸைபுத்தீன் கிலுரு, ஷெய்கு ஸுஜாவுத்தீன் ஜமவீ, ஷெய்கு பஹாவுத்தீன் ஜகரியா, ஷெய்கு அவ்ஹதுத்தீன் திர்மானீ, ஷெய்கு பரீதுத்தீன் அத்தாரி நய்ஸாபூரி, இவர்களிடத்தில் இருந்து பைஅதுகளைப் பெற்று லபர்செய்து மீண்டு தங்களுடைய ஷெய்கு காஜா குதுபுத்தீன், றஹிமஹுல்லாவின் திருப்பாதார விந்தத்தை முத்தமிட்டுக் கொள்ள திஹ்லிக்கு புறப்பட்டு வந்துசேர்ந்தார்கள். அவர்களைக்கண்டு நாயகம் ஷெய்கு றஹிமஹுல்லா யெகு சந்தோஷமாகி, ஓஜீபனம் சமையல்செய்கிற வீட்டின் வாயிலிடத்தில் இருந்த ஹுஜ்ராவின் அரையில் இருக்க கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவர்கள் அதிலேயே தங்கி இபாதத்து முதலிய வணக்கங்களில் ப்ராக்காயிருந்துவந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

3-வது ஹிக்காயத்து:—ஸீரதுல்மஷாயிகு, என்கிற கிதாபில் வரு கிறதாவது: "ஒரு அழகு சவுந்தரிய முடைய வாலிபன் திஹ்லியிரு ந்து நாயகம் பரீதுத்தீன் கஞ்சுஷகர் அவர்களை முலாகாத்து செய் கிறதற்காக நாடி வந்தான். இடை வழியில் சங்கீதப்பெண் ஒருத்தி அவனைக்கண்டு அவன்மீது ஆசைபாகித் தன்னுடைய விருப்பத்தை அவனிடம் பெற்றுக்கொள்ள நாடினாள். அவ்வாலிபன் அவளைத் திரும்பிப் பாராமல் நடக்கவும், அவளும் அவனுடனே தொடர்ந்து சென்றாள். அப்படிப் போகும்போது ஒருநாள் திடிரென்று வாலி பனும், அவளும் படகு ஒன்றில் ஏறிப்போகிறதற்கு நேரிட்டது. அப்போது அவள், உபாயத்தினால், வாலிபனுடைய மனதைக் கேட்ட செய்கையில் திருப்பி விட்டாள். அவ்வாறு இருவரும் கெட்ட செய்கையைப் நாடிச் செய்யப்போகும் தருணத்தில், ஆகா யத்தில் நின்றும் ஒருமனிதர் வந்து வாலிபனுடைய முகத்தில் ஒரு அடி அடித்துவிட்டு, 'நீ ஷெய்கு பரீதுத்தீன் றலியல்லாஹு அன் ஹு அவர்களுடைய கித்மத்தில் தவ்பா செய்கிறதற்காகப் போகும் வேளையில் கெட்ட காரியங்களைச் செய்துகொண்டு போகிறது கொடுமையான பாவமல்லவா' என்று சொல்லிவிட்டு மறைவாகி விட்டார். அதன்மேல் வாலிபன் அந்த எண்ணங்களை விட்டுத் திரும்பிவிட்டான். பின்னர் அவன் நாயகமவர்களுடைய கித்மத் தில்வந்து உட்காரவும், ஷெய்கு நாயகமவர்கள், ஷுக்ரு செய்தவர்க ளாய் அவனை நோக்கி, அல்லாஹுத்தஆலா உன்னைச் சங்கீத பெண் இச்சையைவிட்டுக் காப்பாற்றிக் குற்றமில்லாமல் கரைச்சேர்த்தான்' என்று சொன்னார்கள். அவ்வாலிபன் இதைக்கேட்டு ஆச்சரிய முற்று அவர்களுடைய பாதார விந்தத்தில் மோதிவிழுந்து மூரீ தானான். றலியல்லாஹு அன்ஹு.

4-வது ஹிக்காய்த்து:—ஹயாத்து பரீதீ, என்ற கிதாபில் நகல் செய்திருக்கிறதாவது: நாயகம் ஷெய்கு பரீதுத்தின் றலியல்லாஹு அன்ஹுவின் மூரீதாகிய (கவ்ரி) என்ற ஊரிலுள்ள சாலிஹாகிய முஹம்மத்ஷாஹ, என்பவர் மிக மனம் நொந்தவராகவும், துக்க மடைந்தவராகவும் நாயகவமர்களுடைய திருச்சமுகத்தில் வந்து ஹாலிரானார் அப்போது, ஷெய்கு அவர்கள் அவரை நோக்கி 'ஆப் முஹம்மத்ஷாஹ்! ஏன் இப்படித் துக்கமடைந்தவரா யிருக்கிறீர்?' என்று கேட்க, அவர் 'நாயகமே! என்னுடைய சகோதரர் அதிக சவுக்கியமில்லாதவராயும், அவர் ஹயாத்தில் நம்பிக்கைவைக்க இட மில்லாதவராயு மிருக்கிறார். ஆனதினாலித்தருணம நான் தங்கள்

சமூகத்தில்வந்தேன்; இப்பொழுது அவர் ஹயாத்தாயிருக்கிறாரோ அல்லவோ தெரியவில்லை' என்று சொன்னர். அப்போது நாயகமவர்கள் அவரைப்பார்த்து, 'ஆப் முஹம்மத்ஷாஹ்? நான் வயது முழுவதிலும் இதேஹாலின் பேரில்தான் அல்லாஹுத்தஆலாவின் சமூகத்தில் தரிப்பட்டு இருக்கிறேன்; ஆயினும் நான்யாருக்கும் என் நிலைமையை வெளிபாக்கவில்லை' என்று சொல்லிவிட்டு மேலும் அவரை நோக்கி, 'நீர் உம்முடைய வீட்டிற்குப்போம் அல்லாஹுத்தஆலாவின் உதவியினால் உமது சகோதரருக்கு சவுக்கிய முண்டாகிவிடும்' மென்றார்கள். அதன்மேல் முஹம்மத்ஷாஹ் தம் முடைய வீட்டிற்குவந்து பார்க்கவும், அவரின் உடன்பிறந்தார் சவுக்கியமாக உட்கார்ந்து ஒஜீபனித்துக் கொண்டிருந்தார். இன்னும் அவருடைய முகத்தில் சவுக்கிய தப்பாகி இருந்தகுறிகளும் காணப்படவே இல்லை" என்பதே. தலியல்லாஹு அன்ஹு.

5-வது ஹிக்காயத்து:—இன்னும் ஹயாத்து பீதி, என்ற கிதாபில் வருகிறதாவது: ஷெய்கு நிலாமுத்தீன் அவ்லியா சொல்லுகிறது யாதெனில்: "நான் ஷெய்குபரீதுத்தீன் தலியல்லாஹு அன்ஹுவினிடத்தில் உட்கார்ந்திருக்கும்போது, (துர்கிஸ்தான்) தேசத்திலிருந்து கெட்டகுணமுடைய ஐந்து பகீர்கள் யாத்திரை செய்தவர்களாய், (அஜ்தன்) என்னும் ஊருக்குவந்து நாயகம் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுஷக்கர் தலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருச்சன்னிதானத்தில் சேர்ந்து ஹாலிராகி, 'நாங்கள் மிகவும் ஸபர்செய்து கொண்டுவருகிறோம்; ஆகிலும் நாங்கள் உயர்தரகமாலுடைய பகீர்களாக் காணவில்லை; வேடம்பூண்ட அனேகம் பகீர்களைக் கண்டோம்; ஆனல் அவர்கள் துனிபா உடையவர்களை ஏமாற்றுவதற்கு பகீர்களுடைய உடையை அணிந்து ஜனங்களிடம் கொள்ளை செய்கின்றார்கள்.' என்று சொல்லவும் நாயகமவர்கள், அவர்களை நோக்கி, 'நீங்கள் ஒரு (ஸாஅத்து) நேரம் தரிப்படுங்கள்; காமிலான பகீர்களுடன் உங்களைச் சேர்த்து விடுகின்றேன்' என்றார்கள். அதற்கவர்கள் அவ்வளவுநேரம் இங்கு தரிப்பட எங்களுக்குச் சாவகாசம் இல்லை' என்று சொல்லவும், நாயகமவர்கள், 'நீங்கள் அப்படிப்போகிறதானல் இன்ன வழியாகப் போகாதீர்க'ளென்றார்கள். அதற்கவர்கள் அவ்வார்த்தையைக் கேளாமல் அவ்வழியாகவே நடந்து போனர்கள். அவர்கள் போனபிறகு நாயகம் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுசக்கர் தலியல்லாஹு அன்ஹு சுசான அழுகையாக அழுது, (இன்னு லில்லாஹி, வயின்னு இலைஹி, ராஜிஊன்) என்று சொல்லி

விட்டு வாய்மூடினர்கள். பிறகு சிறிதுநாள்கள் கழித்து செய்தி தெரியவந்தது யாதெனில் அந்த ஐந்து பகீர்களும் நெருப்புகாற்று வீசப்பட்டு மரணமடைந்தார்கள். என்றும், அதில் ஒருவர்மாத்திரம் தாகத்தின் கொடுமையால் இணற்றிலிறங்கித் தண்ணீர் குடித்து விட்டு அவரும் அவர்களோடு சேர்ந்தார். என்றும் கேள்விப்பட்டார்கள்." என்பதே. நவூது, பில்லாஹி, மின்ஹா.

6-வது ஹிக்காயத்து:—இன்னும் ஹயாத்பீதீ, என்ற கிதாபில் நகல் செய்திருக்கிறதாவது: "மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாகுல் புகாரீ, என்பவர் மஅகூல், மன்கூர் என்னும் இரண்டுவகை இல்முகளிலும் நல்ல தேர்ச்சி அடைந்தவர். அவர் திஹ்லி முத்லாவில (முதர்ரிஸ்) அதாவது பெரிய ஆசிரியராக இருந்தார். ஆகிலும் அவர் அவ்லியாக்களான. பெரியோர்களின்பேரில் இஃதிகாது அற்றவராயிருந்தார். அவருக்குச் சில மஸ் அலாக்கள் விளங்காமல் அவைகளை திஹ்லியிலுள்ள உலமாக்களிடம் கேட்டகிலும் அதற்கு சரியான ஜவாபு கிடைக்கவில்லை. ஆதலால் அவைகளை விளங்கிக் கொள்வதற்காக அவர் சில உலமாக்களை தம்முடன் அழைத்துக் கொண்டு. (புகாரா தேசத்திற்குப் பிரயாணப்பட்டுப் போகும் போழுது (அஜ்ஜதஹன்) என்ற ஊரில்வந்து சேரவும் அவர் கூடவந்தவர்கள், நாயகம் பரீதுத்தீன் கஞ்சுஷகர் றலியல்லாஹு அன்ஹுவை முலாகாத் செய்வதற்காக நாடி மௌலானா லாஹிபையும் கூப்பிட, அதற்கவர் நீங்கள் போய்வாருங்கள்; நான் இவ்விடத்திலேயே இருக்கிறேன்; ஏனெனில் நான் இப்படிப்பட்ட அனேக பகீர்களைப் பார்த்திருக்கிறேன்; அவர்களுடைய சிநேகத்திலிருந்து நேரத்தைப் போக்குகிறது. வீணாக இருக்கு'மென்று சொன்னர் அப்போது அவருடன்வந்த உலமாக்கள், 'எங்களுடன் நீங்கள் வரத்தான்வேண்டும்' என்று தொந்தரவு செய்பவும், மௌலானா லாஹிபுகூட வந்தவர்கள் வருத்தப்படக் கூடாதென்று எண்ணி அன்னவர்களோடு நாயகம் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுஷகர் றலியல்லாஹு அன்ஹுவினிடம் வந்து ஹாலிருந்தார் பிறகு அவர்தமக்கு விளங்காத மஸ் அலாக்களை அந்த நாயகமவர்களிடத்தில்கேட்க, அக்கடினமாய் மஸ் அலாக்கள் நன்கு விளங்கிற்று. அப்போது மௌலானா பத்ருத்தின் இஸ்ஹாக்கின் மனது நாயகமவர்களுடைய சார்பில் சாய்ந்தது. பின்பு புகாராவுக்குப் போவதை நிறுத்திவிட்டுஷெய்கு அவர்களிடம் முரீதாகி அவர்களுக்குப் பணிவிடை செய்வதிலேயே இருந்து, காட்டு மைதானங்களில் போய் விறகுகளை எடுத்துக்கட்டி

அச்சுமைகளைத் தலைமின்பேரில் சுமந்துகொண்டுவந்து நாயகமவர்கள் ஒஜீபனம் சமைக்கிற விடத்தில் போடுகிறவரா யிருந்தார். பின்னர் நாயகமவர்கள் தங்கள் அருமையான மகளை மௌலானா சாஹிபுக்கு (நிக்காஹ்) செய்வித்து அவரை மருமகனுக்கிக் கொண்டார்கள்" என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

7-வது ஹிக்காயத்து:—இன்னும் ஹபாக்பரீதில் நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது: "ஸிஜ்ஜும், என்கிற ஊரிலுள்ள ஷம்ஸுத்தீன், என்ற வித்துவான், (ஸுலூகின்) இல்மில் ஷெய்கு ஹமீதுத்தீனுன் நாகூரி, றஹிமஹுல்லாருடைய கிதாபை ஓதியவராக இருந்தார். அப்போது அவர் ஒரு அழகான கஸீதா வென்னும் பத்தை நாயகம் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுஷகர் றலியல்லாஹு அன்ஹுவின் மீதில் கோர்வை செய்து கொண்டுவந்து நின்றவராக ஓதினார். அந்த பைத்து முழுவதும் ஓதிய பிறகு நாயகமவர்கள் அவரை உட்காரும்படி சொல்லித் திரும்பவும் அதை ஓதும்படி சொன்னார்கள். அப்படியே அவர் இரண்டாவது தடவை ஓதுகிறபோது நாயகமவர்கள் ஒவ்வொரு பைத்தையும் (தஅரீபு) புகழ்ச்சி செய்து, கஸீதா முடிந்தபிறகு, 'உம்து நாட்டமென்ன?' வென்று கேட்கவும், ஷம்ஸுத்தீன் (வித்வான்) 'நாயகமே! நான் இப்பொழுது ஏழைபாக இருக்கிறேன், எனக்குத் தாபொருத்திருக்கிறான். அவளை நல்ல விதமாகப் பாதுகாப்பதற்கு நான் சக்தியிலாதவனு யிருக்கிறேன்; ஆயினும் நான் தங்கள் திருச்சமுகத்திற்கு வந்ததை முன்னிட்டு நல்ல அதிஷ்டக்காரனாகி விடவேண்டுமென்று கருதுகிறேன்' என்று சொன்னார். அப்பொழுது நாயகமவர்கள், 'நல்லது; நீர் போய்க் கொஞ்சம் சக்கரை கொண்டுவாரும்' என்று சொல்ல அவர் அனேக கஷ்டம் எடுத்து 50 ஐம்பது பைசாவுக்கு சக்கரை வாங்கிக்கொண்டு வந்தார். நாயகம் (பாத்திஹா) ஓதி அதை மிஸ்கீன்களுக்குப் பங்கிடும்படி சொன்னார்கள். பின்பு அவர் அந்நாட்களிலேயே சுல்தான் ஷம்ஸுத்தீன் அல்தமிஷ் பாதுஷாவின் மகனுடைய மந்திரிமார்களின் ஒருவராகி விட்டார்" என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

8-வது ஹிக்காயத்து:—இக்பாருல் அக்யார் என்ற கிதாபில் எழுதி இருக்கிறதாவது: என்னவெனில், "ஒரு வியாபாரி ஆயிரம் மாடுகளில் சக்கரை மூட்டைகளை யேற்றிக்கொண்டு போனான். அப்பொழுது ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுசகர் றலியல்லாஹு அன்ஹு அந்த மனிதனிடத்தில் கொஞ்சம் சர்க்கரை கேட்டார்கள். அதற்

கவன் அவர்களை நோக்கி 'ஆப் பக்கீர்! இது சர்க்கரையில்லை; உப்பாகும்' என்று சொன்னன். அதற்கு நாயகம் ஷெய்கு அவர்கள் 'அது உப்பாகவே ஆகிவிடு' மென்று வாக்கு வும், கடைசியில் அவ்வியாபாரி தன் எல்லைக்குச் சென்று மூட்டைபைத் திறந்து பார்க்கையில் அவைகள் உப்பு மூட்டைகளாயிருந்தன. பிறகு அவன் கவலையுற்றவனாகி ஷெய்கு ரஹிமஹுல்லா உடைய சன்னிதானத்தில் வந்து 'நாயகமே என்னுடைய குறைகளை மன்னிப்பதோடு, தங்களுடைய கருணையைக்கொண்டு மூட்டைகளடங்கலும் சர்க்கரையாகிவிடச் செய்யவேண்டும்; இதுவே எனது பிரார்த்தனை' என்றான். பிறகு நாயகம் றலியல்லாஹு அன்ஹு, 'ஆய் மனிதனே! இதோ உமது மூட்டையடங்கலும் சர்க்கரையாகி விட்டன; போய்ப்பார்' என்றார்கள். அவ்வாறே அவை ஆகிவிட்டன. அதே நாளில் அவர்களுக்கு (சக்கர்கஞ்சு) என்னும் பெயர் பிரஸ்தமாகி விட்டது" என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

9-வது ஹிக்காயத்து:—அனீசுல் அஷ்பாஹ், என்ற கிதாபில், நாயகம் ஷெய்கு நிலாமுத்தீனுல் அவ்லியா அவர்களைத் தொட்டும் நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது: அவர்கள் கீழ்கண்டபடி சொல்லுகிறார்கள்: "ஒருநாள் நாயகம் கஞ்சுசகர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்கள் திருக்கையைத் தாடியில் தோகிக்கொண்டு இருக்கும்போது அதில் நின்றும் ஒருமயிர் அறுந்து கீழ் விழுந்து விடவும், அதை நான் கேட்டுவாங்கி அதை தஅவீசுசெய்து எப்பொழுதும் என்னிடத்தில் வைத்திருந்தேன். நான் (திஹ்லி) யிருக்கையில் எனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தேக அசௌகரியம் நேரிட்டுவிட்டால் அந்த தாவீசைக் கழுவிக்குடிக்கிறது. அல்லாஹுத்தஆலா அதன்பொருட்டுச் சௌக்கியத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுத்திருந்தான். இவ்விஷயம் (திஹ்லி)ப் பட்டணம் முழுவதும் பரவிபதும் அங்குள்ள வியாபிஸ்தர்கள் என்னிடத்திலிருந்து அதை வாங்கிக் கொண்டுபோய்ச் சவுக்கியம்பெற்று திரும்பிக் கொண்டுவந்து கொடுப்பது, சகஜமாக யிருந்தது. ஆதலின் நான் அதைக் குறிப்பான மாடமொன்றில் பத்திரமாக வைத்திருந்தேன். ஒருநாள் என்னுடைய சினேகிதர்களில ஒருவர் என்னிடம் வந்து தம்முடைய புத்திரனுக்குச் சவுக்கியமில்லாமலிருப்பதைப் பற்றி அந்த தாவீதைக் கேட்டார். அப்போது நான் அதை மாடத்திலும் மற்ற விடங்களிலும் தேடிப் பார்க்கையில் அது தென்படவில்லை. பின்பு அவர் ஆசை முறிந்தவராகத் தமது வீட்டிற்குப்

போய்ப் பார்க்கும்பொழுது அவருடைய புத்திரர் அந்த வியாதியிலே காலகதியடைந்தார். அதன்பிறகு நான் அந்த தாவீதை அதே மாடத்தில் இருக்கக்கண்டேன்" என்றுசொல்லி முடித்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

10-வது ஹிக்காயத்:—றியாலுல் ஆரிபீன், என்கிற கிதாபில் நாயகம் நிலமுத்தின் அவ்லியா சொல்லுகிறதாவது:—"நான் நாயகம் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுஷகர், றலியல்லாஹு அன்ஹு உடைய சன்னிதானத்தில் கொஞ்ச நாள் இருந்தேன். அந்நாட்களில் அவர்களுக்கு வாரத்தில் இரண்டொரு முறை ஒஜீபனத்திற்குக் கஷ்டமாகி விடுகிறதுண்டு. அப்பொழுது அவர்களின் (முரீதீன்)கள் காட்டு மைதானங்களிற் போய்ச் சிலர் இலைகளையும், சிலர் காட்டுக் கனிவர்க்கங்களையும் சிலர் குச்சிகளையும் எடுத்துக்கொண்டு வருவார்கள். நான் உணவு வஸ்துக்களை தேக்ஷாவில் போட்டு வேகவைத்து உணவாக்கி எடுத்து ஒரு பாத்திரத்தில் வைப்பேன். அதில் உப்பு கூட இல்லாதிருக்கும் ஷெய்கு நாயகமவர்கள் அதைக்கொண்டு நோன்பு திறப்பார்கள். இப்படியிருக்க ஒரு நாள் அந்த ஒஜீபனத்தில் நான் உப்புக்கடன் வாங்கப்போட்டேன். அவர்களதைத் தின்னும்போது எனக்கு இந்த ஒஜீபனத்தில் சந்தேகமுண்டாகிறது என்று சொன்னார்கள். அப்போது அந்த உணவு பொருள்களை மௌலானு பத்ருத்தீன் இல்ஹாக், ஷெய்கு ஜமாலுத்தீன் ஹான்ஸவீ, மௌலானு ஹிஸாமுத்தீன், இவர்கள்தான் கொண்டு வந்தார்கள். நானவற்றைப் பேணுதலோடு ஆக்கினேன் என்று நான் சொல்ல நாயகமவர்கள் இதிலிருக்கும் உப்பை நீர் எங்கிருந்து கொண்டுவந்தீரெனக் கேட்க, அதற்கு நான் கடன் வாங்கினேன் என்று சொன்னேன். அதற்கு நாயகம் 'பகீர்கள் மிடிமைத்தனத்தால் மாண்டு போனாலும், சரி நப்ஸின் சுகத்திற்காகக் கடன்வாங்கி ஒஜீபனிக்கமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் ஆண்டவனிடத்தில் முழு நம்பிக்கைக் கொண்டு தவக்கல் வைத்தவர்கள்; ஆதலின், கடனுக்கும், அவர்களுக்கும் இடையில் (மஷ்ரிக், மகரிபு) இதற்கிடையிலேற்பட்ட தூரமெவ்வளவோ அவ்வளவு தூரமிருக்கிறது; என்று சொல்லி கடன் வாங்குகிற விஷயத்தைக் குறித்து எண்ணப முறுத்தினார்கள். அது முதல் நான் எதுஹராஜத்திற்கும் கடன் வாங்கக்கூடாதென்று வாக்குறுதி செய்துகொண்டேன். அப்போது நாயகமவர்கள் எனக்கு தாங்கள் உட்கார்ந்திருந்த கம்பிளியை நன் கொடையாகக் கொடுத்துச் சொன்ன தென்னவெனில், நீர் ஒரு

போதும் எவரிடத்திலும் போய் எதையும் கேட்கும்படி உமக்குச் சந்தர்ப்பம் நேரிடாதென்று வாக்களித்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

11-வது ஹிக்காயத்து:—அனீஸுல் அஷ்பாஹ், என்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் ஷேய்கு பரீதுத்தீன் கஞ்சுஷுக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலமெல்லாம் நோன்பென்னும் உபவாசம் வைப்பவர்களாயும், சவுக்கியமில்லாத வேளையிலும் கூட அதை விடாதவர்களாயு மிருந்தார்கள். ஆனல் அவர்கள் ஒஜீபனிப்பவைகள் மிகுதியும் காட்டுக் கனிவர்க்கங்களும் மைதானங்களிலுள்ள புற்பூண்டுகளுமாகவே யிருந்தனவாம். நிற்க இந்த (ஜிஷ்திய்யா) ஸில்ஸிலா, விலுள்ளவர்களில் அநேகர்கள் காலமெல்லாம் நோன்பு பிடித்தவர்களாயும், இரவெல்லாம் நின்று வணங்கினவர்களாயுமே யிருந்தார்கள்" என்பதே றலியல்லாஹு அன்ஹு.

12-வது ஹிக்காயத்து:—அனீஸுல் அஷ்பாஹ், என்ற கிதாபில், நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா சொன்னதாகவருகிறதாவது: ஷெய்கு பரீதுத்தீன், றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சவுக்கியமில்லாதவர்களா யிருக்கும்போது என்னைக் கிருபையோடு கூப்பிட்டு திம்லிக்குப்போகும்படி எனக்கு உத்திரவு கொடுத்துவிட்டுத் தங்களின் அருமையான இருகண்களினின்றும் கண்ணீரைத் தாரைதாரையாக ஒழுகவிட்டார்கள். அப்போது நானும் அவர்களின் திருச்சன்னிதானத்தை விட்டுப் பிரிகிறதினல் கவலையுற்றவனகவே யான் புறப்பட்டு திஹலி பட்டணத்தில்வந்து சேர்ந்தேன். அவ்வாறு வந்துசேர்ந்து தரிப்பட்டு இருக்கையில் திடீரென்று நாயகமவர்கள் வபாத்தான செய்தியைக் கேள்வியப்பட்டேன். அதாவது, அவர்கள் ஓரிரவு இஷாத்தொழுகையில் உணர்ச்சி நீங்கித் தெளிவு வந்தபின் மௌலானு பத்ருத்தீன் இஸ்ஹாக் றலியல்லாஹு அன்ஹுவினிடத்தில் நான் இஷா தொழுதேனுவென்று கேட்க அவர்கள் ஆம் என்றார்.

பிறகு சந்தேகம் நீங்கும்போருட்டு மறுபடியும் இஷாதொழுகையில் கருத்துவைத்து தொழுதார்கள். அப்போதும் முன்போல் உஷார் நீங்கித் தெளிவுவந்தது. உடன் அவர்கள் கூடி மௌலானுவிடம் இஷா தொழுதேனுவென்று கேட்க அதற்கவர்கள் ஆமென்று சொன்னர். அப்போதும் நாயகம் அவர்கள் சந்தேகம் நீங்கர்மல் மூன்றுவது தடவையும் இஷா தொழுகையை தொழுதுவிட்டு,

درگاه حضرة فريد الدين گنج شكر
கிதாகிறது நா யகம் பரீதுத்தீ
ன் கஞ்ஜ் ஷ கர் ரகிமஹூல்
லா றெளஜா வின் ஸுறத்து

ஹஸ்ரத்து பரீதுத்தீன் கஞ்சுசக்கர்
தர்காஹ் ஷரீபு

நாயகம் பரீதுத்தீன் கஞ்சுசக்கர் அவர்கள் தர்காஹ் ஷரீபு பஞ்சாபு தேஸமாகிய லாகூரிலிருக்கும் ஷிதல்ஜ் எனும் நதியிருந்து 18 மைல் தூரத்திலிருக்கும் பாக்கு பட்டண் என்னும் ஊரில் இருக்கின்றது. இதின் சுற்று பாகங்களில் இருக்கும் ஜனங்கள் மாத மிறண்டுமுறை அங் கேவந்து ஸியாறத்து செய்து போகுறார்கள் கவிற உருசு காலத்தில் தூரதூறமான ஊர்களிலிருந்து ஆபிரக்கணக் கான ஜனங்கள்வந்து கூடுகிறார்கள்.

சொல்லியதுபரதேனில் தற்சமயம் ஷெய்கு நிலாமுத்தீன், திஹ்லியில் இருக்கிறார். நானும் இப்படியே எனது ஷெய்கு காஜா குதுபுத்தீன், றலியல்லாஹு அன்ஹு ஒபாத்தான நேரத்தில் (ஹான்ஸி) என்கிற ஊரில் இருந்தேதன் என்று மௌலானுவிடம் மிருதுவாகச் சொல்லி மேலும் ஷெய்கு காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் யான் பெற்றுக்கொண்ட கிர்கா, வென்னும் பரிவட்டத்தை (பகீர்) நிலாமுத்தீனுக்குச் சேர்த்து விடுங்கள் என்று சொல்லிவிட்டி, தாங்கள் எழுந்து ஒலு முதலானவைகளைச் செய்து இரண்டு ரக்கஅத்தும் தொழுது ஸஜ்தாவிலேயே அல்லாஹ்வுத்த ஆலாவினிடத்தில் சேர்ந்து விட்டார்கள். அவர்களின் வபாத்து ஹிஜ்ரீ 664 அறுநூற்று அறுபத்தினான்காவது வருடம் (முஹர்ரம்) மாதம் 5 ஐந்தாந்தேதி சனிக்கிழமையாகும். அவர்கள் லாஹூரையடுத்துள்ள (பாக்பீட்டன்) என்ற ஊரில் அடக்கப்பட்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு வயது 95 தொண்ணூற்றைந்தேதாயம். றலியல்லாஹு அன்ஹு.

4-வது பஸல்:

(நாயகம் நிலாமுத்தீன் அவ்லியாவின் வரலாற்றில் பேசும்பிரிவு)

தஸ்கிரதுல் முஸ்லிம், என்னும் கிதாபிலும், மற்ற கிதாபுகளிலும் வருகிறதாவது: நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்களின் தாய் தந்தையர் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் வம்பி சத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களின் பாட்டனார் காஜா அலி, பென்பவர். இவர்கள் (புகாரா) மாநகரத்தில் பிறந்து வசித்துவந்து அவ்விடத்தைவிட்டுப் பிரயாணமாகி (ஹிந்துஸ்தானுக்கு, வந்து (படாயூன்) என்கிற ஊரில் குடியேறி ஜீவித்திருந்த ஷே நகரத்திலேயே நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா பிறந்து வளர்ந்தனர். அவர்கள் சிறுபாலகராயிருக்கும்போது அவர்களின் தந்தையாகிய அஹ்மத் புகாரீ, யென்பவர் அவ்வூரிலேயே காலகதியடைந்து விட்டனர். அப்பால் அவர்களின் தாயார் அவர்களை வளர்த்துக் கல்விகற்க வைத்தார்கள். அவர்கள் மஃகூல், மன்கூல், பிக்ஹு, ஹதீஸ், முதலான இல்முகளில் தேர்ச்சியடைந்து அக்காலத்திலிருந்த பாதுஷாவுடைய தர்பாரில் வந்து (கலாவத்து) என்னும் தீர்பு அதிகார வேலையைப் பார்க்கலாம் என்று உத்தேசித்து திஹ்லிப் பட்டணத்திற்கு வந்து (ஷெய்கு நஜீபுத்தீன் முதவக்கில்) என்பவர்களின் சன்னிதானத்தில் ஹாலிராகித் தங்களுடைய நாட்டத்தை வெளிபாக்கியபோது அன்னவர்கள் இவர்களுக்குச் சொன்ன தென்னவெனில், 'ஆய் நிலாமுத்

தீனே! நீர் காஜிவேலை பார்க்கிறதைவிட்டு நீங்கி வேறு ஏதேனு மொரு வேலைபைத் தெரிந்துகொள்ளும்' என்று சொன்னார்கள். அந்த உத்திரவின்படி அவர்கள் (பாக்பட்டண்) என்ற ஊருக்குவந்து (ஷெய்குபரீதுத்தீன், கஞ்சுஷகர் றலியல்லாஹு அன்ஹு-வின் சன்னிதானத்தில் சேர்ந்து அன்னவர்களின் இடமேமுரீதாகி (றியாலத்து, முஜாஹதத்து) என்னும் சாலிஹான அமல்களைச் செய்வதில் பிரயாசையெடுத்து நிரப்பத்தைப்பெற்று ஷேக் நாயகமவர்களின் உத்திரவின்படி திற்லிக்கு வந்து தரிப்பட்டார்கள்" என்பதே.

ரிவாயத்து:—இன்னும் ஸியருல் அவ்லியாவிலும், மற்றும் சில கிதாபுகளிலும் எழுதியிருக்கிறதாவது: நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்கள், சிறு பிராயமாயிருக்கும்போது அவர்களின் தகப்பனார் இல்மு படிப்பதற்காக அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். கொஞ்சக் காலத்திற்கெல்லாம் அவர்கள் (குர்ஆன்)ஷரீபை ஏழுவகை (கிராஅத்துடன்) மனப்பாடம்செய்து இல்மு தீத ஆரம்பித்துப் 12 பன்னிரண்டு வயதில் பல இல்முகளிலும் தேர்ச்சியடைந்து உலமாக்களோடு தர்க்கஞ்செய்து அவர்களைத் தோற்றுப்போகச் செய்யும் வல்லமையுடையவர்களாயிருந்தார்கள். அதனால் இவர்களுக்கு நிலாமுத்தீன் பஹ்ஹாஸ் (அதாவது, தர்க்கம் செய்வதில் பயிற்சி அடைந்தவர்) என்னும் பட்டப்பெயர் கிடைத்தது. இன்னுமவர்கள், அக்காலத்திலிருந்தவர்களில் ஒரு வராயும், கல்வியில் சிறந்தவர்களில் ஒருவராயும் இருந்து, இமாம் ஹரீரீ, றஹிமஹுல்லாவின் (மகாமாத்) என்னும் கிதாபை, அக்காலத்தில் (ஷம்ஸுல்முல்க்) என்னும் பட்டப்பெயர் பெற்ற ஷம்ஸுத்தீன், காஜிமி, என்பவர்களிடம் ஓதி "ஸனதும்பெற்று (ஹதீஸ்) உடைய இல்மில் (மஷாரிகுல் அன்வார்) என்னும் கிதாபை மனப்பாடஞ்செய்து, அக்காலத்தில் ஹதீஸுடைய இல்மில் சிறந்த மௌலானு கமாலுத்தீன் (முஹத்திஸ்) றஹிமஹுல்லா இடத்தில் இஜாஸத்தும் பெற்று, மேன்மையான பதவியை அடைந்தவர்களாக இருந்தார்கள்" என்பதே றலியல்லாஹு அன்ஹு.

1-வது ஹிக்காயத்து:—இக்பாருல் அக்யார், என்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் நிலாமுத்தின் அவ்லியா றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்குபரீதுத்தீன் றலியல்லாஹு அன்ஹு-வின் சன்னிதானத்தில் வந்தபோது அவர்களின் திருவாயினால் அடி-

வில்லரும் இந்தபைதை சொல்லக் கேட்டனர். அதன் பொருள்: 'ஒருவனுடைய பிரிதல் என்கிற கொடிப்பரனது மனதை தகித்து, அவன் ஆசைபென்னும் வெள்ளமானது ரூஹைச் சின்னபின்ன மாக்கிவிடும். அந்த முஹப்பத்தென்னும் ஆசைக்கே என்னுடைய உயிரை தத்தமாக்கிவிட்டேன்' என்பதே. இதைச்சொல்லிப் பின்னும் ஷெய்கு பரீதுத்தீன் கஞ்சுசக்கர் றலியல்லாஹு அன்ஹு, நிலாமுத்தீனுக்குச் சொன்னதாவது யாதெனில் ஆசைகொள்ளுகிற விஷயத்தை ஊமக்கு துலக்கலாம் என்று கூடினேன்; எனினும் அதினுலுண்டாகும் திடுக்கத்தால் யாதொன்றும் சொல்லவும் செய்யவும் முடியவில்லை' என்று சொல்லிவிட்டு (இஷக், எனும் ஆசை கொள்ளைப்பற்றிய விஷயத்தில் சில விஷயங்களை மாத்திரம் விவரித்தனர். அதேகாலில் நிலாமுத்தீன் அவர்களிடம் பைஅத்துபெற்று பின்பு அவர்களை வேண்டி கேட்டுக்கொண்டதாவது: 'நானினிமேல் படிப்பதை விட்டுவிட்டு (அவ்வாது) முதவிய வலீபாக்களை ஓதுவதில் பாக்காகிவிடலாமா?' எனக் கேட்டார்கள். இவ்வாறு கேட்க அவர்கள் 'இதையும் அதையும் செய்துவரும்; ஏனெனில் பகீர்களுக்கு இல்மு அக்கத்தியம் வேண்டும்' என்றார்கள். பின்னர் நிலாமுத்தீன் அவ்லியா அவர்கள் கிலாபத்துப் பெற்றுக் கொண்டுபோய் ஷெய்கு வின் முல்காத்திற்காக திஹ்லியிலிருந்து இரண்டு மூன்று தடவை வந்தார்கள். ஆனல் ஷெய்கு அவர்கள் வபாத்தான் நேரத்தில் அன்னவர்கள் அங்கில்லை" என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—நாயகம் நிலாமுத்தீ னவ்லியா அவர்களிடம் ஒருமனிதன் ஹாலிராகி, "நாயகமே! என்னிடம் செக்கு மாற்றுகிற காகிதம் காணுமற்போய்விட்டது" என்று சொல்லவும், நாயகமவர்கள் அவனை நோக்கி 'நீ ஹல்வா வாங்கிக் கொண்டுவந்து கஞ்சுஷகர் றஹிமஹல்லாவின் பேருக்கு (பாத்திஹா)ச்செய்' என்றார்கள். அவன் அவ்வாறே (ஹல்வா) வாங்கி காகிதத்தில் மடித்துக்கொண்டு வந்தான். பிறகு (பாத்திஹா) முதலானவை ஓதி ஹல்வா மடித்திருந்த கடிதாசியைத்திறக்க, அக்கடிதமே செக்கு மாற்றுகிற கடிதமாயிருந்தது. இசெய்தி (தவாரீக் மஷாயிகே, ஜிஷ்திய்யா) வென்ற கிதாபில் வருகிறது. றலியல்லாஹு அன்ஹு.

3-வது ஹிக்காயத்து:—லியருல் அவ்லியா, வென்ற கிதாபில் நக்கல் செய்யப்பட்டிருக்கிறதாவது: "திஹ்லி பட்டணத்திற்கு கோத்துவாலான, மௌலானு, ஸஹீருத்தீன், என்னும் அதிகாரியான

வர் நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்களின் திருசன்னிதானத்தில் வந்து உட்கார்ந்திருக்கும்போது அங்கு ஊதுவத்தியின் பரிமள வாசனை கமழ்ந்துகொண்டிருந்தது. அன்னவர் அப்பரிமள வாசனை அறைக்குள்ளிருந்து வருகிறதாக எண்ணினார் காதிம் அந்த அறையைத்திறக்க அதில் யாதொன்றும் இல்லாமல் இருந்தது. அதைக் கண்ணுற்றுப் பார்த்தபோது அவர் மகிமபங்கிவிட்டார். பிறகு அவரை நாயகம் நோக்கி, "ஆப் மௌலானா! இவ்வாசம் ஊதுவத்தியின் வாசனையல்ல. இது இயற்கையாகவே ஆண்டவனிடத்திலிருந்து உண்டாகிறது" என்று அக்கருத்து விளங்கும்படி பார்ஸியில், ஒரு பைதை மொழிந்தார்கள். அதின் பொருளாவது: "அத்தர்க் கடைக்காரனுக்கு அவனுடைய கடையை அடைத்து விடும்படிச் சொல்லுங்கள்; ஏனெனில் உண்மையாக நான் ஆண்டவனிடத்திலிருந்துண்டான பரிமளவாடை; இதைப்படிப் பட்டதானுல் கஸ்தூரி. அம்பர்வாடை முதலிய பரிமளவாசனைகள் இதற்குச் சமமாகமாட்டாது; அப்படிப்பட்ட வாடையை முகர்ந்து விட்டேன் என்றார்கள்" என்பதே. தலியல்லாஹு அன்ஹு.

4வது ஹிக்காயத்து:—ஸியருல் அவ்லியா என்ற கிதாபில் வருகிறதாவது: "ஒருபோது நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா றலியல்லாஹு அன்ஹு தங்களுடைய கம்பளிப்போர்வையை கூஜிமுஹியதீனுல் கூசானி, என்பவருக்கு நன்கொடையாய்க்கொடுத்தார்கள். அந்தக் கம்பளியிலிருந்து பரிமளவாசனை கமழ்ந்து கொண்டிருந்தது. அவர் அதை வாங்கிக் கண்மீதிலும் சிரசுமீதிலும் வைத்து அதை தமது வீட்டிற்குக் கொண்டுபோய்ப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். அதன் வாசனை எப்பொழுதும் போகாமல் இருந்தேவந்தது. அவர் அந்தக் கம்பளியை உயிருக்குச் சமானமாகப் பேணிக் கொண்டிருந்தார். அவ்வாறிருக்கையில் அவருக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. யாதெனில், இந்தக்கம்பளியின் வாசனை இடையில் ஏற்பட்டதாகுமென்றெண்ணினார். எனினும் சிறிது காலங்கள் சென்றும் அதில் பரிமளவாசனை சிறிதும் நீங்கவில்லை. அப்படி இருக்கும்போது ஒருநாள் அவர் அந்தக்கம்பளியின் வாசனையைச் சோதிப்பதற்காக அதைத் தண்ணீரில் கழுவினார். அப்படிச் செய்தும் அந்தக் கம்பளியின் வாசனைப் போகவில்லை. இவ்விஷயம் கவிசாஹிபுக்கு ஓர் ஆச்சரித்தை யுண்டுபண்ணிற்று. பிறகு அவர் நாயகம் நிலாமுத்தின் வலியா, உடைய கிதமத்தில்வந்து மேற்படி சமாச்சாரங்களை முற்றிலும் விவரித்தார். அப்போது நாயகமவர்கள் கண்ணீர்

வடித்தவர்களாகச் சொன்னதாவது: 'ஆய் காஜீயே, இந்த வாசம் அல்லாஹ்த்த ஆலாவுடைய முஹப்பத்தினுண்டாகும் வாசம்; இதை அவன் தன்னுடைய அஹ்பாபுகளான அவுலியாக்களுடைய தேகத்தில் இயற்கையாகவே உண்டாக்கி வைத்திருக்கிறன்' என்றுச்சொல்லி இதற்குதாரணமாக (பார்ஸியில்) சொல்லப்பட்டிருக்கிற ஒரு கவியை யாதாரமாகச் சொன்னர்கள். அதின் சாராம்சம் யாதெனில் 'இந்த மணமான வாடையானது பூங்காவனத்தோட்டத்திலிருந்து வரவில்லை; அதுஹபீபுடைய தெருவீதியிலிருந்து வருகிற வாடையேயாகும்' என்பதே" நபியல்லாஹ் அன்ஹு.

5-வது ஹிக்காயத்து :—நபஹாதுல்உன்ஸ், என்ற கிதாபில் வருகிறதாவது: "முல்தான், பென்ற ஊரில் ஒரு வியாபாரி யாத்திரை செய்யுங்காலத்தில் அவருடைய சாமான் முகலிபவைகளை வழித்திருடர்கள் கொள்ளையிட்டுக் கொண்டுபோய் விட்டார்கள். பிறகு அந்த வியாபாரி ஷெய்கு பஹாவுத்தீன் ஜகரியப்பா, றஹிமஹுல்லாஉடைய அருமைப் புத்திராகிய கலீபா ஸ்தானத்தை வகித்திருந்த ஷெய்கு ஸத்ருத்தீன் றஹிமஹுல்லாஉடைய சமூகத்தில் போய், 'நாயகமே! நான் திஹ்லிப் பட்டணம் போகலாமென்று நாடியிருக்கிறேன்; ஆகலால் தாங்கள் எனக்காக சிபாரீஸ் சீட்டு ஒன்று நிலாமுத்தீன் அவ்லியாவுக்கு எழுதிக் கொடுங்கள்; அவர்கள் என்னுடைய நிலைமையை கவனித்து வியாபாரத்துக்கு ஏதேனும் முதல் கொடுப்பார்கள்' எனச்சொல்லி, அவ்வாறே அவர்கள் அன்னவர் வேண்டிக்கொண்டபடி ஒரு நிரூபம் எழுதிக் கொடுத்தார்கள். அவர் அதை வாங்கிக்கொண்டு யாத்திரை செய்தவராக திஹ்லிக்கு வந்து சேர்ந்து நிலாமுத்தீன் அவ்லியா முன்பில் அக்காகிதத்தைக் கொடுத்தார். அவர்கள் அதைப் பார்த்துவிட்டு காதிமை நோக்கி, 'நாளை சுபுஹ் தொடுத்து (லுஹா)வுடைய வகுது வரையில் (முற்பகல்) வரையில்வந்து சேருகிற ரூபாயை இவர் வசம் ஒப்பித்து விடுங்க'ளென்று சொன்னர்கள். அவ்வாறே மறுநாள் காலை தொடுத்து முற்பகல் வரையில் சேர்ந்துள்ள ரூபாயை கணக்கிட்டுப் பார்க்க 20 இருபத்து நான்காயிரம் ரூபாய்களும், சில தங்கக்காசுகளு மிருந்தன. அவர் அதை எடுத்துக் கொண்டுபோய் விட்டார்" என்பதே. இன்னும், தாரீக்ஹிந்தி, என்ற கிதாபுடையவர் எழுதியிருக்கிறதாவது: "நாயகம் நிலாமுத்தீனவ்லியா அவர்கள் சன்னிதானத்தில் கல்வியைக்கற்கும் (தாலிபுல் இல்மூகள்) குர்ஆனை

மணப்பாடம் செய்யும் ஹாபில்கள், முரீதீன்கள், ஆகிபவர்களிருந் தார்கள். இவர்களைத் தவிர, அவர்களுடைய தர்பாரில் முவ்வா யிரம் புத்திசாலிகள் சம்பளம் வாங்கித் தின்கிறவர்களா யிருந்தார் கள். இவர்களைத் தவிர வழிப்பிரயாணிகளும் விருந்தாளிகளும் கணக்கின்றி வந்துபோய்க் கொண்டிருந்தார்கள்" என்பதே.

6-வது ஹிக்காயத்து :—" இம்லி சுல்தான் அலாவுத்தீன் பாதுஷா, தம்முடன் பிறந்தாரை எல்லாம் ஒரு ஊரைப் பிடித்துக் கைவசப்படுத்த அனுப்பி வைத்திருந்தார். வெகுகாலம் சென்றும் அவரின் உடன் பிறந்தார் சவுக்கியமாயிருக்கிறார் என்ற செய்தி பாதுஷாவுக் குக் கிடைக்கப் பெறாதது மனம் பேதலித்துவராகி, நாயகம் நிலாமுத்தீன் அவ்லியாவுடைய சன்னிதானத்தில் தன் உடன் பிறந்தாருடைய நிலைமையை அவர்கள் (கஷ்பு) என்னும் தெய்வீகத்தானத்தால் அறிந்து கொள்ளலாம் என்றெண்ணி ஒரு தூதனை யழைத்து அவ னிடத்தில், 'நீ நாயகம் நிலாமுத்தின் அவ்லியாவிடம் சென்று, நான் என் உடன் பிறந்தார் சென்ற வருடத்துக்குப் பட்டாளத்தோடு போக லாமென்று எண்ணி யிருக்கிறதாகவும், அதனால் அவர்கள் இந்த அடிமையினுடைய வீட்டுக்குவந்து அதற்குத் தக்கவாறுள்ள யோ சனை சொல்லக் கோருகிறேன் என்றும் சொல்' என்று அவனை யனுப்பினர். ஆகவே பாதுஷாவுக்கு அந்தரங்க மண்ணமானது. நாயகமவர்கள் இது விஷயத்தைக் குறித்தாவது தமது வீட்டுக்கு வருவார்கள் என்பதேயாம். பிறகு அந்தத் தூதன் அவர்களின் சன்னிதானத்தில் சென்று பாதுஷா எடுத்துரைத்த விஷயங்களைச் சொல்லவும், நாயகமவர்கள் அதைக்கேட்டு (முராக்கபது) வென் னும் தியானத்தில் இருந்து, அப்பால் தலையை உயர்த்தினவர்களாய் தூதனிடம், 'நீ சுல்தானிடம் போய் உன் உடன் பிறந்தார், அந்த ஊரைப்பிடித்து அங்கு கைப்பற்றிய பொருள்களுடனும், கல்ல வெற்றியுடனும் நாளையதினம் வந்து சேர்வார். என்று நான் சொ ன்னதாக சொல்' என்றார்கள். பின்பு தூதன் சுல்தானிடம் வந்து தான்கேட்ட செய்திகளை விவரிக்கவும் அவர் வெகு சந்தோஷமுற் றார். மறுதினமே அவர் சகோதரர் ஒட்டகையில் ஏறியவராக வெற்றி மாலையுடன் ஊர்வந்து சேர்ந்தார். பின்பு சுல்தான் அலா வுத்தீன் பாதுஷா, ஷேகுருக்காக 500 ஐநூறு தங்கக்காசுகள் நாயக மவர்கள் சன்னிதானத்திற்கு அனுப்பி வைத்தார். அதை நாயக மவர்கள் வாங்கி மிஸ்கீன்களுக்கும் பக்கீர்களும் பங்கிட்டுக் கொ டுத்துவிடும்படி கட்டளை யிட்டனர். நலியல்லாஹு அன்ஹு.

7-வது ஹிக்காயத்து:—றியாலுல் ஆரிபீன், எனுகிற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்கள் இரவுகளில் தங்கள் (ஹுஜ்ரா) வென்னும் அறையில் சென்று அல்லாஹுத்த ஆலாவை இபாதத்து செபவகிலேயே நாட்டம் வைத்துக் கண் விழித்திருப்பார்கள். அவ்வாறு விழித்திருப்பதால் அவர்களின் கண் சிவப்பாகவே யிருக்கும். கிற்க எந்த மனிதனும் அவர்களின் திருமுகத்தைக் காலையில் பார்த்தால் அவனே மயக்கம் மூடிக் கொள்ளும். அவர்களைப் புகழ்ந்து ஹஸரத் அமீர் குஸ்ரவ் (பார்ஸியில்) ஒரு பைத்துச் சொல்கிறார். அதன் சாராம்சமாவது: 'இன்றிரவு நீங்கள் எந்த ஹபீபுடன் இருந்திர்கள் இதுவரையிலும் உங்கள் கண்களில் மயக்கத்தின் அடையாளங்கள்காணப்படுகின்றனவே' என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

8-வது ஹிக்காயத்து:—ஒரு நாள் சில ஜனங்கள் ஒருமித்து நாயகம் நிலாமுத்தீன் அவ்லியாவின் சன்னிதானத்திற்குப் போக வேண்டுமென்ற எண்ணத்துடன், அவர்களில் ஒவ்வொருவரும் சிறிது வெகுமதிகளை யெடுத்துக்கொண்டு போகும்பொழுது, அவர்களில் ஒரு வாலிபன் மாத்திரம் நாயகத்தின் மகிமையைப் பரிசோதிக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் மண்ணைப் பொட்டணத்தில் கட்டி எடுத்துக்கொண்டு அவர்களுடன் நாயகத்தின் சன்னிதானத்தில் வந்து சேர்ந்தான. அப்பொழுது அவன் கூட வந்தவர்கள், தங்கள் தங்கள் வெகுமதிகளை நாயகத்திற்கு முன்னே வைத்தார்கள். அவ்வாலிபனும் தான் கொண்டுவந்த மண் பொட்டணத்தை முன்னே வைத்தான். பிறகு அவர்களின் காதிம் வெகுமதிகளை யெடுக்கும்போது அந்த மண் பொட்டணத்தை யெடுக்கையில் நாயகமவர்கள் அப்பொட்டணத்தை எடாதீர் என்று சொல்லி, மேலும் இது எனது கண்ணுக்குப் போடுகிற சுருமாவே யாகும்; ஆனால் இது மண் பொட்டணந்தான் என்று சொன்னார்கள். வாலிபன் நாயகத்தின் வார்த்தையைக் கேட்டு அதிக வெட்கித்தவனாய் அவர்களிடத்தில் தான் செய்த குற்றங்களை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொண்டான். இந்தச் செய்தி றியாலுல் ஆரிபீன் என்ற கிதாபில் எழுதிருக்கிறது. றலியல்லாஹு அன்ஹு.

9-வது ஹிக்காயத்து:—றியாலுல் ஆரிபீன், என்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்கள் மவுத்தாகிற காலம் சமீபமாயிருக்கும்போது ஒரு நாள் அவர்கள் கங்கை ஆறுடைய (கர்பாரில்) இருக்கிற காதிமை நோக்கி, 'ரூபா மூன்றை

வைகளில் எதுவு மிருந்தால் நமக்கு முன்னால் கொண்டுவந்து வைத்துவிடுங்; ஏனெனில் நாம் அகற்கு பாத்திரப்பட்டவர்களுக்கு அதைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்' என்று சொல்லவும், காசிம் 'நாயகமே! ரூபா இருந்தால் அன்றூடகம் செலவாகி விடுவது ஸகஜம்; அது மறுநாள் வரையில் மீச்சமாயிருக்கிறதில்லை; இப்போதும் ஆயிரம் தவசதானிய மூட்டைகள் மாத்திரம் சுபுஹில் கொடுப்பதற்காகவேண்டி கஞ்சித்தொட்டியில் தயாராயிருக்கின்றன' என்று சொன்னார். அதற்கவர்கள் சீக்கிரம் அவற்றை மிச்சமில்லாமல் மூழ்வதையும் செலவு செய்துவிடுங்; திரும்பக் கேட்கலைத்துக் கொள்ளாதீர்' என்று வற்புறுத்திவிட்டுப் பின்பு அவர்களுக்குள்ள உடைகளைக் கொண்டுவரச் சொல்லி அவைகளைத் தங்களுடைய கலீபாக்களுக்கு நன்கொடையாய்க் கொடுத்து ஒவ்வொருவரையும் ஒவ்வொரு இடத்திற்குப்போய்த் தரிப்படுத்படி கட்டளைக் கொடுத்தார்கள். அப்பொழுது அங்கு ஷெய்கு நஸீருத்தின் மஹ்மூத் ரோஷன் சிராகே திஹ்லவி, அவர்களும் அங்கிருந்தனர். அந்நேரத்திலவர்களுக்கு நாயகமவர்களால் எந்தப் போர்வையும் கொடுக்கப்படவில்லை. அதன்மேல் புதன் கிழமை தினம் நாயகமவர்களின் வபாத்து, ஸமீபமாப் வந்திடவும் அவர்கள், ஷெய்கு நஸீருத்தீன் மஹ்மூக் ரோஷன் சுராகைக் கூப்பிட்டுத் தங்களின் கிர்கா வென்னும்வஸ்திரவட்டத்தையும் ஆசாவையும் தஸ்பீ மணியையும் பாத்திரத்தையும் பாதக்குரட்டையும் இன்னும் தங்களுக்குச் சொந்தமான சில வஸ்துக்களையும், தங்கள் ஷெய்குமாரிட மிருந்து பெற்றுக் கொண்டவைகளையும் அன்னவருக்குக் கொடுத்துத் தங்களுடைய கலீபாஸ்தானத்தையும் கொடுத்துப் பிறகு அவர்கள் அல்லாஹுத்த ஆலாவினிடம் சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் ஹிஜிரி 725வது றபீயுல் ஆகிர்மீ 18வ புதன்கிழமைய தினம் பழைய திஹ்லிக்குச் சமீபமான கியாஸ்பூரில் அடக்கமானார்கள். றலியல்லாஹு அன்ஹு.

4-வது பஸல்:

(அமீர்குஸ்ரவ், சரித்திர வரலாற்றில் பேசும் பிரிவு.)

நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்களுக்கு அமீர்குஸ்ரு அதிகப் பிரியமுள்ளவர்களா யிருந்ததினால் அவர்களின் நடக்கைகளில் சிலவற்றைச் சுருக்கமாக் எழுதி முடிக்கிறேன். அன்னவர்கள் நாயகமவர்களின் சன்னிதானத்தில் வந்து மூரீதாகி மிக்க இஃலாகென்றும் நிர்ணயத்துடன் இருந்து அவர்களின் உதவிபினால்



நாயகம் நிஜாமுத்தீன் அவ்லியா வின் தர்கா

مظہر نامی مدراس

இது

ஹலரத்து நிலாமுத்தீன் அவ்லியா தர்கா ஷரீபு.

நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்களின் தர்கா திற்லி பட்டணத்தின் கோட்டைக்குச் சமீபமா யிருக்கின்றது. தவிர கபுர்ஷரீபின் மேல்பாகத்தில் அழகிய குமுஸ் கட்டடம் கட்டி வைக் கப்பட் டிருக்கிறது. அன்றியும் பைரூஸ்ஷா தகுலக், என்பவரின் அரசாசி காலத்தில் சந்தன மரத்தினால் விசித்திர வேலைப்பாடுகள் செய்து கபுர்ஷரீபை சுற்றிலும் நிருமித்தி வைக்கப்பட்டது. அதன் பிறகு நவாப் செய்யத் பரீத்கான் தர்காஷரீபை சுற்றி சங்குமர்மர் கல்லைப் பதித்து அலங்காரமாக்கி வைத்தார். இங்கே வருடந்தோ றும் ரபியுல் ஆக்கிர் மாதம் (17) பதினேழாந்தேதி உருஸ் ஆரம்பமாகி (18) பதினெட்டாந்தேதி காலையிலிருந்து மாலை வரையி லும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. அக்காலத்தில் வெகு ஜனங்கள் அங்கு கூடுகிறார்கள்.

அக்காலத்திலிருந்த (சித்துவான்)களுக் கெல்லாம் நடி நாயகமாகவும், வசனம், காவியம், முதலியவைகளை யெழுதுவதில் ஒப்பற்றவராயும், வெளியாங்கம் உள்ளாங்கம் முதலிய கலவிகளில் பெயர் பெற்றவராயும், (நிபாலத்து முஜாஹத்தது) என்னும் சாலிஹான அமல்களில் பிரயாசை எடுத்து அமல் செய்பவராயும், மேலான பதவியை வகித்தவராயும் இருந்தார். றலியல்லாஹு அன்ஹு.

1-வது ஹிக்காயத்து :—இன்னும் நிபாலுல் ஹூரீபின் அனீஸில் அஷ்பாஹ், என்ற கிதாபுகளில் எழுதி யிருக்கிறதாவது: ''ஹலரத் அமீர்குஸ்ரவ், பிறந்தபோது அவரின் தகப்பனார், அவரை யொரு புடவையில் பொதிந்தெடுத்து அக்காலத்திலிருந்த ஒரு மஜ்லூப் மாஹானிடத்தில் கொண்டுபோய்க் காட்டவும். அவர்கள் 'நீர் கொண்டுவந்திருக்கிற பிள்ளை இராஜாவைப் பார்க்கிலும் மேலான கீர்த்தியுடையதாகும்' என்று நன்மொழி கூறினர். அவ்வாறே அவர், எல்லாக் கல்விகளிலும் தேர்ச்சியடைந்து, (இல்மே, மூஸீகி) என்னும் சங்கீத சாஸ்திரத்தில் பெயர் பெற்றவரா யிருந்தனர். அதனாலேயே அக்காலந்தொடுத்து இது பரீபக்கம் சங்கீதம் பாடுகிறவர்களாகிய (கவ்வாலிகள்) கவிகள் படித்துக் கடைசியில் அவர்களின் பெயரையே கூறுகின்றனர். கவி அதிகாரங்களில் (றவீத்) வித்தானு) என்னும் ஒருவகையான சங்கீதாகத்தை முகன்முதல் இவர்தான் உண்டாக்கினரென்றும் சொல்லப்படுகின்றது. றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—ஹலரத் அமீர்குஸ்ரு, அவர்கள் ஒவ்வொரு இரவில் (தஹஜ்ஜத) என்னும் தொழுகையில் 7 ஏழு ஜுஸ் ஓதித்தொழுது வருகிறவர்களா யிருந்தார்கள். அவர்களைப்பற்றி நாயகம் நிலாமுத்தின் அவ்லியா சொல்லி இருக்கிறதாவது: ''நான் மற்றவர்களைக் காட்டினும் உம்மிடம் மிகவும் அன்புள்ளவனா யிருக்கிறேன்'' என்பதே. மேலும் ஹலரத் அமீர்குஸ்ரு அவர்கள் நாயகம் நிலாமுத்தின் அவ்லியா அவர்கள் ஒபாத்தாகிற காலத்தில் வங்காள தேசத்தில், சுல்தான் கியாஸுத்தினுடன் இருந்தார்கள் நாயகமவர்களின் ஒபாத்து சமாசாரம் கேள்விப்படவும், சுல்தானின் உத்திரவு இல்லாமலே திற்லிக்குப் பிரயாணப்பட்டு வந்து தங்கள் ஷெய்கு அவர்களின் திருகபுறஷரீபின் அருகாண்மையில் நின்று கொண்டு, ''ஸுபுஹானல்லாஹி, நான் அல்லாவைத் தூய்மையுடையவனாகக் கருதுகிறேன்; இந்தப் பூரணசூரியன் இம்மண்ணுலகின்

தீர்மானித்து விட்டது; இந்த குஸ்ரவ் என்பவன் இனிமேலும் உயிருடன் வாழ்ந்திருக்கிறான்" என்று சொல்லிக் கண்ணீர்விட்டழுது தன் முகத்தை கபுறுஷரீபின்மீது புரட்டி மதிமயங்கினவராகி பிறகு அதேநாளில் துக்கசாகரத்தில் மூழ்கி இரவும் பகலும் விசனமுற்று மூன்றரை மாதத்திற்குப் பிறகு அதே வருடத்தில் புதன்கிழமை தினமே ஓபாத்தாகி நாயகம் நிலாமுத்தினவ்லியாவின் கால்மாட்டில் அடக்கப்பட்டார். றலியல்லாஹு அன்ஹு. இந்தச் செய்தி நியாஉல் ஆரீபீன், அனீஸுல் அஷ்பாஹ், என்னும் கிதாபில் வருகிறது.

5-வது பஸல்:

(நாயகம் காஜா நஸீருத்தீன் மஹ்மூத்ரோஷன் ஷிராக், அவர்களின் சரித்திரம்)

தவாரீக், மஷபிகே, ஜிஷ்திய்யா, என்கிற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் காஜா நஸீருத்தீன் மஹ்மூதேரோஷன் சிராகே திஹ்லவீ, அவர்கள், ஹஸ்ரத் றலியல்லாஹு அன்ஹுவின் வம்சத்தைச் சார்ந்தவர்கள். (அவ்தஹி) என்னும் ஊரில்பிறந்து வளர்ந்தனர். இவர்கள், 20 இருபது வயதில் இல்முகளைப் படித்துட பரீபூரணமாகி அக்காலத்திலிருந்த அவ்லியாக்களின் கிதாபுகளை அடைந்து அன்னவர்களுடன் சாலிஹான அமல்களில் முயற்சித்து நடக்கிறவர்களாயிருந்து, 40 நாற்பது வருடங்கள் சென்றதற்குப் பின்னுல் தங்களுடைய (அவ்தஹி) என்னும் ஊரைவிட்டுப் பிரயாணமாகி நடந்தவர்களாய் திஹ்லிப்பட்டணம் வந்துசேர்ந்து, நாயகம் நிலாமுத்தீனவ்லியாவின் சன்னிதானத்தில்வந்து பைஅத்தும் கிலாபத்தும் பெற்று அவர்கள் ஓபாத்தானபிறகு, 33 முப்பத்தி மூன்றுவருடம் திஹ்லியில் த்ரிப்பட்டிருந்து, ஜனங்களுக்கு அல்லாஹுத்த ஆலா உடைய பாதையில் நேர்வழி காட்டினவர்களாயிருந்தார்கள்." என்பதாக றலியல்லாஹு அன்ஹு.

இன்னும் நியாஉல் ஆரீபீன், என்ற கிதாபில் வருகிறதாவது: "நாயகம் ஷெய்கு நஸீருத்தீன் ரோஷன் சிராக் திஹ்லி அவர்கள் (அவ்தஹி) என்னும் ஊரில் பிறந்து 9 ஒன்பதுவயது பாலகராயிருக்கும்போது அவர்களின் தகப்பனார் காலகதியடைந்தனர். பிறகு அவர்களின் தாயார் அவர்களை வளர்த்துக் கல்விகளைப் படிக்கவைக்கப் பெரும்பாலும் முயற்சித்தார்கள். அவர்கள் 25 இருபத்தைந்து வயதில் சகல இல்முகளையும் படித்துத் தேர்ச்சியடைந்து (நியா


அஜ்ரத் அமீர் குஸ்ரோ தர்கா
درگاه حضرة امير خسرو دهلوي

இது

ஹலரத்து அமீர் குஸ்ரவ் தர்கா.

ஹலரத் அமீர்குஸ்ரவ் அவர்களின் தர்காஷரீப் திஹ்லி பட்டணத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் நாயகம் நிலாமுத்தீன் அவுலியா அவர்கள் தர்காவுக்கு வடபாகத்தின் சமீபமாய் இருக்கின்றது. இது செய்யத்மஹ்மூதீ என்பவரால் சுற்று கட்டடத்துடன் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் அதன் நடுவில் பாரிய கும்முஸ் கட்டடம் ஒன்று கட்டி அதன் உள்பாகத்தில் லங்குமமர் என்னும் வெள்ளைக் கல்லால் இமாதுத்தீன் ஹசன் என்பவரால் பதிப்பித்து அதில் கட்டடம் கட்டி அது முடிந்த வருஷம் மாதம் தேதி முகலானதுகள் எழுதியிருக்கிறது. அங்கு வருடந்தோறும் துல்கா அதா மாதம் 17 பதினேழாந்தேதி முதல் உருஸ் அலங்காரம் ஆரம்பித்து வெகு நேர்த்தியாய் நடந்தேறி (18) பதினெட்டாந்தேதி மாலை முடிவாகின்றது. அதற்காக வெகு ஜனங்கள்வந்து கூடுகிறார்கள்.

லத்து) முதலிய நல்வணக்கங்களில பாரக்காயிருந்து, (ஜமாஅத்து) உடன் சேர்ந்து தொழுவது தப்பிப்போகாமல் இருப்பதற்காக இரண்டு மூன்று பகீர்களைத் தங்களுடன் கூட்டிக்கொண்டு காட்டு ஸ்தானங்களில் போய்ச் சில வருடங்களாக அங்கு தரிப்பட்டு, இரவெல்லாம் நின்று வணங்கினவர்களாயும், சதாகாலமும் நோன்பு உபவாசங்களிருப்பவர்களாயும், நோன்பு திறப்பதற்காக (கொச்சி) யிலைபைக்கொண்டு, இப்தார் செய்தவர்களாயு மிருந்தார்கள். நிற்க 40 வாற்பது வயதாகிபபோதலர் செய்வதைத்தெரிந்து பிரபாணஞ் செய்தவர்களாக இற்றியில்வந்து நாயகம் நிலாமுத்தீனவ்லியா அவர்களிடம் முரீதுபெற்று அங்கேயே தரிப்பட்டிருந்தார்கள். அப்போது நாயகம் அவர்களின் திருச்சமூகத்தைவிட்டு எங்கும் வெளியில் போகிறதேயில்லை. எனினும், தங்களுடைய ஊரில், முற்காலத்தில் (ராபி ஆபலரீ) யென்னும் பெயர் விளங்கிய நாயகிக்கு ஒப்பாகி, வணக்கத்திலும் தன்பாவை வெறுப்பதிலும் நிகரற்ற நாயகியாயிருந்த தங்களுடன் பிறந்த சகோதரியின் நிலைமையை விசாரிப்பதற்காக ஷெய்கு அவர்களிடம் உத்திரவுபெற்றுப் போய்வருகிறதாக வந்து திரும்பியில் ஷெய்கு புர்ஹானுத்தீன் கரீபு, என்பவர்களின் வீட்டில் இருப்பதாயிருந்தார்கள். இந்த ஷெய்கு புர்ஹானுத்தின் கரீப் அவர்களும் நாயகம் நிலாமுத்தின் அவ்லியாவின் கலீபாக்களில் ஒருவரேயாவர்." என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

1-வது ஹிக்காயத்து:—றியாலுல் ஆரிபீன், என்ற கிதாபில் எழுதல் செய்யப்பட்டிருக்கிறதாவது: "நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு புர்ஹானுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தொப்பியொன்று கொடுத்திருந்தார்கள். அது காணாமற்போயிற்று. இதற்கிடையில் ஒருநாள் நாயகம் நஸீருத்தீன் மஹ்மூத் அவர்கள், மூராக்கபாவில் இருக்கும் போது, ஷெய்கு புர்ஹானுத்தீன் கவலையுற்றவராய் அவர்களின் சமீபத்தில்வந்து உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஷெய்கு மஹ்மூத் றலியல்லாஹு அன்ஹு திபானமாகிப (மூராக்கபா)வை விட்டுத்தலையையுயர்த்திபோது அன்னவரின் மூகத்தில் விசனக் குறிபைக்கண்டு, அதன் விஷயத்தை அவரிடம்கேட்க, அதற்கு ஷெய்கு புர்ஹானுத்தீன் கரீப், நடந்திருக்கிற சமாச்சாரங்கள் முற்றிலும் விவரித்தனர். அப்பால் நாயகம் அவர்கள் மூராக்கபாவைவிட்டு நீங்கி அன்னவரை நோக்கி, 'தொப்பி தவறிப்போய்விட்டதென்று விசனிக்கவேண்டாம்; அதுவும் கிடைக்கும்; மேலும் ஷெய்கு அவர்

களிடமிருந்து வேறு உடையும் கிடைக்கும்' என்றார்கள். மறுநாள் ஷெய்கு புர்ஹானுத்தின் கரீப், நாயகம் நிலாமுத்தின் அவர்களின் சன்னிதானத்தில் போகவும், அவர்கள் தங்களுக்குரிய மூஸல்லா வை நன்கொடையாக அவருக்குக் கொடுத்தார்கள். அவர் அதை வாங்கிகொண்டு ஆனந்த உல்லாசத்தோடு தமது வீட்டிற்குவந்து மூஸல்லாவை வைப்பதற்காக வஸ்திரங்களை வைக்கும் பொட்டணத்தை திறக்க அதில், காணமற்போயிருந்த தொப்பியும் இருக்கக்கண்டு ஆட்டம் நிறைவேறினதற்காக அல்லாஹ்த்தஆலாவை ஷுக்ர் செய்தார்கள்." என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—அனீஸுல் அஷ்பாஹ், என்ற கீதாபில் வருகிறதாவது: "நாயகம் நஸீருத்தீன் மஹ்மூத் அவர்கள் சொன்னது யாதெனில் 'எனது ஷெய்கு நிலாமுத்தின் அவ்லியா அவர்கள் என்னைப் பட்டணங்களில் இருக்க வேண்டாமென்றும், ஜனங்களை வெறுக்க வேண்டாமென்றும் சொல்லியிருக்கும்பக்ஷத்தில் எனது (நிய்யத்து) பட்டணங்களில் குடியிருப்பது இராது; மேலும் நான் மலைகளிலும் காட்டு வனாந்தரங்களிலும் போய் அல்லாஹ்த்த ஆலாவை இபாதத்துச் செய்வதில் பிரியமாகியிருப்பேன்' என்று சொன்னார்கள். இன்னும் நாயகமவர்கள் தங்களுடைய ஷெய்கின் (தரீகாவின்படி) கலியாணமில்லாத பக்தியுடையவர்களாயிருந்தார்கள். ஆகவே நிலாமுத்தின் றலியல்லாஹு அன்ஹுவின் கலீபாக்கள், இவர்களின் ஞானத்தின் ஓர்மையையும், ஞானபக்தியையும் பார்த்து இவர்களைப் பெருமைப் படுத்துகின்றவர்களாய் இருந்தார்கள்" என்பதே றலியல்லாஹு அன்ஹு.

3-வது ஹிக்காயத்து:—ஒருநாள் நாயகம் மஹ்மூது சொவ்ஷன் சிராகு திஹ்லி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஹுஜ்ராவின் அறையில் இபாதத்தில் இருக்கிறபோது திடிரென்று தூறுபெறும் போக்கிரி ஒருவன் (அவன் தலையில் மண் விழக்கடவது) நாயகம் றலியல்லாஹு அன்ஹுவுடன் பகைவைத்தப் பொறுமை என்ற நெருப்பில் எரிகின்றவனாயிருந்தான். அவர்கள் தனியே இருக்கிறபோது, அவன் ஹுஜ்ராவில் வந்து கத்தியைக்கொண்டு அவர்களுடைய சரீரத்தைக்குத்தி 11 பதினோரு இடத்தில் காயமாக்கினான். இரத்தம் ஹுஜ்ராவில் நின்று வெளிப்பட்டு ஓடவும் அங்கே இருந்த காதீம்களுக்குத் தெரியவந்து, அவர்கள் அவனைப்பிடித்து வருத்தம் கொடுக்க எத்தனித்தார்கள். அப்

போது நாயகம் றலிபல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த நிலைமையிலிருந்தும் காதிம்களை நோக்கி, "நீங்கள் அவனுக்கு வருத்தத்தைக் கொடாதீர்கள்" என்று விலக்கி மேலும் நாயனுடைய தர்பில் நின்று உண்டாகிறவைகள் எல்லாம் நன்மையாக இருக்கும்' என்று சொல்லி அவனிடத்தில் இருபது பைசாதூட்டுக் கொடுத்து, மீகத்தி பைக்கொண்டு குத்துகிறபோது உன்னுடைய கை வருத்தத்தை அடைந்திருக்குமே' என்று சொல்லி, அதற்காக அவனிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். (சுபுஹானல்லாஹி) நிற்க இதற்குப்பின் நாயகம் மஹ்மூதுசோஷன் சிராடுத்திஹ்லி மூன்று வருஷம் ஹயாத்தாயிருந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

4-வது ஹிக்காயத்து:—நாயகம் நலிருத்தீன் மஹ்மூது சிராகுத் திஹ்லவி றலிபல்லாஹு அன்ஹு அவர்கள் வபாத்தாகிற வக்தில், மௌலானு ஜைனுத்தீன் அலிகுத்திஸ லிர்றஹு என்பவர் நாயகமவர்களுடைய முரீதும் கலீபாவுமாக இருந்தார். அப்போது அவர், நாயகமவர்களை நோக்கி, "முரீதின்களும், கலீபாக்களும், அதிகமாக இருக்கிறார்களே; தாங்கள் யாருக்காவது கலீபாஸ்தானத்தையும், கிர்காவாகிய பரிவட்டத்தையும் கொடுத்து ஸஜ்ஜாதா வென்னும் தங்கள் கலீபாஸ்தானத்தில் உட்காரும்படி செய்யுங்கள்" என்று சொன்னார். அப்பொழுது நாயகம் அவர்கள் எல்லாருடைய திருநாமங்களையும் யெழுதிக்கொண்டு வாருங்களென்று உத்திரவு செய்ய அவ்விதமே அவர்கள் கொண்டு வந்தார்கள் அப்போது நாயகமவர்கள் அவ்வர்களுடைய பேர்களையும் பார்த்துவிட்டு, "நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய ஈமானின் விஷயத்தை குறித்துத் துக்கம் கொள்ளுங்கள்" என்று சொல்லி, மேலும் "எனது ஷெய்கு அவர்களிடத்திலிருந்து எனக்குக் கிடைத்த கிர்கா வென்ற பரிவட்டத்தை நான் மரணமடைந்த பிறகு, என்னை (தபன்) செய்யும் நேரத்தில் என் நெஞ்சிலும், ஆசாவை பிள்ளைக்குழிபிலும், தஸ்பீஹை கலிமாவிசலிலும் சேர்த்து, மாக்கலேப பாத்திரத்தைச் செங்கலுக்குப் பதிலாகத் தலைக்குவைத்து நஅலென் என்னும் பாதகுறட்டை மடியில் வைக்கவேண்டும்" என்று சொல்லி வலியத்துச் செய்து பின்பு வபாத்தாகி விட்டார்கள். அப்பால் முரீதுகளும் காதிம்களும் நாயகம் நலீருத்தீன் மஹ்மூது சிராகுத்திஹ்லவி அவர்கள் சொல்லிய வலிப்பத்தின்படி செய்தார்கள். அவர்கள் ஹிஜ்ரி (757) எழுநூற்றி அன்பத்தேழாம் வருஷம் றம்லான் மாசம் (18) பதினெட்டாந்தேதி வெள்ளிக்கிறமை இரவில் வபாத்தாகினார்கள்.

அவர்களுடைய சபுறுஷரீபு, திண்டிவனத்தில் பழைய கோட்டை சமீப மாயுள்ள மலையின் அருகாண்மையில இருக்கிறது. றலியல்லாஹு அன்ஹு.

6-வது பயல்:

(நாயகம் காஜா செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் கைசூதராஸ் றலியல்லாஹு அன்ஹுவின் சரித்திரத்தில் பேசும் பிரிவு)

நாயகம் செய்யிது முஹம்மது பந்தா, நவாஸ், கைசூதராஸ் அவர்கள் காஜா ஷெய்கு கலீபுத்தின் மஹ்மூது சிராகுத்தின்லவீ றலியல்லாஹு அன்ஹுவின் கலீபாக்களில் முதன்மையானவர்கள். இவர்கள் இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹுவின் வம்மிசத்தில் வந்து சேருகிறார்கள் இவர்களின் தகப்பனாரின்பேர் செய்யிது யூசுபு மகைனி, என்பதாகும். பட்டப்பேர் ராஜுகதால் என்பதாகும். இவர்களின் முன்னோர்கள். (அரபீதேசத்திலிருந்து, (சுல்தான், அலாவுதீன், மஸ்வூதுஷாஹ்) உடைய ராஜாங்ககாலத்தில் ஹிந்துஸ்தான், தேசத்திற்கு முன்னேக்கிவந்து திண்டி இராஜதானியில் குடிபேறி ஜீவித்து வந்தார்கள். பின்னர் நாயகம் செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவ்வூரீலேயே ஹிஜ்ரி (720) வது வருடம் றஜபுமாதம் (4) தேதியில் பிறந்தார்கள் றலியல்லாஹு அன்ஹு.

7-வது ஹிக்காயத்து:—மஆனி சுல்தானி, என்கிற கிதாபில் மவ்லவி முஹம்மது சுல்தான், எகல் செய்திருக்கிறதாவது: "நாயகம் செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் 4 ராவு வருஷத்து பாலகராயிருக்கும்போது, திண்டிவனத்தில் பாதுஷாவாகயிருந்த முஹம்மத் தகலக், என்பவர் திண்டிவனத்திலிருந்தராஜதானியை தவ்லத்து ஆபாத், என்ற ஊரில ஏற்படுத்தி திண்டிவனத்தை அள்ளவர்களே அங்கு போகும்படி கட்டளை கொடுத்தார். அப்பொழுது நாயகம் அவர்கள் தகப்பனார் செய்யிது யூசுப்புத்தின்ஸ மீர் றஹ்மு, தங்களுடைய குடும்பத்தோடு ஹிஜ்ரி (725) எழுநூற்றி இருபத்தைந்தாம் வருடம் (றம்லான்) மாதம் 21 இருபத்தோராம் தேதி திண்டிவனத்தைவிட்டு புறப்பட்டு நடந்துவர்களாய் ராவுமாதத்திற்குப், பின் ஹிஜ்ரி (129) எழுநூற்றி இருபத்தி ஒன்பதாம் வருடம் (முஹர்றம்) மாதம் (17) பதினேழாம் தேதி வியாழக்கிழமை தினம் கூவலத்து ஆபாதில், வந்து சேர்ந்து தரிப்பட்டார்கள். அவ்விடத்திலேயே அவர்களுக்குக் கொஞ்சகாலத்தில் உண்டாயின. நிற்க

درگاة خضرة محمود چراغ دهلوي.
நக்ஷி அஜ்ரத் ரோஷன் சிராக்
தெஹ்லி

இன

ஹலாத்து ரோஷன் ஷிராக் தர்கா

நாயகம் ஹலரத் ரோஷன் ஷிராக் நிஹ்மலி அவர்களின் கபுர் ஷரீபின் மேல்பாகத்தில் குமுஸ் கட்டடம், கட்டி கபுர்ஷரிபைச் சுற்றி ஸங்குமர்மர்கல் பதித்து 12 வாயல்கள் அமைத்து கிராதி யிட்டு உள்ளே வரப்போக வழி ஏற்படுத்தி யிருக்கிறது. 'இந்த தர் காவை பைரூஸ்ஷா தகுலக், என்பவர் கட்டினதாக அதில் எழுதப் பட்டிருக்கிறது. தவிர அவர்கள் கபுர்ஷரீபின் சமீபமாய் இரண்டு குமுஷ் கட்டடங்கள் கட்டி ஒன்றில் ஹலாத் பரீதுத்தீன் கஞ்சிஷக் கர், அவர்களின் பௌத்திரர்களில் ஒருவருடைய கபுர் இருக்கிறது. மற்றொன்றில் நாயகம் ஹலரத்ரோஷன் ஷிராக் நிஹ்லி அவர்க ளுடைய கலிபாக்களில் ஒருவரான மகுதூம் ஜைனுத்தீன் என் பவரின் கபுர் இருக்கிறது. இதன்றி அந்த இடத்தில் அநேக ருடைய புதியதும், பழையதுமான கபுருகள் இருக்கின்றன. அல் லாமலும் அங்கு ஒரு பெரிய மஜீதும் இருக்கின்றது. இவைகளைச் சுற்றிலும் ஐந்து வாயில்களுள்ள பெரிய மதிற்சுவரும் எழுப்பப் பட்டிருக்கிறது. இங்கே பிரதி வருடமும் சமுலான் மாதம் 18 பதினெட்டாந்தேதி உருஸ் அலங்காரம் வெகு நேர்த்தியாய் நடை பெறுகிறது. இதற்காக வெகு ஜனங்கள் வந்துகூடுகிறார்கள்.

நாயகமவர்கள் சிறு பாலகராயிருக்கும்போது கல்விபடிக்க ஆரம்பித்து 6 ஆறுவயதில் தொழுகை நோன்பு முதலான வணக்கங்களைத் தொடர்ந்து நடந்தவர்களாயிருந்து ஏழாவது வயதில் குர்ஆன், ஷரீபை மனப்பாடம் ஓதிப்முடித்து தங்கள் பாட்டனாரிடம் இல்முகளைப் பழித்து வந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ்ல் ஹுசைனி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், இல்மு படிக்கும் காலத்தில், மிஸ்பாஹு, குதூரி, என்ற இரண்டு கிதாபுகளை ஓதிக்கொண்டு இருக்கும்பொழுது ஒருமனிதன் அவர்களிடம் ஒரு கேள்விகேட்டார். என்னவெனில், தொழுகையில் (ருகூஉ, விட்டு (ஸஜ்தா,வுக்குப் போனால் முந்தி பூமியின்மேலில் கையை வைக்கிறதா, அல்லது முட்டுக்காலை வைக்கிறதா? ஸஜ்தாவைவிட்டு நிலைக்கு வருகிறபோது முந்திக்கையை எடுக்கிறதா? அல்லது முட்டுக்காலை எடுக்கிறதா? என்று கேட்டார். அப்பொழுது நாயகமவர்கள் இந்த மஸ்அலாவை ஓதவில்லை. ஆனதால் இந்தக் கேள்வி கேட்ட மனிதனுக்கு, கொஞ்சநாளைக்குப் பின்னால் அதற்கு ஜவாபு சொல்லுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பின்னர் மஸ்ஜிதின் மூலையிலிருந்து கொண்டு இந்த மஸ்அலாவைப்பற்றி யோசனை செய்தார்கள். அப்படி இருக்கும்போது இதற்கிடையில் ஒரு பெரிய மனிதர் (மஸ்ஜிதில்)வந்து இரண்டு ரக்அத்து தொழுதார். அப்பொழுது நாயகமவர்கள், இந்தப் பெரிய மனிதர் எவ்விதமாகக் கைகளால் வைக்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டு அதின்படியே கேள்வி கேட்டவருக்கு ஜவாபு கொடுக்கலாமென்று எண்ணிப் பார்த்திருந்தார்கள். பின்பு அந்தப்பெரியோர்கள் தொழுதுவிட்டு உடன் மறைவாகிடவும் நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இந்தப்பெரிய மனிதர் செய்கையின் மூலமாய் அன்னவருக்கு ஜவாபு சொல்லும் விதத்தைத் அறிந்துகொண்டு சந்தோஷமாகித் தங்கள் பாட்டனாரிடத்தில்வந்து அந்தப் பெரியோர்களின் சூத்தைக் குறித்துச் சொல்லவும் அங்குவந்து தொழுதவர்கள் நிலாமுத்தீன் அவ்லியாவாக இருக்குமென்று அவர்கள் சொல்லே உண்மையாக்கி வைத்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

3வது ஹிக்காயத்து:—நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ்ல்ஹுசைனி, றலியல்லாஹு அன்ஹுவின் தகப்பனாரும் பாட்டனாரும் நிலாமுத்தீன் அவுலியா அவர்களின் முரீதின்களில்

சேர்ந்தவர்களாக இருந்தார்கள். நாயகம் பந்தாகவாஸ் அவர்கள், அவ்விருவரிடமும் நாயகம் நிலாமுத்தீன் அவ்லியா அவர்களின் கீர்த்திமகிமைகளைக் கேட்டுத் தாங்களும் அவர்களிடம் மூரீதுபெற ஆசை கொண்டிருந்தார்கள். இதற்கிடையில நிலாமுத்தீன் அவுலியா அவர்கள் வபாத்தாகி இருந்தார்கள். பின்னர் நாயகமவர்கள் அந்த ரங்கமான இல்முகளை ஹாஸீல் செய்கிறதின் ஆசையை மனதில்வைத்து, நிலாமுத்தீன் அவுலியா றலியல்லாஹு அன்ஹுவின் கலிபாவான ஷெய்கு நஸீருத்தின் மஹ்மூது ரோஷன் சிராகுத்திஹ்லி, றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம்போக எண்ணம் கொண்டார்கள் அப்பொழுது நாயகமவர்களுக்கு 11 பதினோரு வயதாகியிருந்தது. இது நிற்க அவர்கள் தகப்பனார் ஹிஜ்ரி 736 எழுநூற்றிமுப்பத்தாரும் வருடம் ஷவ்வால், மாதம் 5-ந்தேதி தவ்லத்து ஆபாதில் வபாத்தாகிவிட்டார்கள். அவர்களை, தவ்லத்து ஆபாதின் கோட்டையிலிருந்து மூன்று காதவழி தூரத்தில் நாயகங்களான மூதாக்கள் தபன் செய்யப்பட்டிருக்கிற ஹலீரு என்ற மக்பரு, கட்டிடத்தில் அடக்கம் செய்தார்கள். பிறகு நாயகவர்களுடைய தாபாருத்து திஹ்லி வர கேரிடவும் இவர்கள் அவர்களோடு பிரயாணப்பட்டு திஹ்லி வந்து சேர்ந்தார்கள். பிறகு நாயகவர்கள் ஹிஜ்ரி 736 எழுநூற்றி முப்பத்தாரூவது வருடம், ரஜபு மாதம் 3 மூன்றும் தேதி பதினாறு வயதில் நாயகம் ஷெய்கு நஸீருத்தின் மஹ்மூது றலியல்லாஹு அன்ஹுவிடம் தங்கள் சகோதரரான ஹலாத்து செய்யிது சத்தார் றஹிமஹுல்லாஹு உடன் பைஅத்து மாதிரம் பெற்று (ரியாலத்து முஜாஹதா) முதலிய சாலிஹான வணக்கங்களில் பறக்காக இருந்துகொண்டி, ஷர்புத்தீன் கதிலி, மவ்லானா நூஜுத்தின் அப்துல்முக்ததிர், ஆகிய இருவர்களிடத்திலும், மற்ற உலமாக்களிடத்திலிருந்தும் இல்முகளைப் படித்து வந்தார்கள். பின்னர், அந்தரங்கமான பாதின் இல்முகளை ஹாசில் செய்வதிதின் பேரில் முன்னேக்கி பைஅத்து ஆனது முதல் 21 இருபத்தொரு வருடமும், 3 மாதமும் ஷெய்கு அவர்களுடைய ஹயாத்து வரையிலுமிருந்து, (ரியாலத்து முஜாஹதாத்து) அன்னவர்களால் செய்வித்துப் பரிபூரணம் அடைந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

4-வது ஹிக்காயத்து:—ஒருநாள் ஒருமனிதன் நாயகம் செய்யிது முஹம்மது பந்தாகவாஸ் றலியல்லாஹு அன்ஹுவினிடம், "நீங்கள் எந்த மகாம்வரையில் சேர்ந்திருக்கிறீர்கள்" என்று கேட்க அதற்கவர்கள், "நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல

மவர்களின் மகாம்சமீபம் வரையில் வந்திருக்கிறேன்; ஆனால் அதை வீட்டுக் கடக்க நாடியும் அது முடியாத காரியமாக இருக்கிறது" என்று சொன்னர்கள். றலியல்லாஹு அன்ஹு.

5-வது ஹிக்காயத்து:—இன்னும் நகல் செய்யப்பட்டிருக்கிறது: "ஒருநாள் நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ், றலியல்லாஹு அன்ஹு, தங்கள் ஷேக்குளீருத்தீன் மஹ்மூது சிராகுத் தில்லவீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பல்லக்கில் ஏறி நாயகம் காஜா குதுபுத்தீன் றலியல்லாஹு அன்ஹுவின் கபுறு ஷரீபில் பாதிஹா ஓதுவதற்காக வேண்டிப்போகையில் மூரீதீன்களில் நின்றும் வழமைப்பிரகாரம் பல்லக்கைத் தூக்குகிறவர்கள், தூக்கித் தோளில் வைக்க நாடினர்கள். அப்பொழுது நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹுவும், அவர்களோடு கூடித் தூக்க நாடினர்கள். அப்போது ஷேக்கு அவர்கள் நாயகம் றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்து, 'ஆப் செய்யித முஹம்மதே! நீர் தூக்கவேண்டாம்; ஏனெனில் நீர் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய கோத்திரத்தார்களில் வந்தவராயிருக்கிறீர்' என்று சொல்ல, நாயகம் றலியல்லாஹு அன்ஹு கண்ணீர்விட்டு அழுதவர்களாய், 'நாயகமே! நான் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுவின் வம்மிசத்தில் வந்தனாயிருக்கிறேன்; தாங்கள் ஹஸன், றலியல்லாஹு அன்ஹுவின் வம்மிசத்தில் வந்தவர்களாயிருக்கிறீர்கள்; நான் உம்மத்துகளுக்குப் பாத்திரவான்; தாங்கள் விலாயத்து ஸ்தானத்தை வகித்தவர்களில் முதன்மையானவர்கள்; நான் மூரீது; தாங்கள் ஷேக்கு; நான் ஊழியம் செய்யும் காதீம்; தாங்கள் ஊழியத்தை ஏற்றுக்கொள்ளும் மக்தூம். ஆனதால், ஆலத்தை சிருஷ்டித்த அல்லாஹ்த்தஆலா தங்களுக்கு ஒவ்வொரு விதத்திலும் மேன்மை கொடுத்து மரியாதை செய்யும்படி கட்டளையாக்கி வைத்திருக்கிறான். அப்படியிருக்க, நான் ஊழியத்தைவிட்டு மஹ்ரூமெனும், நற்பேர் இல்லாதவனாக மாட்டேன்' என்று சொன்னர்கள். இவ்வாறு சொல்லவும் ஷேக்கவர்கள், நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் மெய்யான வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷத்துடன், 'ஆய் எனது அருமையானவரே! இனிமேல் உமது இஷ்டம்போற் செய்யும்; என்று சொன்னர்கள். அந்நாள் முதல் அவர்கள் பல்லக்குத் தூக்குகிறவர்களோடு சேர்ந்து தூக்க ஆரம்பித்தார்கள்." றலியல்லாஹு அன்ஹு.

பாயிதா:—"ஆய் எமது ஆஷிகான தாலிபீன்களே! மூரீது, ஷைகில் நின்றும் பெற்றுக்கொள்பவை எவையெனில் அவர், எந்த (வலீபா) அமல்களைக் கட்டளை யிடுவாரோ அவற்றின்பேரில் சர்வ காலமும் அமல்செய்து வருவதும், தொழுகை, நோன்பு முதலிய பர்ளான வணக்கங்களைத் தொடர்ந்து நடப்பதும் ஷரீஅத்துக்கு அணுவளவும் தவறி நடக்காமலிருப்பதும், அவருக்குப் பணிவிடை செய்வதுமேயாம். இவைகளைக் கொண்டுதான் மூரீது நிரப்பமான பதவியைப் பெற்றவனுவான்" என்பதே. இதற்காகத்தான் பார்ஸி யில் ஒருபைத்து சொல்லப்பட்டிருக்கிறது: அதின் அர்த்தமாவது: "எவனொருவன் கித்மத்து, என்னும் பணிவிடை செய்வானே அவன் கித்மத்தைப் ஏற்றுக் கொண்டவனுவான்; ஒருவன் தன்னை மேலாகக் கண்டானுகில் நற்பேர் இல்லாதவனுவான்" என்பதாம்.

6-வது ஹிக்காயத்து:—ஒருநாள் நாயகம் செய்யிது முஹம்மது பந்தாநவாஸ் அவர்கள் தஹஜ்ஜத்து தொழுகைபிறகு சிறிது தூக்கம் தூங்கிக் கொண்டிருக்கையில் அவர்களின் தகப்பனுர் கனவில்வந்து, "ஆய் எனது அருமை புத்திரரே! நமது வீட்டு முற்றத்தின் வேப்ப மரத்தின்கீழ்ச் சுற்றிலும் ரூபாவும், ஒரு தேக்ஷாவில்தங்க நாணயங்க ளும் வைத்துப் புதைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நீர் எடுத்துச் செலவு செய்து கொள்ளும்" என்றார்கள். பிறகு அவர்கள் விழித்து ஷெய்கு நஸீருத்தீன் றலியல்லாஹு அன்ஹுவினிடம்வந்து சொற் பனத்தில் கண்ட விஷயங்களை விண்ணப்பஞ் செய்யவும், ஷெய்கு அவர்கள் முறுகபாவிலிருந்து, தலையை உயர்த்தி "இது சொற்பன மில்லை; பஷாரத்து, என்னும் நன்மாறுபமா யிருக்கும்" என்று சொ ல்லி, 'அந்த இடத்திலிருக்கிறதை நீர் எடுத்துச் செலவு செய்யும்' என்று சொன்னார்கள். அதற்கு நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், "நாயகமே! நான் தாழ்ந்த துன்யாவுடைய பணங்காசு திரவியங்களினத்தையும் விட்டு விட்டேனே; அவ்வாறிருக்க ஏனெ னக்கு இந்த தவ்லத்து" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அத ற்கு ஷெய்கவர்கள், "நீர் தாழ்ந்த துன்யாவின் நிஃமத்தைவிட்டு நீங்கினவராக இருக்கிறது உண்மையே; ஆயினும் பிள்ளைகள், தாய் தந்தையர் உத்திரவை ஏற்று நடப்பது கடமையாக இருக்கிறது; ஆதலால் நீர் அங்குச்சென்று புதைத்து வைத்துள்ள முகலே வெளி யில் எடுத்து அல்லாஹுத்தஆலாவின் பாதையில் செலவளிப்பதுகொ ண்டு (ஆமால் நாமாவில்) ஸவாபு எழுதப்படும்" என்றார்கள். அப் போது நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கவர்க

ளின் உத்தரவுக்கிணங்கி அங்குச்சென்று புதைத்துள்ள நிதியங்களை வெளிப்படுத்தி மிஸ்கீன்களுக்கும் பகீர்களுக்கும் ஸதகா கொடுத்துவிட்டுக் குளித்து வேறு வஸ்திரமணிந்து, உலகதன்பம் நீங்கிச் சௌக்கியம் உண்டானதற்காக இரண்டு ரக்அத்து நமீலும் தொழுதார்கள். றலியல்லாஹு அன்ஹு.

பாயிதா:—"சகோதரர்களே! இந்த அவலியாக்களான நாதாக்கள் தாழ்ந்த துன்யாவை, பாம்பும் நெருப்பும் இருக்கும் இடமாக பாவித்து இதை வெறுத்து இரவும்பகலும் இபாதத்தில் கண்களை விழித்து மேலான பதவியைப் பெற்றார்கள். அடியான் கல்பை அனுனியப்படுத்து, நானென்கிற கெட்டகுர்குணங்களினின்றும் நீக்கி, நப்சு ஹவா, வென்ற மன இச்சைவெறுத்து நற்குணங்களைத் தொடர்ந்து நடப்பதுதான் துன்யாவை வெறுக்கிற தென்பதாம். இதற்கிணங்க, மஸ்னவி ஜலாலுத்தீனிரூமி, மஸ்னவி இதாபில் ஓர் பைத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதின் அர்த்தமாவது: "அல்லாஹுத்தஆலாவின் திக்ரைவிட்டு மறந்திருப்பதுதான் துன்யாவாகும். பணங்காசு நிதியங்கள் பெண்சாதி, பிள்ளைகள், அல்ல" என்பதாயம்.

றிவாயத்து:—நாயகம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறதாவது: "மனிதர்களே! நீங்கள் துன்யாவுக்கு பயப்படுங்கள்; அது, ஹாரூத், மாரூத், இவர்களைவிடமெத்த சூனியம் செய்யும் வஸ்துவாயிருக்கும்" என்பதாக. இன்னும் ஓரு றிவாயத்தில் "துன்யாவும் அதிலுள்ளதும் லஅனத்து, செய்யப்பட்டனவா யிருக்கும். அதில் நின்று அல்லாஹுத்தஆலாவுக்கு ஆவதெதுவோ அஃதொழிய" என்று வந்திருக்கிறது. இன்னுமொரு றிவாயத்தில், "அல்லாஹுத்தஆலா உடைய திக்ரு ஒழிய" என்று வந்திருக்கிறது. றலியல்லாஹு அன்ஹு.

7-வது ஹிக்காயத்து:—நூகல் செய்யப்பட்டிருக்கிறது: சுல்தான் பைரோஸ் ஷாதக்லக், என்பவர் ஒருநாள் தம்முடைய அமீர்களில் ஒருவராகிய முஹம்மது ஜஅபர், என்பவரின் மூலமாய் நாயகம் செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹுக்குச் செய்தி சொல்லியனுப்பினர். அதர்வது: "நாயகமே! நிஜ்லி பாதுஷாக்களிடம் தங்கள் பெரியோர்களான மூதாக்கள் சதாநினமும் கொஞ்சுதல் வைத்துக்கொண்டு மேன்மையான கீர்த்திகளைப் பெற்றுவந்தார்கள். ஆனதால் தாங்களும் என்னிடத்தில் வருவீர்களாகில் நான் தங்களை எனது அமீர்களில் ஒருவராகச் சேர்த்துக்

L 21334

தங்களுக்கு வக்து அபத்தமாகப் போகாமல் இருக்கும்படியான வே லையைக் கொடுக்கிறேன்" என்பதே. நாயகம் றலியல்லாஹு அன் ஹு அவர்கள், வந்த தூதனிடம் சமாச்சாரம் கேட்டுச் சொன்ன தாவது: "நீ முதலில் பாதுஷாவுக்கு என்னுடைய சலாம் சொல்; பின்பு நீ பார்க்கண்டவற்றைச் சொல்; நான் முகலில் துன்யாவுடைய பணக்காசு திரவிய சாமான்கள் யாவற்றையும் சர்ப்பமும், நெருப்பும் இருக்கும் இடங்களாக அறிந்திருக்கிறேன்; இரண்டாவது காஜா கலீருத்தீன் மஹ்மூது றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அடிமைத்தனம் செய்வதற்கு முன் இந்த வாழ்வும் அதிகாரத் தன் மையும் ஒரு விகாகுமா? நான் பகீரு; என் வேலை எல்லா மனிதர்க ளுக்காகவேண்டி துஆ செய்வதுவே" என்று சொல்லி அவனை யனுப்பிவிட்டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

8-வது ஹிக்காய்த்து:—நகல் செய்யப்பட்டிருக்கிறது: திஹ்லி கோட்டையில் ஒரு இடத்தில் ராஜா அசோகு, காலத்தில், செப்புப் பலகையில் எழுதப்பட்டிருந்ததின் கருத்தாவது:—"இவ்விடத்தில் வெகுகாலமாக ஜவாஹீர்களென்னும், ரத்தினங்களுடைய கஜானு புதை த்து வைக்கப்பட்டிருக்கின்றது" என்பதே ஆயினும் அது இன்ன விடத்திலிருக்கிறதென்று எழுதிய ஆசிரியர் இஷாரா காட்டவில்லை. அதினால் எவருக்கும் அது தோன்றவில்லை. கடைசியில் புத்தியின் கியாசுமூலமாய் ஆங்காங்கு தோண்டியும் அதிருக்கிற இடமே தென் படவில்லை. பிறகு சுல்தான், நாயகம் கலீருத்தீன் மஹ்மூது ரோஷன் சிறாகுத்திஹ்லி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சன்னிதானத் திற்குப்போனால் அவர்கள் கஷபினால் சொல்வார்களென்று நிட்டம் செய்து, "இந்த கஜானு தங்களால் வெளிப்பட்டதானால் அதில் நின்று பத்திலொருபாகம் தங்களுக்குக் கொடுக்கிறதாய் நீங்கள் ஷரத்து செய்துகொண்டிருக்கிறீரும்" என்று அவர்களுக்கு ஒரு தூதனிடம் சமாசாரம் சொல்லி யனுப்பினார்கள். அந்தத் தூதன் ஷெய்கவர்களிடம் வந்து அதைத் தெரிவித்தான். ஷெய்கவர்கள் குறுஞ்சிரிப்பு சிரித்தவர்களாய், "திஹ்லி ஊரின் மூலாதார விஷ யங்கள் திஹ்லி ஊரிலிருப்பவர்களுக்குத்தான் தெரியும்; ஆதலால் அவர்கள்தான் அதை சரிவரக் கண்பிப்பார்கள்; இதை நீ பாது ஷாவினிடம்சொல்" என்று தூதனிடம் சொல்லி அப்பால், செய் யித முஹம்மது பத்தா கவாஸ் றலியல்லாஹு அன்ஹுவைக் கூப் பிட்டு அவர்களிடத்தில் "ஆப் பாபா பத்தியார்! நாமும் நீரும் சுல் தான் ஊரிலிருக்கிறோம், இன்றையதினம் அவருக்கு இப்படி கோரிட்

டிருக்கிறது; ஆனதுபற்றி நீர் அதில் போக்கு சாக்கு சொல்லாமல் அதைக்காட்டிவிட்டு வாரும்" என்று சொல்லவும், நாயகம் செய்யிது முஹம்மது பந்தா. நவாஸ் றலியல்லாஹு அன்ஹு அதற்கிசைந்து கோட்டைக்குப்போய் எந்தவிடத்தில் பலகை இருந்ததோ அதைப் பார்த்துவிட்டு, சோபா அறைக்குள்வந்து, அதின் முகட்டை நன்றாகப்பார்த்து, பலகையில் எழுதியிருக்கிறபடி முகட்டின் நடுவில் தோண்டினால் அதில் நின்றும் கஜானு வெளிப்படுமென்று சொன்னார்கள். மந்திரி சுல்தானுடைய சந்தேகத்தை நீக்குகிறதற்காக வேண்டி நாயகம் றலியல்லாஹு அன்ஹு வினிடம் பலகையில் எழுதி இருக்கிறதின் கருத்தை அறிய நாடினார். அவ்வாறே நாயகமவர்கள் அதைத்துலக்கி வாசித்தார்கள். பிறகு முகட்டை உடைக்கவும் கஜானு வெளியேவந்தது.

பின்பு நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அங்கு இருந்தவர்களுக்கு ஸலாம் சொல்லி அவர்களிடம் உத்தரவுபெற்று ஷெய்கு அவர்களிடம் வந்து எல்லாச் செய்திகளையும் விண்ணப்பஞ் செய்தார்கள். மறுதினம் பாதுஷா வாக்குறுதி செய்தபடி பத்து லொருபங்கு கஜானுவில் நின்று ஷெய்கு அவர்கள் சமுகத்திற்கு அனுப்பிவைத்தார். அப்பொழுது ஷெய்கவர்கள் "இது செய்யிது முஹம்மது வந்தாநவாஸ் றலியல்லாஹுவுக் குரியதாகும்" என்று சொன்னார்கள். அதை நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிந்து ஷெய்கவர்களிடம் வந்து, "நாயகமே! அடிமை தங்களுடைய உத்தரவை நிறைவேற்றப் போனேனேயன்றி ரூபா பெறுவதற்கல்ல; ஆதலால் இந்த ரூபா எனக்கு எதற்காக" வென்று சொல்ல ஷெய்கவர்கள், "நீர் வாங்கி பகீர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிடும்" என்று சொன்னார்கள். நாயகமவர்கள் திரும்பவும் "சுல்தான் தங்களுக்கு ரூபா நிறைக கொடுப்பதாக வதாதா செய்திருந்தார்; ஆதலால் இப்பொழுது தாங்கள் அதை எவ்விதம் செய்ய நாடுகிறீர்களோ அப்படியே செய்து விடுங்கள்; இடையில் நான் தரகுக்காரனாக இருப்பதை நாடவில்லை" என்றார்கள். கடைசியில் வந்த ரூபாக்களை ஷெய்கு அவர்கள் சுல்தானுக்குத் திரும்ப அனுப்பி வைத்து பகீர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிடும்படி ஏற்பாடு செய்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

9-வது ஹிக்காயத்து:--நகல் செய்யப்பட்டிருக்கிறது: நிஜலி

பட்டணத்தில் சுல்தானை இருந்தவரின் மனவருத்தத்தினால் நாயகம் ஷெய்கு நஸீருத்தீன் சிராகுத்திஹ்லவி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திம்மிபைவிட்டு டஹ்டா, என்ற ஊருக்குப்போக கேரிட்டபொழுது, ஷெய்கு நஸீருத்தின் ரோஷன் சிராகுத்திஹ்லவி அவர்கள் பல்லக்கில் ஏறி மன்ஸிலைக் கடந்தவர்களாய், பட்டணத்திற்குச் சமீபமாய்ச் செல்லவும், அந்நேரத்தில் பல்லக்கு நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு வின் புயத்திலிருந்ததினால் அவர்களின் தலைமுடிகள் கொம்பின்கிழ் அகப்பட்டுப் பிரிந்தன. ஆயினும் அவர்கள் மரியாதைக்காக வேறு புயத்தில் மாற்றவில்லை. எப்பொழுது ஷெய்கவர்கள் நார்னூனின், எல்லையைச் சேர்ந்தார்களோ அந்த வக்தில், அங்கு சமாதியாயிருந்த ஷெய்குமுஹம்மத் நார்னூனி, றஹிமஹுல்லாவின் அருளினால் அவர்கள் அச்சங்கதி தெரிந்து பல்லக்கை விட்டிறங்கிப் பார்க்க நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் தலைமுடி பிரிந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் ஷெய்கவர்கள் நாயகம் றலியல்லாஹு அன்ஹுவை நோக்கி "ஆப் பாபர! நீர் சவுக்கியமாயிருக்கிறீர" என்றார்கள். அதற்கவர்கள் ஆம் என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அப்பொழுது நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் சகோதரர் மகனர் செய்யித அலாவுத்தின் றஹிமஹுல்லா, ஷெய்கு அவர்களிடம் "நாயகமே! இவர்களின் (ஜுபுல்) முடிகள் பல்லக்கின் கீழ்மடிந்து பிரிந்தன; ஆகிலும் இவர்கள் அதற்காக வேறு புயம் மாற்றவில்லை. அதின் காரணத்தினாலேயே இரத்தம் ஓடுகிறது" என்று சொன்னர். அதின்பேரில் ஷெய்கவர்கள் சந்தோஷங்கொண்டு நாயகம் றலியல்லாஹு அன்ஹுவை, 'கழுத்தோடு கழுத்தைக்கட்டி அணைத்துக்கொண்டு பர்ஸியில் ஒருபைத்து சொன்னர்கள். அதின் பொருள் என்னவெனில், "எவனேனும் இந்த செய்யித முஹம்மது பந்தாநவாஸ் அவர்களுக்கு அடிமையாக ஆகிவிடுவானில் அல்லாவின்பேரில் சத்தியமாக அவன் திடனுள்ள ஆஷிகீன்களின் பதவியைப்பெற்றவனாகி விடுவான் என்பதில் சந்தேகமில்லை" என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

10-வது ஹிக்காயத்து :—நிவ்ரத்து செய்யப்பட்டிருக்கிறது: நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கைசூதாரால், என்று பட்டப்பேர் வந்ததற்குப் பல்வாறாய் நிவாயத்துகள் வந்திருக்கின்றன. அவற்றில் ஒரு நிவாயத்தில் சொல்லப்படுகிறதாவது: "நாயகம் அவர்கள் முதலில் தன்

னள் ஷெய்கு கலீருத்தின் மஹ்மூதே சிராகுத் திஹ்லி றலியல்லாஹு அன்ஹுவின் சமூகத்தில்வந்து முரீதபெற வாடியபோது அந்தவக்தில் ஷெய்கவர்கள் மேல்மெத்தையிலிருந்தார்கள். அப்போது நாயகம் றலியல்லாஹு அன்ஹு கீழேநின்று கொண்டிருக்க, காதீர்வந்து, "செய்யிது முஹம்மது என்ற பெயருடையவர் யார்?" என்று கேட்டார். அந்நேரத்தில் அங்கு அப்பெயருடையவர்கள் அநேகர்களிருந்ததினால் ஒவ்வொருவரும் நான் நான் என்று சொன்னார்கள். காதிம் ஹைறானகி நான் யாரைக் கூட்டிக்கொண்டு போகிறதென்று சொல்ல, இதற்கிடையில் நாயகம் றலியல்லாஹு அன்ஹு நானும் செய்யிது முஹம்மது என்ற பேர் உடையவனே என்றார்கள். காதிம் திரும்ப ஷெய்கவர்களிடம் போய் நாயகமே! செய்யிது முஹம்மது என்ற பெயருடையவர்கள் அநேகர்களிருக்கிறார்கள். ஆதலின் அவர்களில் நின்று நான் யாரைக் கூட்டிக்கொண்டு வருகிறதென்று கேட்க, ஷெய்கு அவர்கள், "செய்யிது முஹம்மது என்ற பேருடன் (கைசூதாஸ்) என்ற பட்டப்பேர் சேர்த்துக் கூப்பிட்டு அதற்குரியவரை அழைத்துவாரும்" என்றார்கள். அதுபோல காதீர்வந்து செய்யிது முஹம்மது (கைசூதாஸ்) ஆரென்று விசாரித்து நாயகம் பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு நான்தானென்று சொல்ல, அவர்களைக் கூட்டிக்கொண்டு போனார். அப்போது அவர்களுக்கு (கைசூதாஸ்) என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. அதின் அர்த்தம் முடி ஏமானவர் என்பதே. றலியல்லாஹு அன்ஹு.

11-வது ஹிக்காயத்து:—நாயகம் செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பந்தா நவாஸ் என்று பேர்கிடைத்ததின் காரணத்தைப்பற்றி தாரிகுடைய உலமாக்கள் எழுதியிருக்கிறது என்னவெனில், "ஷெய்கு கலீருத்தின் மஹ்மூது சிராகுத் திஹ்லி, றலியல்லாஹு அன்ஹு திஹ்லிவிட்டு டஹ்டா என்ற ஊருக்கு சபர் போகையில், நாயகம் றலியல்லாஹு அன்ஹு பல்லக்குத் தூக்கிக்கொண்டு போனதினால் (ஜால்பு) முடிகள் பல்லக்குக் கோம்பின் கீழ் அகப்பட்டுப் பிரிந்து அதில் நின்று இரத்தம் ஓடிற்று. அவ்விஷயம் ஷெய்கு அவர்களுக்கு (கார்னால்) என்ற ஊருக்கு வந்திறங்கிப்பின் தெரியப்பட்டு, ஷெய்கு அவர்கள் நாயகம் றலியல்லாஹு அன்ஹுவை நோக்கிச் சந்தோஷமுற்று 'செய்யிது உடைய தோற்றமானது அடியார்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கிறது' என்றார்கள். ஆதலின் அவர்களுக்கு பந்தா நவாஸ்

என்று பட்டப்பேர் வந்தது" என்பதேயாம். றலியல்லாஹு அன்ஹு.

12-வது ஹிக்காயத்து:—ஈகல் செய்யப்பட்டிருக்கிறது: நாயகம் செய்யித முஹம்மது பக்தாதவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திஹ்லியிலிருக்கும்போது, அவர்களிடம் மவுலானா ஹுசைன் என்பவர் முரீதாகி இருந்தார். அவர் முரீதாகி இருந்ததை அவருடையி உடன் பிறந்தாளின் மகனாரும், அவர் மாமனாரும் அறிந்து ஏன் நீங்கள் நாயகம் றலியல்லாஹு அன்ஹு இடத்தில் முரீதானீர்களென்று அவரிடம் கேட்க, அதற்கு மௌலானா, "நீங்கள் அவர்களின் வலுப்பத்தையும், மகிமையையும் அறிய மாட்டீர்கள்" என்று சொல்ல, அவர்களிருவரும், "நல்லது; நாங்கள் நாளையதினம் உங்களோடு வருகிறோம்; ஆயினும் நாங்கள் அவர்களுக்கு மரியாதை என்ற சாஷ்டாங்க வணக்கம் செய்யமாட்டோம்" என்று சொன்னார்கள். மவுலானா "அதில் எனக்கு வலுவந்தமில்லை, எது உங்களுக்கு நோக்கமாயிருக்கிறதோ அதைச்செய்யுங்கள்" என்றார். மறுநாள் மவுலானா ஹுசைன் உடன் பிறந்தாளின் மகனாரும் அவர் மாமனாரும், நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் சமூகம்வந்து அவர்களின் திருமுகத்தைப் பார்த்தவுடன், மவுலானா ஹுசைன் மரியாதைசெய்தபோது அவரோடு அவ்விருவரும் தாங்களாகவே அச்சத்துடன் மரியாதைசெய்து உட்கார்ந்தார்கள். அந்நேரத்தில் நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் விலை உயர்ந்த ருமால் ஒன்றைத் தலையின்மீதில் கட்டினவர்களாய் நாற்காலியின்மீதில் உட்கார்ந்திருந்தார்கள். மேலும் வெயிற்காலமாயிருந்ததினால் ஒரு அழகான விசிறியைக் கையில் வைத்து விசிறிக்கொண்டிருந்தார்கள். அதை அவ்விருவரும் பார்த்து மனதில், "இவர்கள் பெரியோர்களாயிருப்பார்களாகில் இந்த ருமாலையும் விசிறியையும் நமக்குத் தந்துவிடுவார்கள்" என்று எண்ணினார்கள். அப்போது நாயகமவர்களுக்கு இவ்விஷயம் தெரியப்பட்டு அவர்கள் அண்ணவர்களை நோக்கி, "நான் ஒரு கதை சொல்லுகிறேன். கேளுங்கள்; பகுதாதில் ஒரு வேடிக்கைக்காரன் வேடிக்கைசெய்ய ஆரம்பித்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அவன் அதின் கண்ணைக் கட்டிவிட்டுக் கூட்டத்தில் வேடிக்கை பார்க்கிறவர்களிடம், 'ஒருவன் மற்றவனுடைய வஸ்துவைத் திருடிக்கொண்டால் அந்தத் திருடனை இக் கழுதை கண்டு பிடித்துக்கொள்ளும்' என்று சொன்னான். அவ்வார்த்தை அவ்விஷயம் செய்யப்பட்டது. பிறகு வேடிக்கைக்காரன் கழு

தையின் கண்ணைத் திறக்கவும்; அது ஒவ்வொருவர்களையும் மோந்து பார்த்து, எவன் திருடியிருந்தானோ அவன் முன்னுனையைப் பல்லிற் கடித்து இழுத்து வேடிக்கை காட்டுகிறவனிடம் கொண்டுவந்து சேர்த்தது" என்று பயான்செய்து, பின்னும் "கருமாத்துகளை வெளியாக்குவதில் கழுதையும் சமர்த்துடையதா யிருந்திருக்கிறது; ஆகலால், இதனால் சிறப்பொன்றுமில்லை; அப்படியிருந்தும், மனிதர்கள், அற்புதங்களை வெளியாக்குகிறவர்களை மகத்துவமுடையவ ரென்றும், வெளியிடாதவர்களை சாமானியர்களென்றும் சொல்லு கிறார்கள்" என்று சொல்லி அந்த இருவர்களையும் நோக்கி இவ்விசிறி யையும், ருமாலையும் எடுத்துக் கொள்ளுங்களென்றார்கள். அப் போது அவர்களிருவரும் நடுநடுங்கினவர்களாய் விரைவில் நாயக மவர்களுடைய பாதார விந்தத்தில் மோதிவிழுந்து முரீதாகி விட் டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

13-வது ஹிக்காயத்து :—நகல் செய்யப்பட்டிருக்கிறது: நாய கம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், எங்கேயோ ஓரிடத்திற்குப் போகிறபோது, திஹ்லி ஜாமி ஆமஸ்ஜித்தின் அருகில் ஒருமனிதன் சத்தி எடுக்கக்கண்டு நின்றார் கள். அதில் நின்று சோறும், கறியும் வெளியாயின. அவற்றை அதிக இளைப்புடைய நாயொன்று தின்று கொண்டிருந்தது. சத்தி எடுக்கிறவர் அதை விரட்டவில்லை. இந்தப் பொருத்தக் கேடான விஷயத்தை, பாதையில் நடந்து போகிறவர்கள் பார்த்து அவரை இகழ்ந்து பேசினவர்களாய் விலகிப்போய்க் கொண்டிருந்தார்கள். அன்னவர் சத்தி எடுத்து முடிந்ததும் ஒரு எரிக்கரைத் திசை நோக்கி நடந்தார். இதற்கு நாயகம் பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு, அவரின் திருமுகத்தில் நிஅமத்தூதார் என்னும் தெய்வீக அருளைக் கண்டதினால் அவரைப் பின்தொடர்ந்து போய்ப் பார்ப்போம்; இப்போது அவர் என்ன செய்கிறார் என்பதை அறி வோம்; இன்னும் அவரின் நிலைமையை அவரிடம் விசாரிப்போம் என்றெண்ணி அவருக்குப் பின்னே நடந்தார்கள். அன்னவர் எரிக் கரையோரம் வந்ததும் தண்ணீரில் இறங்கி முதன்முதல் வரையை நன்றாகச் சுத்தப்படுத்தி ஒலுவும்செய்து இரண்டு ரக்அத்தும் தொழுதுவிட்டு துஆவை முன்னோக்கினார். இதற்கிடையில் நாய கம் றலியல்லாஹு, அவரிடம் சென்று, அல்லாஹுத்தஆலாவைக் கொண்டு சத்தியம்செய்து, "ஓ மனிதரே! உமது திருமுகத்தில் அல்லாஹுத்தஆலாவின் ஆச்சரிய நிஅமத்து உண்டாயிருக்கிறது;

ஆதலின் நீர் யார்?" என்று கேட்க, அவர், "நீர் அல்லாஹ்வுக்கே ஆலாவைக்கொண்டு சத்தியம் செய்திருக்கிறீர்; அதற்காகவே நான் உண்மையான எனது நிலைமையை உமக்கு அறிவிக்கிறேன் கேளும்; நான் அல்லாஹ்வுத்தஆலாவின் அப்தால்களில் ஒருவன்; என் பேர் ருக்னுத்தீன் என்பதாம். யான் இவ்விடத்திற்கு ஆயிரம் காதவழி தூரத்திலிருக்கையில் அல்லாஹ்வுத்தஆலா உடையவனுக்கு உண்டாச்சுது. அதாவது: 'திஹ்லி ஜாமிஆ மஸ்ஜிதுவின் கோணத்தில் மிகுந்த பசியினால் நானொன்று இளைப்பாய்விழுந்து சாகுந்தருணமாயிருக்கிறது. ஆனதால் நீர் அன்னமும் இறைச்சியும் தின்று அதினிடத்திற் போய்ச் சத்திபெடும்; ஏனெனில் அதின் றிஸ்கு அதற்குச் சேரவேண்டும்' என்பதே. அவ்வாறு வந்தகட்டளையை நிறைவேற்றுமாறு நான் இங்குவர நேரிட்டது" என்று சொல்லி முடித்தனர். அதின் பிறகு நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அப்தால் அவர்களிடம் கொஞ்ச நேரம் வரையில் முஹப்பத்து (இக்லாஸு) அதாவது அல்லாஹ்வுத்தஆலா அளவில் உறுதியான விசுவாசம் கொள்ளுகிற விஷயத்தைப்பற்றிப் பேசிவிட்டு, மேலும் அவர்களிலிருந்து மேன்மையான அருள்களைப் பெற்றுக் கொண்டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

14-வது ஹிக்காயத்து:—நகல் செய்யப்பட்டிருக்கிறது: ஒரு இரவு நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அவர்களின் வெள்ளாட்டி, நாயகமவர்களுக்கு ஓலுசெய்ய வைப்பதற்காக வந்து உட்கார்ந்தாள். அவ்வாறு உட்கார்ந்திருக்கையில், திடீரென்று ஒரு பெரிய மனிதர் நல்ல தலைப்பாகை அணிந்தவர்களாக வெளியாகி முன்னி நாயகமவர்களுக்கு சலாம் சொன்னார்கள். அதற்கவர்கள் ஜவாபு கொடுப்பதற்குள் வெள்ளாட்டிக்கு ஒருவித மான நிலைமை உண்டாகி அவள் போதக்கேடாகி விழுந்துவிட்டாள். அவள் மயக்கம் நீங்கித் தெளிந்து ஹுஷாரில் வரும்வரை, அவர்களுக்கிடையில் நடந்துகொண்டிருந்த பேச்சுகள் யாவும் அவளின் நினைவுக்கு வரவில்லை. அப்பால் அந்தப்பெரிய மனிதர்களிடத்திலிருந்து, நாயகமவர்கள் அநேகம் அருள்களைப் பெற்றார்கள். அப்பால் அந்தப் பெரியவர்கள் மறைந்து விட்டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

15-வது ஹிக்காயத்து:—நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு, திஹ்லியைவிட்டுப் பிரயாணமாகி, கவாலியர் என்ற ஊருக்குப் போய் ஷெய்கு அலாவுத்தீனுல் கவாலி

யாரி அவர்களின் வீட்டிலிறங்கி இருந்தார்கள். அப்பொழுது ஷெய்கு அலாவுதீன் சகோதரர் மவுலானு ஸம்ஷுத்தீன் என்பவர் ஒரு வியாதியில் அகப்பட்டு சவுக்கியமில்லாமலிருந்தார். இதைப்பற்றி ஷெய்கு அலாவுதீன், நாயகம் றலியல்லாஹு அன்ஹுவினிடம் சௌக்கியமுண்டாகும்படி துஆ செய்ய விண்ணப்பஞ் செய்தார். அதற்கு நாயகம் நாளையதினம் ஜவாபு சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். மறுநாள் நாயகமவர்களின் திருச்சமுகத்தில் அவ்விஷயம் ஞாபகப் படுத்தப்பட்டது. அப்பொழுது நாயகமவர்கள், "ஆய் அலாவுத்தீனே! உமது சகோதரருக்காக நான் துஆ செய்ததில் அல்லாஹுத்தஆலாவினிடமிருந்து ஹுக்மூண்டாச்சுது: ஷம்ஸுத்தீனின் வாணாள் முடிவாகிவிட்டது; ஆகிலும் பத்துநாள் பாக்கியாக இருக்கிறதென்று சொல்ல, ஷெய்கு அலாவுத்தீன் ஷெய்கு மவுலானு உடைய ஈமான் ஸலாமத்தாகும்படி துஆ செய்யவேண்டுமென்று சொன்னார். அப்போது நாயகம் றலியல்லாஹு அன்ஹு, "நான் ஆரம்பத்திலேயே துஆ செய்து முடித்திருக்கிறேன்" என்றார்கள். கடைசியில் நாயகம் றலியல்லாஹு அன்ஹு சொன்னபடி பத்தாவது நாள் மவுலானு ஷம்ஸுத்தீன் வபாத்தாகி விட்டார். பிறகு நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அவர்களின் பிள்ளைகளும், தோழர்களும் மவுலானு உடைய வீடுவரையிலும் வெறுங்காலால் நடந்து வந்தார்கள். பிறகு ஜனாஸா தொழுகையை நாயகமே தொழுது முடித்து மய்யித்தின் காலின்மீது தங்கள் கையால் ஓர் அடி அடித்து, "அல்லாவின் றசூலே! நான் இவரைத் தங்களிடம் ஒப்படைத்து விட்டேன்" எனச் சொல்லி அப்பால் அடக்கமும் செய்துவிட்டுத் திரும்பினார்கள். மிற்ற மூன்றும் ஜியாரத்து கழித்து ஷெய்கு அலாவுத்தீன் குத்திலியிர்றஹு அவர்கள் திக்கிருடைய பறுக்கில் இருக்கிறபோது தமது சகோதரரைத் தெரிசித்து உமது ஹாலென்ன வென்று கேட்க, அவர், "என்பேரில் கெடுதிகள் வெளியாயின; ஆகிலும் நாயகம் செய்தது முஹம்மது பந்தாநவாஸ் றஹிமஹுல்லா அவர்கள் என்னை றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமிடம் ஒப்படைத்ததினால் நான் தப்பித்துக் கொண்டேன்" என்று சொன்னார். றலியல்லாஹு அன்ஹு.

16-வது ஹிக்காயத்து:—நகல் செய்யப்பட்டிருக்கிறது: நாயகம் செய்யித முஹம்மது பந்தாநவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பனிரண்டு வயது பிராயமாயிருக்கும்போது, ஒரு நாள் ஓலூ செய்துகொண்டு இருக்கையில், காக மொன்று கூரையத்தில் எச்ச

மிட்டுவிட்டது. அப்பொழுது நாயகமவர்கள் கோபமுற்று அதைப் பார்க்க அதின் அவயவங்கள் பிரிந்து வெவ்வேறாகி அது அவர்களுக்கு முன்பில் விழுந்தது. அப்பொழுது நாயகமவர்களின் தாயார், றலியல்லாஹு அன்ஹா இந்த விஷயத்தைப் பார்த்து, "ஏன் இதை நீர் இப்படிச் செய்தீர்" என்று கேட்க, அவர்கள், "என் பேரில் என்ன தப்பிதமிருக்கிறது? ஏன் இந்தக் கர்கம் மரியாதைக் குறைவு செய்தது?" என்றார்கள். பின்னர் அவர்கள் தாயார், "செய்யிது முஹம்மதே! யார் உமது ஹக்கில் மரியாதைக் தப்பு செய்வானோ அவனது கெதியும் இவ்விதமே ஆகிவிடும்" என்றார்கள். அப்பொழுது நாயகமவர்கள் குறுஞ்சிரிப்புச் சிரித்தவர்களாய் காகத்தை நோக்கி, "நீ உயிர் பெற்றெழும்பி முன்னிருந்தது போலாகிவிடு" என்றார்கள். அப்படியே அது உயிர் பெற்று எழும்பிப் பறந்து போயிற்று. றலியல்லாஹு அன்ஹு.

17-வது ஹிக்காயத்து:—நகல் செய்யப்பட்டிருக்கிறது: நாயகம் செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நேபால், என்ற ஊரின் காட்டில் தொழுது கொண்டிருக்கையில், (இப்பாக நஅபுது ஓபிப்பாக நஸ்தயீன்) என்ற ஆயத்தை மடக்கி ஓதினார்கள். அப்போது சுபுஹு நேரமாகிவிட்டது. (அல்ஹம்து லில்லாஹி). பாயிதா: இக்வான்களே! இந்த நாதாக்கள் மேற்கூறிய ஆயத்தின் மஅனுக்களை ஆராய்தல்செய்து அல்லாவிடத்தில் தங்களுடைய கல்பை நிலைபாடாக்கி, அவனுடைய தியானத்திலேயே மூழ்கிவிட்டதால் தங்கள் நிலைமைகளை அறியாதவர்களாகிவிட்டார்கள். இன்னும் சூபிபாக்கள் சொல்கிறதாவது: "அடியான் தொழுகையில் தன் கல்பை அல்லாஹுத்தஆலாவிடம் ஹாலிருக்க வேண்டும்; அவ்வாறில்லாத தொழுகை நிரப்பமற்றதாக இருக்கும்" என்பதே. இதற்கிணங்க, மஸ்னவிஷரீபு என்ற கிதாபில் மவுலானா ஜலாலுத்தினுர் றூமிகுத்தில் ஸிர்றஹு ஒருபைத்து சொல்லியிருக்கிறார்கள். அதின் அர்த்தமாவது: "தொழுகையில் கல்பை உள்ளச்சப்படுத்துவது கொண்டாலொழிய அது நிரப்பமுற்றதாக ஆகாதென்று, நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இந்த ஹதீதை கிருவுளமாயிருக்கிறார்கள்" என்பதே. இன்னும் (குர்ஆன் ஷரீபில் கத்அப்லஹல் மூமினூன் ஜுஸ்வில் முதலாவது ஆயத்தில்) அல்லாஹுத்தஆலா சொல்லியிருக்கிறதாவது: "உண்மையாக மூமினான ஜனங்களில் தொழுகையில் தங்களின் கல்பை உள்ளச்சப்படுத்தித் தொழுது வந்தவர்களே திட்டமாக ஜெயம்பெற்றார்கள்"

என்பதே. இன்னும் ஹதீஸ் குதுஸியில் வந்திருக்கிறதாவது: "உண்மையாக அல்லாஹ்த்தஆலா வாகிறவன் உங்களுடைய அழகு சூரத்தையும் அமலையும் நோட்டமிட மாட்டான். உங்களது கல்பைத்தான் நோட்டமிட்டுப் பார்ப்பான்" என்பதே. ஆகலால் அல்லாஹ்த்தஆலா நம்மை, தொழுகையில் உள்ளச்சப்பாடாய்த் தொழுதவந்த கூட்டத்தில் சேர்ப்பானாகவும். ஆமீன் யாரப்பல ஆலமீன்.

18-வது ஹிக்காயத்து:—நாயகம் செய்யித முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு ஐந்து வக்து தொழுகைக்கும் மஸ்காவில் சென்று தொழுதுவிட்டு, பர்லு தொழுகையைத் தொழுகிற சமயத்தில், தாங்கள் தங்கியிருக்கும் கான்காஹ் என்கிற இடத்தில் வந்து இருப்பார்கள். அப்படி யிருக்கும்போது ஒருநாள் வயது சென்ற முதியவர் ஒருவர், நாயகமவர்களுக்கு முன்னால் வந்து, "நாயகமே! நான் தங்களை கஅபாவில் தவாபு செய்யும்போது பார்த்திருக்கிறேன்" என்றார். அதற்கு நாயகமவர்கள், "நீர் உண்மை சொன்னீர்; கஅபாவானது என் வாயிற்படிக்கு முன்னால்தான் இருக்கிறது; அல்லாஹ்த்தஆலாவின் லாலிகீனகள் நாடுவார்களானால் ஒரு விநாடி நேரத்துக்குள் மஷ்ரிகு தொடுத்து மகரிபு வரையில் சென்று தங்களுடைய இல்லிடத்திற்கு வந்து விடுவார்கள்" என்று சொல்லி அவ்வயது சென்ற மனிதனுடைய கையைப் பிடித்துக் கொண்டு கண்ணை மூடென்று சொல்லவும் அவர் மூடினார். பின்பு விழித்துப் பார்க்கும்போது அவர் நாயகம் அவர்களுடன் மஷ்ரிகிலிருந்தார். பின்னர் கண்ணைமூடி விழித்துப் பார்க்கையில் மக்ரிபில் வந்து இருந்தார். பின்பு கண்ணைமூடி விழித்துப்பார்க்கையில் தாம் முன்னிருந்த இடத்தில்வந்து சேர்ந்து இருந்தார். இவற்றை அவர் பார்த்துவிட்டு நாயகமவர்களுடைய பாதத்தில் மோதிவிழுந்து முரீதாகி விட்டார். றலியல்லாஹு அன்ஹு.

19-வது ஹிக்காயத்து:—நாயகம் செய்யித முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு ஒருநாள் கடலோரத்தில் உட்கார்ந்திருக்கையில், ஓர் புத்திமான் கையில் கிதாபை எடுத்துக் கொண்டு நாயகம் றலியல்லாஹு அன்ஹுவினிடம் சிலசுவால் செய்வதற்காக வந்தார். அப்பொழுது நாயகம் அவர்கள், அவரின் கிதாபை வாங்கிக்கடலில் எறிந்து விட்டார்கள். அவர் வருத்தமாய் இதென்ன வேலை செய்தீர்களென்று கேட்க, நாயகம் றலியல்லாஹு அன்ஹு கடலில் போய்க் கையைவிட்டுக் கிதாபை எடுத்து

அவர் கையில் கொடுத்து, நீர் நாடினதைக் கேளு மென்றார்கள். அப்பொழுது அவர், "நான் ஏதேனும் தங்களிடம் சுவால் செய்ய எனக்கென்ன சக்தி இருக்கிற"தென்று சொல்லவும், நாயகமவர்கள் குறுஞ்சிரிப்புச் சிரித்தவர்களாய், நீர் முன்னே கேட்க நாடியிருந்த சுவாலுக்கு நான் இப்போது செய்ததே தக்க ஜவாபாக இருந்த தென்றார்கள். றலியல்லாஹு அன்ஹு.

20-வது ஹிக்காயத்து :—நகல் செய்யப்பட்டிருக்கிறது: சில பகீர்கள் பசுமரடொன்றை அறுத்துத் தின்று விட்டார்கள். இந்த விஷயம் மாட்டுக்காரனுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவன் அதிகாரிகளைச் சேகரித்துக்கொண்டு பகீருகளைப் பிடிக்கிறதற்காக வேண்டி வந்தான். அவ்வாறு வருகிறது பகீருகளுக்குத் தெரியவரவும், அவர்கள் நடுக்கம் பிடித்தவர்களாய் நாயகம் செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அன்ஹு திவ்விய சமூகத்தில் வந்து நடந்த விஷயங்களை விண்ணப்பஞ் செய்ய, நாயகம், "மாட்டின் கறி தோல் களில் ஏதும் மிச்சமாக இருக்கிறதா" வென்றார்கள். அதற்கு பகீர் கள், "தோலும் எலும்பும் தான் மிச்சமா யிருக்கின்றன" என்று சொல்லவும், அவர்கள் அதன் அவயவங்களைக் கொண்டுவரும்படி செய்து தோலுக்குள் எலும்புகளைப் போட்டு நிரப்பி நத்தைச்சூரிச் செடியின் குச்சி ஒன்றை எடுத்து அவர்களிடம் கொடுத்து, அதின் பேரில் (மூஹம்மதீ) பறகத்துக்கொண்டு நீ உயிர்பெற்று எழும் பென்று சொல்லி அடியுங்க ளென்றார்கள். அவ்வாறே நடத்தவும் அந்நேரத்திலேயே அது உயிர்பெற்று எழுந்து நின்றது. அதை மாட்டுக்காரனிடம் அவர்கள் ஒப்பித்து விட்டார்கள். றலியல்லா ஹு அன்ஹு.

21-வது ஹிக்காயத்து:—நாயகம் காஜா செய்யிது முஹம்மது பந்தா நவாஸ் றலியல்லாஹு அவர்கள், குல்பர்காவுக்கு, தங்க ளுடைய தோழர்களுடன் போனார்கள். அப்போதந்த ஊரிலுள்ள வர்களெல்லாம்வந்து அவர்களை மிகவும் சங்கை செய்தார்கள். ஊரை க்கும் பெரிய மனிதர் ஒருவர் வந்திருக்கிறரென்று பிரஸ்தாப மானது. அப்போது அந்த ஊர் மஹியின்பேரில் பெரிய சன்னியாசி யொருவன் ஆயிரம்பேருக்குக் குருவாயிருந்தான். அவனுடைய பெயர் பாபர். அப்படிக் குருவாயிருந்தவனுடைய சீஷர்கள், நாய கம் பந்தே நவாஸ் வந்திருக்கிற செய்தியையும், அவர்களுடைய சீஷ்புகழுமாத்திரைகளையும், ஊரிலுள்ளவர்கள் அவர்களை சங்கை செய்

கிறதையும் அவனிடம் சொன்னார்கள். அவனந்தச் செய்தியைக் கேட்டு உருது பாஷையில் ஒருபதம் மொழிந்தான். அதன் பொருளாவது: "அவ்விதமான பெரிய மனிதரை நானேபோய்க் காணுவேன்" என்பதாம். இதைச்சீஷர்களிடம் சொல்லி உடனே புறப்பட்டுவந்து நாயகம் பந்தே நவாஸ் அவர்களைக் கூர்மையாகப் பார்த்து, உருது பாஷையில் இன்னமொரு பதம்மொழிந்தான். அதன் பொருளாவது: "நல்லது; பெரியமனிதர்தான்; என்கிலும் மனதில் கொஞ்சம் கருப்பு இருக்கிறது" என்பதே. அப்போது நாயகம் பந்தே நவாஸ். அவர்கள், அங்கு இருக்கிறவர்களிடத்தில், "இவர் கண்ணிலிருக்கும் கருப்பே (அதாவது: இருளென்னும் அஞ்ஞானமே) என்னுடைய கல்பென்னும் கண்ணாடியில படிந்து அவருக்குத் தெரிந்திருக்கிறது; அதனால்தான் அவர் என்னிடம் கருப்பிருக்கிறதென்று சொன்னார். இவர் கையில் கண்ணாடியைக் கொடுங்கள்; அதன்மூலம் பார்த்தால் அது இவருக்குத் தெரியும்; எனினும் அல்லாஹு சுபுஹானஹு வதஆலாவுடைய உதவியினால் அவருடைய கண்ணிலிருந்த கருப்பு எடுபட்டுப்போயிற்று" என்று சொன்னார்கள். இந்தப்பேச்சை, பாபர்கேட்டவுடனே, தன்னுடைய சீஷர் புறம் திரும்பி, உருது பாஷையில் இன்னொரு பதம் சொன்னான். அதன் பொருளாவது: "இப்பேர்ப்பட்ட பெரிய மனிதரை நான் சந்திக்க வேண்டுமென்று அல்லாஹுத்தஆலாவின் சன்னிதானத்தில் மூன்று ஜாத செய்திருந்தேன்; இன்று அவனுடைய கிருபையுண்டாயிற்று; என்னுடைய ஹயாத்தில் இவ்விதமான பெரியோரை நான் காணவில்லை" என்பதே. அப்போது பாபருடைய சீஷர்களெல்லாம் மிகவும் சந்தோஷமாக எழுந்து நாயகம் பந்தே நவாஸ் அவர்களுக்கு தஸ்லீம் (வந்தனம்) செய்து இருந்தார்கள். பின்னர் பாபரும் நாயகமவர்களும் பேசிக்கொண்டிருக்கும்போது அந்த வழிபாகச் சில மாடுகள் நடந்துசென்றன. அவற்றிலொரு மாடு நிறைசூலாக இருந்தது. அப்போது பாபர் நாயகமவர்களை நோக்கி "இந்த மாட்டின் வயிற்றில் இருக்கிறதன்று ஆண்பெண்ணில இன்ன ஜாதியென்பதையும், அதன் நிறம் இன்னதென்பதையும் நான் சொல்வேன்" என்றான். அதற்கு நாயகமவர்கள் "அப்படியே சொல்லும் பார்க்கலாம்" என்றார்கள். அதன்மேல் அவன், ஒரு சாஅத்து நேரம் யோசித்திருந்து, "இந்த மாட்டின் வயிற்றிலிருக்கிற கன்று ஆண்; நிறம் கருப்பு; நெற்றியில் வெள்ளை" யென்றான். அப்போது நாயகம் பந்தே நவாஸ் அவர்கள் அரை சாஅத்து நேரம் யோசித்திருந்து,

"நீர் சொன்னவையெல்லாம் சரிதான்; ஆனால் நெற்றியில் வெள்ளையில்லை; வாலெவெள்ளை; அந்தவாலை அது நெற்றியில் வைத்துக்கொண்டிருக்கிறது" என்றார்கள். அதற்கு பாபர் "மெய்தான்; நீங்கள் பெரிய மனிதராயிருக்கிறீர்கள்" என்றும் பின்னும் அவன், "நான் நீராகப் போமாவன்" என்றான். "நீர் நீராகப் போனால் அந்த நீரைக்கொஞ்சம் பஞ்சில் துவைத்துக் கொள்ளும் படி, உம்முடைய சீஷருக்குச் சொல்லும்" என்று நாயகமவர்கள் சொல்லவும், அந்தப்படி பாபர் சீஷருக்குக் கட்டளையிட்டு ஒரு துப் பட்டியாலென்னை மூடுங்களென்றான். சீஷர்கள் அப்படியே மூடினார்கள். உடனே நீர்க்குடம் உடைந்ததுபோல் அவன் நீராகப் போனான். அவனுடைய சீஷர்கள் அந்த நீரில் கொஞ்சம் பஞ்சில் துவைத்துக் கொண்டார்கள். கொஞ்ச நேரத்தில் அவன் மனிதனாய் எழுந்து நாயகமவர்களை நோக்கி, "நான் செய்ததுபோல் நீங்களும் செய்யுங்கள் பார்ப்போம்" என்றான். அப்போது நாயகம் பிக்தேஷாஸ் அவர்கள், தங்களுடைய தோழர்களிடத்தில், "பாபர், தாம் செய்ததுபோல் என்னையும் செய்யும்படி சொல்கிறார்; ஆகையால் நீங்கள் என்னை ஒரு துப்பட்டியால் மூடுங்கள்; நான் நீராகப் போனபோது அந்நீரில் நின்றும் கொஞ்சம் பஞ்சில் துவைத்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். அந்தப்படி அவர்கள் துப்பட்டியைக் கொண்டு போர்த்தவும் நாயகமவர்கள் உடனே நீராக ஓடிப்போனார்கள். அதை அவர்களின் தோழர்களில் ஒருவர் கொஞ்சம் பஞ்சில் துவைத்துக் கொண்டார்.

பின்பு நாயகமவர்கள் மனித ரூபமாக எழுந்து தோழர்களிடம் கொஞ்சம் நெருப்புக்கொண்டு வாருங்களென்று சொல்லி, பாபரை நோக்கி "உம்முடைய நீரைத்துவைத்த பஞ்சை இதில் போடும்" என்றார்கள். பாபர் அந்தப் பஞ்சைப் போடவும் அதில் புகைச்ச லுண்டாய்ப் பிணம் சுட்டவாடை வீசியது. அப்படி வீசிப்புகைச்சலடங்கியபின் நாயகமவர்கள், தங்களுடைய தோழர்களை நோக்கி, என்னுடைய நீரைத் துவைத்த பஞ்சை நெருப்பில் போடுங்களென்றார்கள். அப்படியே போடவும் அத்தர் வாசனைபோல் அதில் நற் புகைச்சல் உளம்பிற்று. அங்கிருந்த இரு கூட்டத்தாருக்கும் அந்த வாசனை வீசியபோது, பாபர், நாயகம் பந்தே நவாஸ் அவர்களை நோக்கி, "இது என்னவாசனை?" என்றான். அப்போது நாயகம் பந்தே நவாஸ், உருதுபாஷையில் "இது கலிமாஷஹாதத்துவின் வாசனை" என்றார்கள். அப்போது பாபர், உருது பாஷையில் "கலி

மா, ஷஹராதத்தில், இவ்விதமான நல்ல வாசனை இருக்கிறதா?" வென்று சொல்லி மறைவாகித் தன்னுடைய சிஷ்யர்களை நோக்கி, "நான் என் சரீரத்தைக் கஷ்டப்படுத்தி துன்யாவுடைய ஆசை யெல்லாம் விட்டுப் பாடுபட்டும் என்னுடைய நீர் பிணம் நாற்ற மடிக்கத்து; நாயகம் பந்தேநவாஸ், உடைய நீர் நல்ல வாசனைவீசிற்று; ஆகையால் நான் ஒரு எண்ணம் கொண்டிருக்கிறேன்; அதென்ன வெனில், நீங்களெண்ணிக் குருவாகக் கொண்டிருக்கிறீர்கள்; என் எண்ணத்தை நீங்கள் பூர்த்திசெய்து வைப்பீர்களானால் எனக்கும் உங்களுக்குமிடையில் (முஹப்பத்து) நேசம் தரிபாடாக இருக்கும்; இல்லாவிட்டால் பிரிவினையுண்டாகும்" என்றான். அப்போது அவனு டைய சிஷ்யர்கள் மிகவும் பயந்து, "காலமெல்லாம் நாங்களுங்களைக் குருவாகக் கொண்டிருந்தோம்; ஆகையால் உங்கள் சொல்லுக்கு மாறுபாடு செய்கிறதில்லை" என்று எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னார்கள். அப்போது பாபர், நாயகம் பந்தேநவாஸ் அவர் களை நோக்கி, உருது பாஷையில் ஒருபதம் மொழிந்தான். அதின் பொருளாவது: "எனக்கு கலிமாவைப் படித்துக் கொடுத்து என்னை இஸ்லாத்திலாக்குங்கள்; என்னுடைய மார்க்கம் பொய்பாகவும் உங் களுடைய மார்க்கம் மெய்யாகவு மிருக்கின்றன. உங்களுடைய மார்க்கத்தின் ஒழுங்குகளை யெல்லாம் எனக்கு நீங்கள் படித்துக் கொடுங்கள்; இன்னுமெனக்கு முஸ்லிமுடைய பெயரிடுங்கள்" என்றார். அப்போது நாயகம் பந்தேநவாஸ் அவர்கள், அவருக்கு கலி மாவைப் படித்துக் கொடுத்து, அப்துல்வாஹிது, என்று பெயரும் வைத்து, ஒலுதொழுகை முதலிய பர்லு ஷர்து முதலானவைகளைக் கற்பித்தார்கள். பின்னர் அப்துல்வாஹிதுடைய சிஷ்பர்கள், தங் களுடைய குரு இஸ்லாமானதைக் கண்டு, அவர்களில் பெரியோர்க ளெல்லாம், "நம்முடைய குருவுக்குத் தெரியாத காரியமில்லை; அவர் பல வழியும் தெரிந்தவர்; முஹம்மதிய்யர, மார்க்கம் உண்மை யென்று அவர் ஒப்புக்கொண்டார்; ஆனபடியால் நாம் அப்போச்சும் பேசாமல் நம்முடைய குருவுக்கு நேர்பாடாக இருப்போமானால் நம்மில் நின்றுமுள்ள குபிர் நீங்கி நேர்வழியும் மேன்மையான பத வியும் நமக்குண்டாகும்" என்று யோசித்து எல்லோரும் கூடி நாய கம் பந்தேநவாஸவர்களுக்குச் சமீபத்தில் வந்து, "எங்களின் குரு வை இஸ்லாமாக்கினதுபோல் ஆயிரம் பேர்களாகிய எங்களையும் இஸ்லாத்திலாக்குங்கள்" என்று சொன்னார்கள். அப்போது நாயக முவர்கள் எல்லோருக்கும் கலிமாஷஹாதத்து படித்துக் கொடுத்து

அவர்களையும் இஸ்லாத்திலாக்கித் தங்களுடைய தோழர்களிடத்தில் ஒப்பிவித்து அவர்களுக்குத் தொழுகை முதலானவைகளையும் ஹுக்குமுகளையும் மார்க்க நடபடிக்கைகளையும் படித்துக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள். அந்தப் படிக்கு அத்தோழர்கள் அவர்களாயிரம் பேருக்கும் இஸ்லாத்துடைய பெயரும் வைத்து மார்க்க நடபடிக்கைகளையும் படித்துக் கொடுத்து குர்ஆனையும் ஓதிக் கொடித்தார்கள். அல்லாஹு சுபுஹானஹு வதஆலா அவர்களுடைய இஸ்லாத்தை அழகாக்கி வைத்தான். நாயகம் பந்தேநவாஸ் அவர்களுடைய கிருபையால் ஹலறத்து அப்துல்வாஹிது, என்பவர் விலாயத்துப் பெற்று நாயகத்துடன் மிகவும் முஹப்பத்துடனிருந்தார். றலியல்லாஹு அன்ஹு.

92-வது ஹிக்காயத்து:—நகல் செய்யப்பட்டிருக்கிறது. நாயகம் செய்யிது முஹம்மது பந்தாநவாஸ், றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் வபாத்தாவதற்கு ஐந்து நாளைக்கு முற்பட, ஷாஹ்யதுல்லா சாஹிபுவைக் கூப்பிட்டுத் தங்கள் மடி மீதில் உட்காரவைத்து, "செய்யிது முஹம்மது, இவ்வுலகத்தைவிட்டு தப்பிவிட்டார். (இன்னலில்லாஹி ஒயின்னு இலைஹி ராஜிவூன்)" என்று சொல்லிப் பிறகு தேகத்தைவிட்டு ரூஹு வெளிவந்தபின்பேரில், ஷாஹ்யதுல்லாஹி சரீரத்தைத் தங்களுக்குப் பின்னால் நிற்பாட்டித் தாங்களே தாங்கள் ஜனாஸாவின்பேரில் ஐந்து தக்பீரு சொல்லித் தொழுதபின், "இதுவரை எந்த மனிதனும் நம்மீதில் (இன்னலில்லாஹி, ஒயின்னு, இலைஹி, ராஜிவூன்) சொல்லவில்லை; நாமே சொல்லிக்கொண்டோம். நிற்க வெளியரங்கத்தில் ஒருவரும் நமது பார்வையில்தோற்றி நம்மீதில் ஜனாஸா தொழுகையைத் தொழுக் வில்லை என்றார்கள். அவர்கள் (105) நூற்றைந்து வருடமும் (4) நான்குமாதமும் (12) பனிரண்டு நாளும் ஜீவித்திருந்து ஹிஜ்ரீ (825) எண்ணூற்றி இருபத்தைந்தாம் வருடம் துல்கஅதா, மாதம் (16) பதினாறும் தேதி திங்கள்கிழமை சுபுஹில் வபாத்தாகி (குல்பர்கா) வென்ற பூங்காவானமான நகரத்தில் அடக்கப்பட்டார்கள். ஒவ்வொரு வருடந்தோறும் அவர்களின் ரவுலா ஷரீபில் துல்கஅதா மாதம் (16) பதினாறும் தேதி இரவில் உருசு வெகு நேர்த்தியாய் நடைபெற்று வருகிறது. உருசுக்காக நாலாபக்கத்திலுமிருந்து ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் தர்கா ஷரீபில்வந்து ஜியாரத்து செய்து தங்கள் ஹாஜத்துகளைப் பரிபூரணமாய்ப் பெற்றுக்கொண்டு போகிறார்கள். றலியல்லாஹு அன்ஹு.


اَللّٰہ
مُحَمَّد
عَلِی
فَاطِمَة
حَسَن حُسَین رضی

இது

ஹலரத்து சாஜா பந்தா நவாஸ் தர்கா.

நாயகம் காஜா செய்யித முஹமத் பந்தா நவாஸ் நலியல்லாஹு அன்ஹு அவர்கள் வபாத்தாகி இரண்டு வருடங்களுக்குப் பின் சுல்தான் அஹ்மதிஷா பஹ்மனி, என்பவரின் உத்தரவுப்படி தர்காஷரீபின் குமுஸ் கட்டடத்தையும், வேறு அதைச்சார்ந்த சில கட்டடங்களையும் கட்ட ஆரம்பித்து ஏழுவருடங்களுக்குப்பின் அக்கட்டடம் சுல்தான் அலாவுதீன் பாகஷா அவர்களுடைய காலத்தில் கட்டி முடிவுபெற்றது. பிறகு, பீஜாப்பூர், மஹ்மூத் ஆதில்ஷா, என்பவரின் உத்தரவுப்படி தர்காவின் குமுஸ் கட்டடத்தின்மேலிருந்த பழைய பொன் கலசத்தை எடுத்து நாயகம் அவர்களின் புத்திரரான செய்யித முஹமத் அக்பர் ஹுசேனி, அவர்கள் தர்காவின் குமுஸ் கட்டடத்தின்மேல் பதித்து, மேற்படி பாதுஷா அவர்கள் வேறு புது பொன்கலசம் ஒன்று தயார்செய்து நாயகம் அவர்களின் தர்காவின் குமுஸ் கட்டடத்தின்மேல் வைத்தார். அப்பால் பீஜாப்பூர் பாதுஷாவின் பட்டாளத்தத் தலைவரீகிய அப்ஜல்கான் என்பவர் அங்குவந்து பார்வையிட்டபோது தர்காவிற்கு கேட்டுவாயிலும், வெளியில் மஸ்ஜீது ஒன்றும், ஜனங்கள் தங்கியிருப்பதற்காக சத்திரமும் கட்டுவதற்காக அஸ்திவாரம் போட்டார். பின்பு ஆலம்கீறி பாதுஷா அவர்கள் தமது அரசாங்க காலத்தில் அங்குவந்து பார்வையிட்டு மஸ்ஜீதுடைய கட்டடத்தைக் கட்டி முடித்து இன்னும் வேறு சில கட்டடங்களையும் கட்டி ஹவ்லு என்னும் குளம் ஒன்றையும் கட்டிவைத்தார். மேற்படி ஹவ்லு மஸ்ஜீத்துக்கு எதிரில் இருந்து அதனுல் சில சௌகரியக்குறைவுகள் ஏற்பட்டதினிமித்தம் ஹலரத்து செய்யித எதுல்லா ஹுஸைனி, அவர்களின் காலத்தில் அந்த ஹவ்லை மூடி வேறு இடத்தில் ஹவ்லு தோண்டி கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு சுமார் பத்தாயிரம் ரூபாய்வரையில் செலவாயின. அது இதுகாலம் வரையும் ஆபாத்தாயிருந்து வருகிறது. இங்கே பிரதி வருடமும் துல்கஅதா மாதம் 1-ந்தேதி முதல்கொண்டே உரூஸ் அலங்காரம் ஆரம்பமாகி 17-ந்தேதியாகிய (அவர்கள் வபாத்தான்) கடைசி நாள்வரையில் வெகு நேர்த்தியாய் நடைபெற்று வருகிறதும் தவிர ஹைதராபாத் நவாப் சாஹிப்புடைய தர்பாரிலிருந்து பிரதிவருடமும் நாயகமவர்களுடைய கபுர் ஷரீபுக்குப் போற்ற போர்வையும், சுற்றி விரிக்கப்பட கம்பளியும் வேறு அநேக வெகுமதிகளும் அனுப்பப்பட்டு வருகின்றன. அத்தக்காலத்தில் வெகு ஜனங்கள் பல ஜில்லாக்களிலிருந்தும் வந்து ஜியாரத்து செய்து போகிறார்கள். அவ்வாறு கூடுகிற ஜனங்களின் தொகை சுமார் ஐம்பதினாயிரத்துக்குமேல் இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

7-வது பஸல்.

(நாயகம் அலாவுதீன் அலி அஹமத், ஸாபிரீ, ஜிஷ்தி, றலியல்லாஹு அன்ஹு அவர்களின் வரலாற்றில் பேசும் பிரிவு.)

ஸாவானிஹே உம்ரிஸாபிரி, இக்பாருல் அக்யார், என்ற கிதாபுகளில் வருகிறதாவது: "நாயகம் அலாவுதீன் அலீ அஹமத்ஸாபிரீ, ஜிஷ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஸெய்யிதினு குதுபுல் அக்தாப் அப்துல்காதிரு ஜெயிலானி, கத்தஸல்லாஹு ஸிர்றஹு அவர்களின் சந்ததிகளில் ஒருவராகிய ஸெய்யிது அப்துல்வஹ்ஹாப் அவர்களின் புத்திராகிய ஸெய்யது அப்துர்றஹீம் அவர்களின் குமாரராவர். இந்த அலாவுத்தீன் அலீ அஹமத் அவர்களின் தாயாரின் பெயர் பீபிஹாஜரா, என்பதாகும். இந்த பீபி அவர்கள், நாயகம் பரீதுத்தீன் கஞ்சுசக்கர் அவர்களின் சகோதரியாவர். இன்னும் இவர்கள், ஹலரத் உமர் இபுனுல் கத்தாப் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் வம்சத்தைச் சார்ந்தவர்கள்" என்பதே.

1-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுத்தீன் அலிஅஹமத் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறப்பதற்குமுன், நாயகம் அப்துல்காதிர் ஜெயிலானி, அவர்களின் கனவில், ஒருநாள் நாயகி பாத்திமா, ஜஹரா அவர்கள் தோன்றி அவரை நோக்கி, "ஆ என்கல்புக்குப் பிரியமானவரே! அல்லாஹு தஆலா எனக்கு நன்கொடையாகக் கொடுத்த இமாம்ஹஸன், இமாம்உசைன் என்பவர்களுக்குப் பதிலாக, வேறு இரண்டு பிள்ளைகளை அனுக்கிரகம் செய்திருக்கிறான். அவர்களுள் ஒருவர் நீராவீர்; மற்றொருவர், உமது சந்ததிகளில் ஒருவரான செய்யிது அப்துல்வஹ்ஹாப் என்பவரின் குமாரர் அப்துர்றஹீம், என்பவரிடம் இனிமேல் தோன்றும் அலாவுதீன் அலிஅஹமத் என்பவராவர்" என்று சொல்லி மறைந்து விட்டார்கள். அதன்மேல் நாயகம் அப்துல்காதிர் ஜெயிலானி, அவர்கள் இந்தக் கனவின் விவரத்தை ஒரு நிருபத்தில் எழுதி வைத்திருந்தார்கள். அவர்கள் காலத்திலிருந்த பெரியோர்களும் மற்ற சாதாரண ஜனங்களும் அந்த நிருபத்தின் செய்தியை உணர்ந்து, அலாவுதீன் அலிஅஹமத் அவர்கள் எப்போது பிறப்பார்கள் என்று அவர்களின் வரவுக்கெதிர் பார்த்திருந்தார்கள். அவர்கள் எதிர் பார்த்திருந்தபடியே ஒருகாலத்தில் அலாவுத்தீன் அலிஅஹமத் அவர்கள் தாயின் வயிற்றில் உற்பத்தியானார்கள். அப்படி அவர்கள் கருப்பத்திலிருக்கும்போது அநேகம் அற்புதங்களெல்லாம் நடந்துகொண்

டிருந்தன. (இந்தச் செய்தி குல்ஸாரேலாபிரி என்ற கிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.) றலியல்லாஹு அன்ஹு.

2-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுத்தீன் அலி அஹமத் ஸாபிரி, அவர்கள், ஹிஜிரி 592ஆம் ரபீஉல் அவ்வல்மீ 19ஆ வியாழக்கிழமை இரவு தஹஜ்ஜுதுடைய வக்தில் ஜனனமானார்கள். அவர்கள் பிறந்தபோது, மருத்துவச்சி, அவர்களைக் குளிப்பாட்டுவதற்கு அவர்கள்மீது கையை வைத்தவுடன் அவளுடைய தேகமுழுவதிலும் நமைச்சலும் எரிச்சலும் உண்டாய்விட்டன. (இதற்குக்காரணம் அவள் ஒலுச்செய்யாமல் அவர்களைத் தொட்டதேயாகும்). அவ்வாறானவுடன் அவள் மிகவும் பயங்கரமுற்றாள். இந்த விஷயம், நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் தகப்பனாருக்குத் தெரிந்தது. அவ்வாறு தெரிந்தவுடன் அவர்கள் அதன்காரணத்தை உணர்ந்தவராய் அம்மருத்துவச்சியை நோக்கி, "நீ ஒலுச் செய்யாமல் இக்குழந்தையைத் தொட்டாயோ" என்று கேட்டார்கள். அவள், 'ஆம்' என்றாள். உடனே அவர்கள் அவளிடத்தில், "நீ ஒலுச் செய்யாமல் தொட்டதனாலேயே உனக்கு இந்த நமைச்சலும் எரிச்சலும் உண்டாயிருக்கின்றன; ஆதலால் இனி ஒலுச் செய்துவிட்டுக் குழந்தையைக் குளிப்பாட்டு; ஒரு தீங்கும் வராது" என்று சொன்னார். அப்படியே அவள் ஒலுச்செய்துவிட்டுக் குழந்தையைக் குளிப்பாட்டினாள். அவ்வாறு குளிப்பாட்டும்போது அக்குழந்தையின் ஒவ்வொரு அங்கத்திலுமிருந்து ஒவ்வொரு சுகந்த வாசனை உண்டாகிக் கொண்டிருந்தது. அதனால் அவ்வீடுமுழுவதும் பரிமளம் வீசிக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் வானத்தில் அதிசயமான ஒரு பிரகாசம் உண்டாயிற்று. அதன்மேல் அக்காலத்திலிருந்த (ரிஜாலுல் கைப்) என்னும் அவுலியாக்கள், அப்தால்கள், நுக்பாக்கள், நுஜபாக்கள், கௌஸ்கள், அக்தாபுகள் முதலியவர்கள் வந்து குழந்தையாயிருந்த அவர்களைத் தொட்டு முத்தமிட்டுக் கொண்டு போனார்கள். (இந்தச்செய்தி ஸவானிஹே உம்ரிஸாபிரி என்ற கிதாபில் வருகிறது) றலியல்லாஹு அன்ஹு.

3-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுத்தீன் அலி அஹமத் அவர்களின் தகப்பனார், ஹலாத் அப்துர்றஹீம் அவர்கள் தங்களுடைய நிருபமொன்றில் கீழ்வருமாறு எழுதி வைத்திருக்கிறார்கள்: "நாயகம் அலி அஹமத் அவர்கள், பிறந்துமுதல் ஏழுமாதம் பத்து நாள் வரையில், அப்பொழுதே தங்களுக்கேற்பட்ட ஆண்டவன்

பக்தியால் சரிவரப் பால் குடிப்பதில்லை. அதாவது சில வேளைகளில் பால் குடித்தும், சில வேளைகளில் குடிக்காமலுமிருந்து வந்தார்கள். அதற்கப்பால் ஒரு வயதுவரும் வரையில் ஒருநாள பால் குடிப்பதும் ஒருநாள் நோன்பு பிடிப்பதுமா யிருந்தார்கள். அதன் பின்னர் இரண்டாவது வயதுவரையில் ஒருநாள் பால்குடிப்பதும் இரண்டு நாள் நோன்பு பிடிப்பதுமா யிருந்தார்கள். இவர்கள் இவ்வாறு, தாங்கள் மிகுந்த பக்தியுடையவர்களென்பதை இளமையிலேயே காட்டி வந்தார்கள். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்ற படி இவர்களுடைய சிறு வயதிலேயே இவர்களுடைய மேலான குணம் விளங்கிவந்தது. பிறகு மூன்றாவது வயதில் பால் குடிப்பதை அறவே விட்டுவிட்டு, ஒருநாள் தொலி கோதுமையாலும், கடலையாலும் செய்த ரொட்டியைப் புசித்தும் மூன்றுநாள் நோன்பிருந்தும், தூக்கத்தை அகற்றியும் ஆண்டவனுடைய வணக்கத்திலேயே நாட்டமாயிருந்து வந்தார்கள். இன்னும், 'ஒருவன் ஆண்டவனுடைய சன்னிதானத்தில் நெருங்க நாடுவானுகில, அவன் அவுலியாக்களுடைய சன்னிதானத்தில இருந்துவரக் கடவன்' என்ற பார்ஸிபைத்தின் கருத்தை அனுசரித்து பெரியோர்களுடைய சேர்க்கையை அனுபவித்து உயர்ந்த பதவிகளைப் பெற்றார்கள்" றலியல்லாஹு அன்ஹு.

4-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுதீன் அலி அஹமத் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், சிறு பிராயமா யிருக்கும்போது உள்காட்டமுடைய பெரியோர்கள், தங்களைத்தொட்டு முத்தமிடுவார்களானுல் தன்னை மறந்த நிலைமையை அடைந்து விடுவார்கள். இன்னும் அவர்கள், ஏழாவது வயதில், எட்டுநாளைக் கொருமுறை மகரீபு தொழுகைக்குப் பின், காய்ந்த ரொட்டியைத் தண்ணீரில் நனைத்துப் புசித்துவந்தார்கள். மேலும் அவர்கள் பக்தியின் மிகுதியால் விரிப்பொன்றும் தேடிக்கொள்ளாதபடி பூமியிலேயே படுத்து வந்தார்கள். பின்பு அவர்களுடைய தாயார் தங்கள் சகோதராராகிய ஹலாத் பரீதுத்தீன் கஞ்ஜு-சக்கர் ரஹிமஹுல்லா அவர்களிடம் செல்ல எண்ணி, அவர்களிருக்கும் லாகூரையடுத்த பாக்பட்டன், என்ற ஊருக்குத் தம் கணவருடன் நாயகமவர்களை அழைத்துக் கொண்டு போனர்கள். ஹலாத் பரீதுத்தீன் கஞ்ஜு-சக்கர் அவர்கள், நாயகமவர்களின் மகிமையைப்பற்றி முன்னியே கனவில் கண்டவர் களா யிருந்தபடியால் இவர்களைக் கண்டவுடன் மகிழ்ச்சியுற்றுத் தமது தங்கையை நோக்கி, "சிறப்புள்ள இந்தப்பிள்ளையின் மே

லான தன்மை எனக்கு மூன்றியே கனவில் அறிவிக்கப்பட்டிருக்கி றது; இவர் இக்காலத்தில உயர்ந்த பதவியைப் பெற்றவராவர்; இவருக்கிணையானவர் எவருமில்லை. ஆதலால், நீ இந்தப் பிள்ளை யுடன் மூன்று வருஷங்கள் வரையில் என்னிடத்திலேயே இருந்து வரவேண்டும். அதற்குள் நான் இந்தப் பிள்ளைக்கு வெளியரங்கம், அந்தரங்கமான கல்விகளைக் கற்றுக்கொடுத்து இவரை மேலான பதவியில் சேர்த்து வைப்பேன்'' என்று கூறினர்கள். 'கொஞ்சக் காலம் அவுலியாக்களுடன் இருந்துவருவது, உண்மையாக நூறு வருஷங்கள்வரை வணக்கம் செய்வதைக்காட்டிலும் மேலானதாகும்' என்ற பார்ஸி பைத்தின் கருத்தை அனுசரித்து நாயகமவர்கள், அவர் சொல்லியபடியே அவர்கள் சமுகத்தில் இருந்து வந்தார்கள். (இந்தச் செய்தி ஸ்வானிஹே உம்ரிலாபிரி என்னும் கிதாபில் வரு கிறது) றலியல்லாஹு அன்ஹு.

5-வது ஹிக்காயத்து:--நாயகம் அலாவுத்தீன் அலி அஹமத் ஸாபிரி, அவர்களுடைய நடையுடை பாவனைகளைப்பற்றி, ஹலரத் நிலாமுத்தீன் அவ்லியா அவர்கள் கீழ்க்கண்டபடி எழுதி யிருக் கிறார்கள்: ''நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் உயரம் நடுத்தரமானது; நிலை நேரானது; சரீரம் மென்மையானது; சிரசு உயரமானது; ரோமம் கருமையானது; செவிகள் நீட்சியுள்ளவை; நெற்றி விசாலமானது; புருவம் அடர்த்தியானது; நிமை கறுப்பா னது; முகம் விசாலித்துச் செழிப்பானது; பல் முத்துப்போல் பிர காசமானது; இடுப்பு மென்மையானது; மார்பு அகன்றது; கைகள் நீட்சியானவை; நகங்கள் பிரகாசமுள்ளவைகள்; காலின் விரல்கள் மென்மையானவைகள். அவர்கள் இடுப்பில் கட்டியிருக்கும் ஆடை யானது, அர்மனி தேசத்துப் புஷ்பசித்தில் சாயந் தோய்க்கப் பட்டதா யிருக்கும்; மேல் அங்கி எப்பொழுதும் சாயந் தோய்க்கப் பட்ட தாயிருக்கும். அவர்கள் பாக்பட்டன் என்ற ஊரில் இருக்கும்போது தலைப்பாகை அணிந்து கொண்டிருந்தார்கள்; கல்லியர், என்ற ஊருக்கு வந்தபின் தலையில் ஒன்று மில்லாதிருந்தார்கள். இன்னும் அவர்கள் காலமெல்லாம் காலில் பாதரக்ஷை அணியாமலே இருந்து வந்தார்கள்.'' றலியல் லாஹு அன்ஹு.

6-வது ஹிக்காயத்து:--நாயகம் அலாவுத்தீன் அலி அஹமத் ஸாபிரி அவர்களைப்பற்றி, ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜ்ஷக்கர் அவர்

கள் தங்களுடைய நிருப மொன்றில் எழுதி யிருக்கிறதாவது:--
"என்னுடைய அருமையான அலாவுத்தீன் அலி அஹமத்ஸாபிரீ றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் மூன்று நாள் நோன்பிருந்து காலா வது நாள் ஆகாரம் உண்பவர்களா யிருந்தார்கள். இன்னும் அவர்கள் மூன்று வருஷங்கள்வரை என்னிடம் அரபி, பார்ஸி, முதலிய கல்வி களைப் படித்து, பிக்ஹு, ஹதிஸ், தப்ஸீர் முதலிய இல்முகளிலும் தேர்ச்சி யடைந்தார்கள்; வேறே பிள்ளைகள் பதினேந்து வருஷங்கள் கல்வி கற்றாலும், இவர் இவ்வாறு மூன்று வருஷங்களில் கற்றுக் கொண்ட கல்விகளைப் படித்துக்கொள்ள முடியாது. இவர்கள், தங்களுடைய புத்தியின் கூர்மையால் இவ்வளவு சீக்கிரத்தில் மேற் படி கல்விகளைக் கற்றுக்கொண்டார்" என்பதே. இவர்கள் இவ்வாறு மூன்று வருஷங்கள்வரை அங்கிருந்து கல்விகளைக் கற்றுக்கொண்ட பின், பரீதுத்தீன் கஞ்ஜுசக்கர் அவர்களிடத்தில் பைஅத்துப் பெற் று, அவர்களால் தேய்வீக அருள் கிடைக்கப்பெற்றார்கள். அதன் மேல் நாயகம் அவர்களுடைய தாயார் நாயகமவர்களை அவ்விடத்தி லேயே விட்டுத் தங்கள் ஊருக்குப்போக நாடி ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜுசக்கர் அவர்களை நோக்கி, "நான் என்னுடைய ஹிராத் என்னும் ஊருக்குப்போக விரும்புகிறேன்; என்புத்திரர் இங்கேயே இருக்கட்டும்; 12 பனிரண்டு வருஷங்களுக்குப் பிறகு நான் ஜீவித் திருந்தால் இங்கே மறுபடியும் வந்து இவருக்குக் கலியாணம் முதலி யவை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்; நீங்கள் என் பிள்ளையின்மீது இரக்கமுடையவர்களா யிருக்கவேண்டும்; அவ ரைப் பட்டினி பசியோடு இருக்கவிடலாகாது" என்று சொன்னார் கள். ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜுசக்கர் அவர்கள் அந்த வார்த்தை களுக்கிணங்கி, தங்கள் சகோதரிக்கு முன்பாகவே, நாயகம் றலியல் லாஹு அன்ஹு அவர்களை, அழைத்துத் தாம் செய்துவந்த ஏழை எளியவர்களுக்குக் கஞ்சிவார்க்கும் கஞ்சித் தொட்டியின்மேல் விசா ரணைக் காரியத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை நோக்கி, "நான் கஞ்சித்தொட்டிக் காரியங்களை உமக்கே கொடுத்து விட்ட படியால் நாளைமுதல் நீரே அவற்றைப் பார்த்துக் கொள்ளவேண் டும்" என்று சொன்னார்கள். (இந்தக்காரியத்தை நாயகமவர்களுக் குக் கொடுத்துவிட்டால் அவர்கள் பட்டினியாயிருக்க ஏதுவிராது என்பதை உத்தேசித்தே அவர்கள் நாயகமவர்களுக்கு இந்தப் பொ றுப்பை ஏற்படுத்தினார்கள்.) இதைக்கேட்டவுடனே நாயகமவர்க ளின் தாயாருக்கு "இனி நம்முடைய பிள்ளை பட்டினி பசியோ

டிருக்கமாட்டார்' என்னும் நம்பிக்கை யுண்டாயிற்று. அப்பால் அவர்கள் தங்கள் கணவருடன் புறப்பட்டு ஹிராத் என்ற ஊருக்குப் போய்விட்டார்கள். அதே ஊரில் நாயகம் றலியல்லாஹு அன்ஹுவின் தகப்பனார் வபாத்தாகிவிட்டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

7-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுதீன் அலி அஹமத் ஸாபிரி அவர்கள் ஹலரத் பரீதுதீன் கஞ்ஜுசக்கர் றஹிமஹுல்லா அவர்களின் உத்தரவுப்படி ஹிஜ்ரி 603ஆம் ஷவ்வால்மீ 6ஆ முதல் கஞ்சித்தொட்டிமேல் விசாரணைக் காரியத்தை ஒப்புக்கொண்டு பார்த்து வந்தார்கள். அப்படிப் பார்த்து வரும்போது ஒவ்வொரு நாளி லும் காலையில் இஸ்ராக்கு தொழுகை தொழுதுவிட்டுத் தங்களுடைய அறையைவிட்டு வெளியில்வந்து கஞ்சியை ஏழைகளுக்குப் பங்கிடு வார்கள்; அதன்மேல் தம்முடைய அறைக்குள் சென்று, "அல்லா ஹும்மஜ்அல்னீ, நூரன்பீகல்பீ, வநூரன்பீகபுரீ, வ்நூரன்பீலம்இ, வநூரன்பீபஸரீ, வநூரன்பீபலரீ, வநூரன்பீஷஅரீ, வநூரன்பீ பிஷரீ, வநூரன்பீலஹ்மி, வநூரன்பீதமீ, வநூரன்பீமுஹ்கி, வநூ ரன்பீ இலாமி, வநூரன்பீமாபைனயீதை, வநூரன்மிங்கல்பி, வநூ ரன்அன்எமீனீ, வநூரன்அன்ஷிமாலி, வநூரன்மின்பவ்கி, வநூரன் மின்தஹ்தி, வஸல்லிம்ஹக்கன்" என்னும் துஆவை ஓதுவதில் மாலிவன்ர பாக்கா யிருப்பார்கள். அதன்மேல் மாலையில் மஹ்ரிபு தொழுகை தொழுதுவிட்டு அறையைவிட்டு வெளியேறி ஏழைகளுக் குக் கஞ்சியைப் பங்கிடுவார்கள். அதன்பிறகு மேற்கூறிய துஆவை உரத்த சப்தத்துடன் ஓதிவிட்டுத் தங்கள் அறைக்குச் செல்வார் கள். இப்படி யிருக்குங்காலத்தில் அவர்கள், அந்தக் கஞ்சித் தொ ட்டியிலிருந்து எதையும் எடுத்துச் சாப்பிடுகிறதில்லை. கொஞ்சக் காலத்திற்குப் பிறகு அவர்கள் அந்தக் கஞ்சித் தொட்டியின் காரி யம் கணக்குகளை இஸ்ஹாக்உடைய குமாரர் உமர் அவர்களிடத்தில் ஒப்பித்துவிட்டுக் காலைமாலை இரண்டு வேளைகளிலும் கஞ்சி வார்க் கும் நேரங்களில் மாத்திரம் கஞ்சித்தொட்டிக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

8-வது ஹிக்காயத்து:—ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜுசக்கர் அவர் களுடைய மூன்று குழந்தைகள் காலஞ்சென்று விட்டார்கள். அச் செய்தியை, நாயகம் அலாவுதீன் அலி அஹ்மத் ஸாபிரி அவர்களின் தாயாருக்கு அறிவிப்பதற்காக அலீமுல்லா அப்தால் என்பவர்

ஹிராத், என்ற ஊருக்குப்போய் அவர்களிடம் அவ்விவரத்தை அறி வித்தார். நாயகம் அவர்களின் தாயார் அச்செய்தியைக் கேட்டு வருந்தி, தங்கள் சகோதரரிடம் சென்று துக்கம் விசாரிக்கக் கருதி பாக்பட்டன், என்ற ஊருக்குப் போய்ச் சகோதரரைக் கண்டு எல் லாச் சங்கதிகளையும் விசாரித்து அவருக்குத் தேறுதல் கூறிவிட்டுத் தம்முடைய புத்திரரைப் பார்க்க அவரிடம் சென்றார்கள். அப் போது நாயகமவர்கள் ஆகாரமுண்ணுத காரணத்தால் மிகவும் மெலிந் திருந்தார்கள். அவர்களுடைய நிலைமையைப் பார்த்ததும், அவர் களின் தாயார் மனம் வருந்தித் தம்முடைய சகோதரரிடம் சென்று, "சகோதரரே! நான் முந்தியே என்னுடைய பிள்ளையைப் பட்டினி யோடிருக்கும்படி செய்யக்கூடாதென்று உம்மிடம் சொல்லிச் சென் றேன்; இப்போது அவரைப் பார்க்கும்போது மிகவும் மெலிந்து போயிருக்கிறார். இதனால் அவர் நான் இங்கிருந்து சென்ற நாள் முதல் ஆகாரமுண்ணுமலே யிருந்து வந்திருக்கின்றாரென்பது விள ங்குகின்றது. இதற்குக் காரணமென்ன?" என்று கேட்டார்கள். அதற்கு ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜ்சக்கர் அவர்கள், "நான் உங்க ளுக்கு முன்னாலேயே அவரைக் கஞ்சித்தொட்டியின் காரியத்தைப் பார்த்துக் கொள்ளும்படி நியமித்தேன்; அவர் தடையின்றி ஆகார முண்டு கொண்டிருப்பார் என்பதை உத்தேசித்தே நான் அவரை அக்காரியத்தில் அமர்த்தினேன்; அப்படியிருந்தும் அவர் ஆகா ரமுண்ணுமல் மெலிந்திருப்பதற்குக் காரணம் விளங்கவில்லை; ஆக வால் நீங்கள் அவரை அழைத்து அதைப்பற்றி அவரிடம் விசாரி யுங்கள்" என்று கூறினார். அப்படியே அவர்களுடைய சகோதரி நாயகமவர்களை அழைத்து, "நீர் தாராளமாக ஆகாரம் உண்டுகொண் டிருக்கும்படி உம்மைக் கஞ்சித்தொட்டிக்குக் காரியஸ்தராக இவர் கள் நியமித்திருந்துங்கூட நீர் இவ்வாறு ஆகாரமுண்ணுமல் மெலிந் திருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினார்கள். அதற்கு நாயகம், "இவர்கள் என்னைக் கஞ்சித்தொட்டிக் காரியத்தைமாத் திரம் பார்த்துக் கொள்ளும்படி நியமித்தார்களேயன்றி அதிலிரு ந்து கஞ்சியைக் குடிப்பதற்கு நியமிக்கவில்லை; அவ்வாறு ஆகாரம் எடுத்துண்ணும்படி உத்தரவு செய்யவுமில்லை; ஆதலால், நான் அக் காரியத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டு ஆகார முண்ணுமல் வேறுவிதமான வழியில் ஜீவித்திருந்தேன்" என்று கூறினார்கள். இதைக்கேட்டவுடன், ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜ்சக்கர் அவர்கள், தங்கள் சகோதரியை நோக்கி, "இவர், ஆண்டவனே வணங்குவதற்

காகப் படைக்கப் பட்டாரேயன்றி ஆகாரம் உண்பதற்காகப் படைக்கப்படவில்லை; இவர் பால்குடிக்கும் காலத்தில் கூட ஆகார விஷயத்தில் அலட்சியமாயிருந்ததை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்; இவர் இளமையிலேயே மிகவும் பொறுமையுடையவராக விளங்கினர் அதேபோல் இப்பொழுதும் பரிதாகங்களைக் சகித்துக் கொள்ளும் பொறுமையுடையவரா யிருக்கிறார். என்று கூறினர்கள் இதனாலேயே இவருக்கு ளாபிரி (பொறுமையுள்ளவர்) என்ற பட்டம் அதன் முதல் ஏற்பட்டிருக்கிறது."

அதன்மேல், நாயகமவர்களுடைய தாயார், தம் சகோதரரிடத்தில், நாயகமவர்களுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்று கூறினர்கள். அதற்கு ஹலாத் பரீதுத்தின் கஞ்ஜுசக்கர் அவர்கள், "அவ்விஷயத்தில் என்னால் ஒன்றும் தடையில்லை; ஆனால், அவர் ஆண்டவனுடைய தியானத்தில் மூழ்கித் தன்னை மறந்த நிலைமையிலிருக்கிறார்; இப்பேர்ப்பட்டவருக்கு எப்படிக் கலியாணஞ்செய்வது?" என்று சொன்னர்கள். அதைக்கேட்டதும் அவர்களுடைய சகோதரி, "நீர் சொல்வது ஒருவிதத்தில் சரியானதாயிருந்தாலும் கூட நான் புருஷனிலாதவளா யிருக்கிறேன்; என்னுடைய பிள்ளை எதீமாயிருக்கிறார்; ஆதலால், தங்களுடைய புத்திரியை என்மகனுக்கு விவாகம் செய்துகொடுத்தால் எங்களுக்குதவியா யிருக்கும்" என்று சொன்னர்கள். அதன்மேல் ஹலாத் பரீதுத்தின் கஞ்ஜுசக்கர் அவர்கள் அப்படியே தமது புத்திரியை நாயகமவர்களுக்கு விவாகம் செய்துகொடுக்க இசைந்தார்கள். பின்பு ஹிஜ்ரி 613-ஷவ்வால்மீ 21உ புதன் கிழமை மஹரிபு தொழுகையின் பின்னல் நாயகமவர்களுக்கு விவாகம் நிறைவேறியது. அன்றிரவு வழமைப் பிரகாரம் பெண் மாப்பிள்ளை இருவரும் ஒரு அறையில தனித்திருந்தார்கள். நாயகம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அன்றிரவு முழுதும் அந்தப் பெண்ணைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் இபாதத்திலேயே பராக்காயிருந்து (தஹஜ்ஜுத்) தொழுதுவிட்டு அதன்மேல் அந்தப் பெண் இருப்பதைப் பார்த்துவிட்டு 'நீ யார்?' என்று கேட்டார்கள். அந்தப் பெண்மணி கைகட்டி நின்றுகொண்டு, 'நான் தங்களுடைய மனைவி' என்று சொன்னர்கள். அதற்கு நாயகமவர்கள், "அல்லாஹுதஆலா இணைதுணையில்லாமல் தனித்தவனாயிருக்கிறான்; நானும் அவ்வாறே இருக்க விருப்பமுற்றவனா யிருக்கிறேன்; ஆதலால் நீ என்னைவிட்டு நீங்கியிருப்பது உத்தமம்" என்று சொன்னர்கள்: அந்தப்பெண்மணி அவ்வாறே ஆண்டவனுடைய வணக்கத்திலிரு

ந்து சிலகாலில் கர்லமாகிவிட்டார்கள். அப்பால் நாயகமவர்களுடைய தாயாரும் ஹிஜ்ரி 614வது வபாத்தாகிவிட்டார்கள். அதன்மேல் நாயகமவர்கள் ஒன்பது வருஷங்கள் வரையில் அந்த அறையைவிட்டு வெளியில வராமலே யிருந்தார்கள். நபியல்லாஹு அன்ஹு.

9-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுதீன் அலி அஹ்மத் ஸாபிரி அவர்கள், சகலவிதமான உயர்ந்த பதவிகளையும் பெற்றிருந்தார்கள். அப்படி அவர்கள் அடைந்திருந்ததை, ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜ-சக்கர் அவர்கள் அறிந்து அவர்களுக்குத் தங்களுடைய ஜிஷ்தியா, தரீகாவில் கலீபத் ஸ்தானத்தை கொடுத்து அதற்குரிய கிர்க்கவென்னும் பரிவட்டத்தையும் போர்த்தினார்கள். அதுமுதல் இரவுகளில் நாயகமவர்களுக்கு ஜதுபுடைய ஹால் நின்றுவிட்டது. பின்பு அவர்கள் பகற்காலங்களில், ஹலரத்பரீதுத்தீன் கஞ்ஜ-சக்கர் அவர்களின் திருச்சன்னிதானத்திலிருந்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்களிடம் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நல்லருளைப் பெற்று வந்தார்கள். மேலும் அவர்களுக்கு அநேகம் கலீபாக்களும் இருந்தார்கள். நபியல்லாஹு அன்ஹு.

10-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுதீன் அலி அஹ்மத் ஸாபிரி அவர்கள், ஹலரத் பரீதுத்தீன் கஞ்ஜ-சக்கர் நஹ்மதுல்லா அவர்களின் உத்தரவின்படி (கல்லீபர்) என்ற ஊருக்குப் புறப்பட்டுப் போனார்கள். அங்குப் போய்ச் சேர்ந்தவுடன் அவர்களுக்குத் தோழமையிலிருந்த அலீமுல்லா அபுதால்; என்பவர், அவ்வூராரிடத்தில், நாயகம் அவர்களைக் குறிப்பிட்டு "இன்று ஹிந்து இராஜ்ஜியத்திற்கு குத்துபானவர் இங்கே வந்திருக்கிறார், ஆகலால் நீங்கள் அவரிடத்தில் சென்று (பைஅத்) உபதேசம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லிப் பிரசுரம் பண்ணினார். அப்படி அவர் சொன்னதை எவரும் செவியில் ஏற்றுக் கொள்ளவுமில்லை; நாயகம் அவர்களிடத்தில் போய் (பைஅத்) பெற்றுக் கொள்ளவுமில்லை; அப்பால் அலீமுல்லா அப்துதால் என்பவர் நாயகம் அவர்களுடன் அவ்விடத்திலுள்ள ஜாமிஆ மஜீதுக்கு ஆஹர்வத்தில் சென்று அங்கிருந்த ஜனங்களுக்கு நாயகம் அவர்களைச் சுட்டிக்காட்டி "எனது சகோதரர்களே! நீங்கள் இவர்களிடத்தில் பைஅத் பெற்றுக் கொள்ளுங்கள் அதனால் உங்களுக்கு நன்மை உண்டாகும்" என்று சொன்னார். அவர்களும் அவருடைய வார்த்தையை எடுத்துக் கொள்ளவில்லை. அதன்மேல் அவர் நாயகம் அவர்களைப்பற்றிய விஷயங்களை அவ்வூர்

நவாபு சாஹிப்புக்குத் தெரிவித்தார். அந்த நவ்வாபு சாஹிபுக்கும் காஜி நாயகம் அவர்களைப்பற்றி அப்போது அலக்ஷியமாக கூறியபடியால் அவரும் அலிமுல்லா அப்தாலின் வார்த்தையை அலக்ஷியம் செய்து விட்டார். அதனால் நாயகம் அவர்களுக்கு சிறிது மனக் கொதிப் புண்டாயிற்று. அதனால் முன்னிட்டு உடனே அங்குள்ள பூமி அசைய ஆரம்பித்து, ஏழுமுறை அதிகமாக ஆடிற்று. அவ்வாறுகளே அவ்வூரிலுள்ள ஜனங்களெல்லோரும் திகிலடைந்து, காஜியிடத்தில் ஓடி "இங்கு வந்திருக்கும் பெரியோருக்கு நாம் மரியாதைக்குறைவு செய்படியினாலேயே இந்த ஆடுத்து உண்டாயிருக்கிறது" என்ற முறையிட்டார்கள். அதற்கு காஜிப நீங்கள் சொல்லும் காரணத்தால் இது நேர்ந்ததல்ல, அவர் ஒரு மந்திரக்காரர், அந்த மந்திரத்தின் வலிமையினாலே இதைச் செய்திருக்கிறார்; இதற்காக நீங்கள் பயந்து உங்களுடைய ஈமானை பரிகொடுத்து விடாதீர்கள்; என்று சமாதானங் கூறினான். அதன்மேல் நாயகம் அவர்கள் மஜ்ஜீதுக்குப் போனார்கள். அங்கே ஜனங்கள் ஜமாஅத்தாக தொழுது கொண்டிருந்தார்கள். மேற்கூறிய காஜிருக்கூவு செய்துகொண்டிருந்தார். அப்போது நாயகம் அவர்கள் அந்த மஜ்ஜீதை நோக்கி "நீயும் ருக்குவு செய்வாயாக என்று கட்டளை யிட்டார்கள். உடனே அந்த மஜ்ஜீத்தானது மேல்பாகம் கீழாகவும், கீழ்பாகம் மேலாகவும் மாறி தாழ்ந்துவிட்டது. அப்போது அங்கு கூடியிருந்தவர்களும், ஊரிலுள்ள மற்ற ஜனங்களும் பயந்து மரணக் கூக்குரலிட்டார்கள். அந்த சமயத்தில் மேலும் ஆகாயத்திலிருந்து ஒரு நெருப்பு ஜ்வாலை தோன்றி நாயகம் அவர்களை அலக்ஷியமாக எண்ணினவர்களை யெல்லாம் சுட்டுச் சாம்பலாக்கி விட்டது. மிஞ்சியிருந்தவர்கள் நாயகம் அவர்களிடத்தில் வந்து வணங்கி பைஅத் பெற்றுக் கொண்டார்கள். தலியல்லாஹ் அன்ஹு.

11-வது ஹிக்காயத்து:—நாயகம் அலாவுத்தீன் அலி அஹமத் ஸாபிரி அவர்களுக்கு ஆயிரக்கணக்கான மூரீதுகள் எற்பட்டிருந்தார்கள். அப்படியிருக்குங்காலத்தில நாயகம் அவர்களுக்கு ஆண்டவனிடம் சேருங்காலம் சமீபித்திருந்தது. அவர்கள் அதனை உணர்ந்து தங்களுடைய ஒவ்வொரு மூரீதிடத்திலும் "எனக்கு வபாத்தாகிற காலம் நெருங்கிவிட்டது; நான் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை யெல்லாம் செய்துவிட்டேன். நீங்கள் வணக்கத்திலேயேயிருந்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டு சில தினங்களுக்குப் பிறகு கடினமான வியாதிக்குள்ளாகி ஹிஜ்ரி 690-வது

வருஷம் ரபியுல்அவ்வல் மாதம் 13-ம்தேதி கல்லியர் என்ற ஊரில் வபாதாதாகி ஆண்டவரிப் பக்கலில் சேர்ந்து விட்டார்கள். அப்போது அங்கிருந்த அவர்களுடைய முரீதின்களும், மற்ற மஷாயக்கின்களும் அவர்கள் காலஞ் சென்றதைப்பற்றி மிகவும் மனம் வருந்தினார்கள். அதனமேல் அவர்களுடைய மையத்தை ஜனங்கள் அடக்கம் செய்வதற்கு தூக்கிக்கொண்டு போகுங்காலத்தில் அப்தால்கள், அகுதாப்கள், ரிஜாலுல்கைப், என்னும் அவுலியாக்கள் முதலியவர்களும் கூடச் சென்றார்கள் பின்னர் அந்த கல்லியர் என்ற ஊரிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய தர்காஷரிபில் ஒவ்வொரு வருஷத்திலும் ரபிஉல்அவ்வல் மாதம் 11-தேதி முதல் 14-ம்தேதி வரையிலும் உரூஸ் அலங்காரம் வெகு சிறப்புடன் நடந்து வருகின்றது அந்த உரூஸுக்காக பஞ்சாப் முதலிய பற்பல தேசங்களிலிருந்து அளவற்ற ஜனங்கள் வந்து ஜியாரத்து செய்து மேலான அருளைப்பெற்றுப் போகிறார்கள்.

முதற்பாகம் முற்றிற்று.

———



அட்டவணை.

பக்கம். விஷயம்.

1. முகவுரை

2. நாயகம் காஜா குதுப்புத்தீன் றலியல்லாஹு அன்ஹு வரலாற்றில் பேசும் பிரிவு.

14. சுல்தான் ஷம்சுத்தீன் பாதுஷாவின் வரலாற்றைப்பற்றிப் பேசும் பிரிவு.

23. நாயகம் ஷேக்பரீதுத்தீன் கஞ்சுசக்கர் றலியல்லாஹு அன்ஹுவின் வரலாற்றைப்பற்றிப் பேசும் பிரிவு.

33. நாயகம் நிலாமுத்தீன் அவ்லியாவின் வரலாற்றில் பேசும் பிரிவு.

40. அமீர்குஸ்ரவ், சரித்திர வரலாற்றில் பேசும் பிரிவு.

42. நாயகம் காஜா கலிருத்தீன் மஹ்மூத்சோஷன் ஷிராக் அவர்களின் வரலாற்றில் பேசும் பிரிவு.

46. நாயகம் காஜா செய்யிது முகம்மது பந்தாநவாஸ் கைசூதராஸ் றலியல்லாஹு அன்ஹுவின் சரித்திரத்தில் பேசும் பிரிவு.

67. நாயகம் அலாவுதீன் அஹமத், ஸாபிரி, ஜிஷ்தி, றலியல்லாஹு அன்ஹு அவர்களின் வரலாற்றில் பேசும் பிரிவு.

18334